இசைநாடகக் கவிக்குயில்

# வி.கே. இரத்தினம்



ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்

Giree Graphic

அன்பளிப்பு.

# இசை நாடகக் கலிக்குயில்

# சந்திரமதி வி. கே. இரத்தினம்

## ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்

தாரணி பதிப்பகம்
[மனோகரா சந்தி]
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Title :- Issai Nadaka kavikkuil Chandramathi V.K.Ratnam

Author :- Ariyalaiyoor S. Sivathasan (Former Manager, Marketing Department)

Longuage :- Tamil

Edition :- 21 - 07 - 2001

Copy Right :- Author

Size :- $\frac{1}{8}$ Demy ( 21.5cm X 14cm )


Puge :- XIX + 100

Printer and Puflisher :- Tharani Printers
(Near Monokara Junction)
K.K.S. Road, Jaffna
Sri Lanka

Price :- 100/=

# சமர்ப்பணம்

யாழ்ப்பாணம் அரியாலை
ஸ்ரீ கலைமகள் நாடகசபாவின்
தந்தையும். கலைஞர் சோகச் சோபித
சொர்ணக்கவிகுயில் திரு.வி.கே.இரத்தினம்
அவர்களை நாடறியும் நற்கலைஞனாக
மிளிர வைத்தவருமான காலஞ்சென்ற
நீலன் செல்லக்கண்டு அவர்களுக்கு.........



உ

சிவமயம்

# ஆசியுரை

பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்னன் ஐயர்
தலைவர் இந்து நாகரீகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

எமது பிரதேசத்தின் கலைமரபையும் மற்றும் அத்துறை சார்ந்த கலைஞர்களையும் பற்றி அறியக் கூடியவாறு ஆவணப்படுத்துவது காலத்தின் கட்டாய தேவையாகும். எமது பிரதேச கலை வரலாற்றினை அறிய இத்தகைய முயற்சி பெரிதும் துணைபுரியவல்லது. அத்துடன் எமது பிரதேச கலைமரபின் தனித்துவத்தை அறியவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.அத்தகைய முயற்சிகளில் ஒன்றாக' இசை நாடகக் கவிக்குயில் சந்திரமதி வி.கே.இரத்தினம் என்ற தலைப்பில் நூலாக அரியாலையூர் சி.சிவதாசன் அவர்களது ஆக்கமாக வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகி ன்றோம். அரியாலையூரைச் சேர்ந்த இசைநாடகக் கலைஞர் வி.கே. இரத்தினம் சிறந்ததொரு கலைஞராவார். நாடகத் துறையைப் பொறுத்தவரை அனுபவம் மிக்கவர். நட்டுவாங்க செயற்பாடுகளிலும் வல்லவர்.நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இணைந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் பெண்பாத்திரமேற்று நடித்தார். எனவே "சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில்" எனப் பாரட்டப் பட்டார் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் இக்கலைஞர் இசை மரபுவழி நாடகத்தை இன்றுவரை பயிற்றுவிக்கும் பணியில் தம்மை இணைத்துக் கொண்டார். இத்தகைய அனுபவமிக்க கலைஞரது கலையுலக அனுபவங்கள் நாடகமரபு, நாடகங்களின்மேடையேற்றம், நாடகத்துறைக்கு இக்கலைஞரது பங்களிப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக முப்பத்தி மூன்று இயல்களில் இந்நூல் வெளிவருகிறது.நாடகத்தைப்பற்றி எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு இந்நூல் வழிகாட்டி நிற்கின்றது.

இந்நூலாசிரியர் திரு.சி.சிவதாசன் அவர்களும் கவிதை, சிறுவர் கதை ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர். எனவே இசை நாடகக் கலைஞர் வி.கே.இரத்தினம் பற்றிய நூலின் வழி இசைநாடகத்துறை பற்றிய பல்வேறு விடயங்களை சிறப்பாகத் தொகுத்து வழங்கியுள்ளார். இத்துறை சார்ந்த ஆர்வலர்களுக்கு நன்கு பயன்படத்தக்க இந்நூலை எழுதிய அரியாலையூர் சி.சிவதாசன் கலையுலக அன்பர்களின் பாராட்டிற்குரியவராகின்றார்.

இந்நூலாசிரியர் இது போன்ற மேலும் பல பயனுள்ள நூல்களை ஆக்கி வெளியிட்டு எமது பிரதேச கலைப் பாரம்பாரியத்தின் மேன்மையை உலகறியச் செய்வதற்கு அவருக்கு சகல நலன்களும் கிட்டும் வண்ணம் எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருளை முன்வைத்து நல்லாசிகள் வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம.

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்,

திருநெல்வேலி.

29-07-2001

# ஆசியுரை

இசை நாடகக் கவிக்குயில் சந்திரமதி வி.கே. இரத்தினம் அவர்களது கலை பரிமாணங்கள், கலைப்பங்களிப்புக்கள், கலைவாழ்வின் முத்திரைகள் முதலியவற்றை ஆவணப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தேவையை அரியாலையூர் சி.சிவாசன் அவர்கள் தமது ஆற்றல் மிகு எழுத்தாக்கப் பலத்தால் செப்பமும் செழுமையும், உறுதியும் கொண்ட மொழி நடையால் நிறைவேற்றித் தந்துள்ளார்.

எமது கலைப்பாரம்பரியத்தில் இசை நாடகங்கள் பங்கு சமூகவியல், சமூக உளவியல், சடங்கொடுக்குமுறைகள், சமூக அதிகாரவைப்பு முறைமை முதலிய பல கோணங்களில் ஆராயப் பட வேண்டும்மென்ற அறிக்கை விசையை ஊட்டுவதில் திரு சிவதாசனுடைய முயற்சி பளிச்சிடாக வந்து வெற்றி தந்துள்ளது.

ஆண்கள் பெண்வேடம் தாங்கி கலை விசைகளை உருவாக்குதல் தமிழ்ப் பாரம்பரியத்தில் நெடிது வேரூன்றியிருந்தாலும், சந்திரமதி வி.கே.இரத்தினம் அவர்களின் பங்களிப்பு தனித்துவமான கலைச் சுவடுகளைப் பதித்துள்ளமை திரு.சிவதாசனுடைய எழுத்துக்களிலே நுண்ணியதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தமது நீண்டகால எழுத்தாக்க அனுபவங்களைப் பயன்படுத்தி பொருண்மை கொண்ட கலைவரலாற்றுப் பதிவுகளை வரன்முறையாகத் தொகுத்துத் தந்துள்ள திரு.சி.சிவதாசனுடைய பணிகள் பாராட்டுக்குரியவை. ஆற்றுக்கைக் கலைஞர்கள் தொடர்பான புறநிலை மேம்பாடு கொண்ட ஆய்வுகள் பல்கலைக் கழக மட்டங்களிலே முன்னெடுக்கப்பட்டு வரும் இன்றையபடிமலர்ச்சி நிலையில் இந்நூலாசிரியருக்கு நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல தகவல்களை உள்ளடக்கிய பயனுள்ள நூலாக்கத்தை தந்த ஆசிரியரின் எழுத்துப்பணிகள் பாராட்டுக்குரியவை.

பேராசிரியர்

சபா.ஜெயராசா
கல்வியியல் துறை
தலைவர், இராமநாதன் நுண்கலை
நடனத்துறை

யாழ்ப்பாணப்
பல்லைக்கழகம்
14-07-2001

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகச் செயலாளர்
செல்லையா – மெற்றாஸ்மயில் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இலங்கையின் இசைநாடக வரலாற்றில் முக்கிய இடத்தைப்பிடித்து, பெண்பாத்திரம் ஏற்று நடித்து புகழ்பூத்த, அரியாலையூர் வி.கே. இரத்தினம் அவர்களின் அனுபவங்கள் "இசைநாடக கவிக்குயில் சந்திரமதி வி.கே.இரத்தினம்" என்னும் நூலாக உருப் பெற்று வெளியாவதையிட்டு பெருமகிழ்ச்சியடைபவர்களுள் நானும் ஒருவனாவேன்

இசை நாடகவரலாற்றினை ஆராயும் நாடாக அரங்கியல் கற்கும்மாணவர்கள், ஆர்வலர்கள், ஆதாரபூர்வமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள இந்நூல் மிகவும் உறுதுணையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை

இந்நூலினை வாசிக்கும்போது,பல சுவையான சம்பவங்களைக் கொண்ட கதையை வாசிக்கும் ஓர் உணர்வையும் தருகிறது

நடிகன் தயாரிப்பாளன்,ஒழுங்கமைப்பாளன், எதிர்நோக்கும் பல பிரச்சினை குறிப்பிடப்பட்டமை மிகவும் பிரயோசனமான அம்சமாகும். அந்த வகையில் இந்நூலில் இடம் பெற்றுள்ள, எனது கவனத்தை ஈர்த்த சில சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்

ஒரே நாடகம் இருகுழுவிரால்,அல்வாய் கிராமத்தில் மேடையேற்றப்பட்டபொழுது முதலில் தோன்றய "கலைஞர் இரத்தினம்அவர்கள் பாடிக்கொண்டிருக்கும் பொழுது மின்சாரம் தடைப்பட்டு போனது. விசில் சத்தங்கள் எங்கும் குவிந்தன.

.. திருமலையில் ஐந்து நாட்கள் மேடையேற்றம் செய்ய ஒழுங்கு செய்து நடிகர்களைத் கொண்டுசெல்ல தட்டிவான் வந்து நிற்கிறது. ஆனால் ஆர்மோனியம் வாசிப்பதற்கென வரும் உரும்பிராய் பிலிப் என்பவரும், மிருதங்கம் இசைப்பதற்காக காங்கேசந்துறை வி.வி.காசிநாதர் என்பவரும்....ஒழுங்குசெய்யப்பட்டிருந்தர்கள

. . . . . . . . . . . . . . . . . . . .

தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஆர்மோனியம் பிலிப்பு அவர்கள் குழுவினருடன் வரமுடியாதெனக் கைவிரித்துவிட்டார்.

1944ம் ஆண்டு யாழ் மாநகரசபையினால் ஒழுங்குசெய்த பொங்கல் விழாவுக்கு "கோவலன் கண்ணகி" நாடகத்தில் நடிப்பதற்காக நடிகமணி வி.வி.வைரமுத்துவும் அவரது சக நடிகர்களும் அங்கு வந்தபோதும் கண்ணகி வேடத்தில் நடிக்க இருந்த இணுவில் கனகரத்தினம் அவர்கள் அங்கு வந்து சேரவில்லை. நாதஸ்வர இசை முடிந்ததும் நாடகத்தை தொடக்க முடியாத நிலையில் வி.வி.வைரமுத்து அங்குமிங்குமாக அவஸ்த்தைப் பட்டுக் கொண்டிருந்தார்.

மேற்படி பிரச்சினைகள் ஏற்பட்ட பொழுது நாடக ஒழுங்கமைப்பாளரும், நாடகத்தை நிகழ்த்த ஒப்புதல் அளித்த பிரதான நடிகனும், எவ்வாறு இப்பிரச்சினைகளை தீர்த்துள்ளார்கள் என்பது இந்நூலில் சிறப்பாகக் கூறப்படுகின்றது.

இன்நூலில் கலைஞர் வி.கே.இரத்தினத்தை பறிறிய செய்திகள் மட்டுமல்லாது கடந்த 75 ஆண்டுகளில் இசை நாடகத்தில் சிறந்து விளங்கிய, கலைப்பணி ஆற்றி கலைஞர்களின் ஆற்றுகைச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன . இக்காலங்களில் இசைநாடகத்திற்காக தொண்டாற்றிய, சபைகள் அரங்குகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. ஆதரவு அளித்தவர்களுடைய பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இசைநாடகங்கள், சரித்திர நாடகங்கள் உட்பட ஏறத்தாழ 30 நாடகங்களில் கலைஞர் இரத்தினம் நடித்ததுடன், அவருடன் இணைந்த கலைஞர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று இந்நாடகப்பிரதிகளில் பலகிடைக்க அரிதாக உள்ளன. சந்திரமதி இரத்தினம் அவர்கள் வெறும் நடிகன்மட்டுல்ல. <u>நாடகப்பிரதி எழுத்தாளன், நாடகக்கலைஞன், நாடக நெறியாளன்,</u> என்பதை எல்லாம் இந்நூல் மூலமாக அறியமுடிகிறது.

எத்தனையோ கலைஞர்கள் இந்த மண்ணில் கலைத்தொண்டு செய்துவிட்டு, மண்ணோடு மண்ணாக மறைந்து விட்டார்கள். அவர்களின் வரலாற்றைத் தேடுகின்றோம் சரியான தகவல்கள் பெறுவது கஷ்டமாகவுள்ளது. இன்னும் வாழ்ந்து கொண்டு,பல கலை அனுபவங்களைப் பெற்று இருக்கின்ற கலைஞர்கள் தமது அனுபவத்தை நூலாக உருவாக்க பொருளாதார வசதி இல்லாது இருந்தார்கள். இசைநாடகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த கலைஞர்களில் "நடிகமணி"
வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்" என்ற நூலின் மூலம் பல தகவல்களைப் பெற்றுள்ளோம். அரியவையூர் சி.சிவதாசன் அவர்களினது முயற்சியால் "இசை நாடக கவிக்குயில் சந்திரமதி வி.கே.இரத்தினம் " என்னும் நூலை கையில் பெறவுள்ளோம்.

இந்நூல் இசை நாடக அரங்கில் நடிகனின் கதை கூறும் நூல்: பார்வையாளர்களின் ஆர்வத்தையும், ஆதரவையும் *ONCE MORE* கூறிநடிகர்களின் நடிப்பினை வளர்த்த கதையையும் கூறும் நூல், நாடக அமைப்பாளரின் பிரச்சனைகளையும், சமாளிக்கும் திறமைகளையும் எடுத்தியம்பும் நூல், இசைநாடகத்துறையை வளர்க்க பாடுபட்ட பெரியவர்களின் வரலாறு கூறும் நூல், அரங்கினில் அரங்கேறிய நிரலான நாடகங்களின் பெயர்களைக் கொண்ட நூல், ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுகளின் யாழ் மண்வாசனை கமழும் நால், இவை எல்லாவற்றிற்கும் மேலாக அரியாலையூர் மக்களின் கலையார்வத்தை, கலை அர்ப்பணிப்பை, கலைப் பாரம்பரியத்தை விழித்து நிற்கும் நூல்.

எனவே இந்நூலின் கதாநாயகன் சந்திரமதி வி.கே.இரத்தினம் அவர்களையும், அவரது கலைப் பணியைக் கருப்பொருளைக் கொண்டு இந்நூலினை சிறப்புற ஆக்கிய திரு.சி.சிவதாசனையும், இந்நூலை வெளியிட உதவிய ஏனைய ஆர்வலரையும், உறவினரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கலைப்பணியாளன்
செ.மெற்றாஸ்மயில்
யாழ்ப்பாணம்.
27.07.2001.

# முகவுரை

## "இசைநாடக உலகில் ஓர் இரத்தினம"

"இசை நாடகக் கவிக்குயில் சந்திரமதி வி.கே.இரத்தினம்" என்னும் இன் நூலுக்கு முகவுரை எழுதும்போது தென்னிந்திய பிரபல எழுத்தாளர் கொத்தமங்கலம் சுப்பு அவர்களின் ஞாபகம் என் கண்முன்னே தோன்றி நிக்கிறது. அவர் எழுதிய "தில்லான மோகனாம்பால்" என்னும் நாவலில் ஒரு அத்தியாயத்தில் யாழ்ப்பாண மக்களின் கலாரசனையைப்பற்றி மிகஅழகாக வர்ணித்துள்ளார். அவர் திறமை மிக்க கவிஞராகவும் திகழ்ந்தவர் யாழ்ப்பாண மக்கள் ஒரு கலை நிகழ்ச்சியைப் பார்த்து தரமானதோ?தரமற்றதோ?என விமர்சனம் சொல்வார்களேயானால் அது சரியான தீர்ப்பாகவே அமையும். அத்தனை சிறப்புவாய்ந்த கலாரசனை மிக்கவர்கள் அவர்கள் என கூறியுள்ளார். அதே போலவே இந்நூலாசிரியரின் கூற்றும் அமைந்திருக்கிறது கலைஞர் சந்திரமதி வி.கே.இரத்தினம் அவர்கள் வாழ்ந்த ஊரின் சிறப்புப் பற்றி கூறும் போது நாடகக் கலையை ரசிப்பதில் அரியாலை மக்களுக்கு நிகர் அரியாலை மக்களே என எடுத்துக் கூறியுள்ளார். இது சாலவே பொருந்தும்

எங்கள் மண்ணில் எங்களிடையேவாழ்ந்த லால்பகதூர் சாஸ்த்திரியை மானசீககுருவாகப் போற்றி வணங்கிய காலம் சென்ற கலைஅரசு சொர்ணலிங்கம் அவரோடுசேர்ந்து நாடகங்கள் நடித்தவரான இலங்கை வனொலி புகழ் "சானா" என அழைக்கப்படும் காலம் சென்ற சண்முகநாதன் "மாதவிமடந்தை" என்னும் நாடக நூலினை எழுதியவரும் ஆங்கில மொழி நாவல்களைமொழி பெயர்ப்பு செய்தவருமான அரச சேவை அதிகாரி காலம் சென்ற இலங்கையர்கோன் சிவஞானசுந்தரம் போன்றவர்களால் பாரட்டி புகழ் பெற்ற பெருமைக்குரியவரான கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் "இசைநாடக உலகில் ஓர் இரத்தினம்" என்பது மிகப்பொருத்தமானதொன்றே.

நான் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் பல கலைஞர்களோடு நாடகம் நடித்ததுமல்லாமல் நெருங்கிப் பழகியவனும் கூட மரபுவழிஇசைநாடகக் கலைஞர்கள் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் நாடக நடிப்புத்துறையில் அவர்கள் எவ்வாறு நன்றாக மதிக்கப்பட்டார்களோ? அவ்வாறு நிஜவாழ்க்கையில அவர்கள் மதிக்கப்படவில்லை. காரணம் அவர்களிடமிருந்த தீயபழக்கவழக்கங்களேயாகும்". ஆனாலும் ஒரு சிலர் அதற்கு விதிவிலக்கானவர்கள் அவர்களுள் கலைஞர் வி.கே.இரத்தினமும் ஒருவர். நல்ல குணாதிசயங்களைக் கொண்ட இக்கலைஞர் மெல்லிய உள்ளம்கொண்டவர். கர்வம், தலைக்கனம் சிறிதேனும் இல்லாதவர். எல்லோரிடமும் அன்பாகப் பழகுபவர். நாடகத்திற்கும் ஒரு கணக்குண்டு. செயற் படுமிடத்து ஆதீதமில்லாத அளவாகச் செயற்படும் ஆற்றல் நிறையப் பெற்றவர். அதனால் இக்கலைஞரை "அனுபூதிமான்" எனச்சொல்வது மிகையாகாது.

யாழ்ப்பாணத்து மரபுவழி இசைநாடக வரலாற்றில் "அரிச்சந்திர மயான காண்டம்" நாடகம் மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இதற்கு அரிச்சந்திரனாக நடித்த நடிகமணி வி.வி.வைரமுத்துவை மட்டும் காரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அவரோடு பெண் சந்திரமதியாக நடித்த கலைஞர் வி.கே.இரத்தினத்தையும் காரணகர்த்தாவாக கொள்ளவேண்டும். அதுமிகவும் உண்மையானது ஏன்? பெண்களுக்கான நளினம் லயம் குரல்வளம் மென்மை நடிப்பாற்றல் இவை அனைத்தும் கொண்ட குணசித்திர நடிகராக இவர் திகழ்ந்துள்ளார். அதுமட்டுமல்லாது தன்னோடு மரபுவழி இசைநாடகம் நின்றுவிடாமல் பல கலைஞர்களை இத்துறையில் பயிற்றுவித்துள்ளார். சமகாலத்தில் இசைநாடகத்துறையில் கொடிகட்டிப்பறக்கும் திரு.வி.செல்வரத்தினம், திரு. சாந்தன் போன்ற கலைஞர்களை உருவாக்கியும் தந்துள்ளார். இவற்றை நோக்குமிடத்து நூலாசிரியர் கூறும் கூற்றுக்கள் அனைத்தும் சரியானதாகவே உள்ளது.

இறுதியாக இந்நூலானது கலைஞர் சந்திரமதி வி.கே.இரத்தினம் அவர்களின் நாடக நட்டுவாங்க வரலாற்றினை படம்போட்டு காட்டுவதாக நின்றுவிடாமல் "நாடகமும் அரங்கியலும்" என்னும் பாடத்திணைப் படிக்கும் உயர்தர பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவும் நூலாகவும் அமைகின்றது..

ஏ.ரி.பொன்னுத்துரை

இல.28, மணற்தறை லேன்,
கந்தர் மடம்,.
யாழ்ப்பாணம்.
19-06-2001..

# அணிந்துரை

அரிய கலையூர் எனப்போற்றப்படும் அரியாலையூர் இசை நாடகக் கவிக்குயில்" சந்திரமதி வீ.கே.இரத்தினம் எனும் நூலுக்கு அணிந்துரை வழங்கவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூலை அரியாலையூர் சி.சிவதாசன் அவர்கள் ஆக்கியுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தின் சிறப்பாக அரியாலையின் கலை வளர்த்தையும் சந்திரமதி வீ.கே.இரத்தினம் அவர்களின் கலைத்திறனையும் இந்த நூல் எமக்கு விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

நல்லூரை இராசதானியாகக் கொண்டு ஒன்பதாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் உக்கிரசிங்கன் மகன்- வாலசிங்கன் என்பான் யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்டபோது சோழ நாட்டிலிருந்து வந்த பிறவிக்குருடனான யாழ்ப்பாணனுக்கு அவன் கலைத்திறமைக்கு பரிசாகக் கொடுத்த மணல்திடல் அரியாலைதான் என்றும், அதுவே பின்னர் யாழ்ப்பாணம் எனும் பெயர் பெற்று யாழ்.மாவட்டம் முழுவதற்கும் பெயராயிற்று. என்றும், இதன் ஆசிரியர் நிறுவியுள்ளார். இதற்குச் அங்குள்ள பாணன் குளமும், பாணனின் கலை மரபில் அன்று முதல் இன்று வரை அவ்வூர் அரியகலையூராகத் திகழ்வதும் சிந்திக்கத்தக்க சான்றுகளாகக காட்டப்பட்டுள்ளன

இந்த நூல் பெருங்கலைஞனாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் வீ.கே.இரத்தினம் அவர்களின் கலை வாழ்வு பற்றிய வரலாற்றுநூல்

இதனை ஒரு வரலாற்றுக் கட்டுரையாக இல்லாமல் அரியகலைப் படைப்பாக சுவைத்துப் படிப்பதற்குரிய கலைப்பாங்குடன் ஒரு நவீனம் போல எழுதி இருப்பதும், ஒரு கலைஞன் வாழும் போதே அவனுடைய கலைத்திறமையை, சாதனைகளை ஆவணப்படுத்தி அக்கலைஞனை முழுமையாக இளம் சமுதாயத்தினர்க்கு அறிமுகப்படுத்தும் இந்த நூல் ஆசிரியரின் தூய, உயர்ந்த நோக்கு முன்மாதிரியான பாராட்டப்பட வேண்டிய செயல் ஆகும்.

அத்துடன் இக்கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் பிரவேசித்த காலம் முதல் இக்காலம் வரை எவ்விதம் மாற்றம் பெற்று வந்தது என்பதை இந்நூல் இக்கலைஞரின் ஊடாக அறியத்தருகின்றது

வெறும் செய்திகளாக இல்லாமல் யதார்த்தமான தரிசனங்களாகக் காட்டப்படுவதும் சிறப்பம்சம் எனலாம். உதாரணமாக அரியாலையின் கலைச் செழுமைக்குச் சான்றாக வாழ்ந்த இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர்கள் பலர் அவர்கள் ஏற்ற பாத்திரப் பெயர்களாலே அழைக்கப்படுவதைக் காட்டுகின்றார். அல்லிபரமு, அர்ச்சுனன் தம்பிப்பிள்ளை, பவளக்கொடி கந்தையா, குறத்தி சின்னையா, முத்துமாரி. கதிராமு. காத்தான் கந்தையா போன்ற கலைஞர்களுடன் இந்நூலின் கதாநாயகன் சந்திரமதி வீ.கே.இரத்தினம் அவர்களையும் நாம் தரிசிக்க முடிகிறது.

பெண் பாத்திரத்தையே தன் பெயருக்கு அடைமொழியாகப் பெற்று "சந்திரமதி". வி.கே.இரத்தினம் எனப் போற்றப்படும் இக்கதாநாயகன் பெண் பாத்திரமேற்று இரசிகர்களை மெய்மறக்க வைத்த சுவையான செய்தி உள்ளத்தைத் தொடுவதாயுள்ளது. திருகோணமலை கணேசன் தியேட்டரில் அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபாவின் நான்கு நாடகங்கள் அரங்கேற இருந்த வேளை பெரிய "போஸ்டர்" விளம்பரங்கள் நகரெங்கும் ஒட்டப்பட்டன. அதில் பெண்பாத்திரத்தில் நடிப்பவர் செல்வி.வி.கே.இரத்தினேஸ்வரி என்று அச்சிடப்பட்டிருந்தது. அந்தக்காலத்தில் பெண்கள் நாடக மேடையில் நடிக்கும் வழக்கம் இல்லை. அதனால் பெண்ணே நடிக்கிறார் என்று அறிந்த மக்கள் திரளாக வந்து இவரது நடிப்பில் தம்மை மறந்து வண்ஸ்மோர்" சொல்லி காசைலேஞ்சிகளில் முடிந்து அவருக்கு எறிந்து குதூகலித்த செய்தி இக்கலைஞனின் கலைத்திறனுக்குக் கிடைத்த பரிசு என்பதை ஆசிரியர் சொல்லும் முறை மிகச் சிறப்பாயுள்ளது.

பெண் பாத்திரத்தை வெற்றிகரமாக நடிப்பவர் எந்தப் பாத்திரத்தையும் வெற்றிகரமாக நடிப்பார். என்பதற்குச் சான்றாக இக்கலைஞர் நடித்த ஆண்வேடங்களின் வெற்றியையும் இந்நூலில் தருகின்றார்.

கலைஞர் வீ.கே.இரத்தினத்தின் கலைப்பணி கூறும் இந்நூலில் அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபாவின் சாதனைகளையும், இக்கலைஞர் காலத்தில் வாழ்ந்த எண்ணில்லாத கலைஞர்களின் வரலாறுகளையும் நாம் தரிசிக்க முடிகின்றது. அதனால் இந்த நூல் ஒரு உண்மையான கலைப் படைப்பு, நாடகக் கலைக்குக் கிடைத்த ஒரு சிறந்த பங்களிப்பு எனக் கூறுவது மிகையாகாது

இந்நூலின் ஊடாக இந்த நூலின் ஆசிரியரையும் நாம் இனங்காண முடிகின்றது. இப்பிரதேசத்தின் கலைவளங்கள், வரலாறுகள், கலைநுட்பங்கள், மக்கள் சமுதாயத்தில் நாடகக்கலை ஏற்படுத்திய தாக்கங்கள், கலைஞர்களின் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்கள் என்பவற்றையெல்லாம் வரலாற்று நோக்கில் கலைஉணர்வு கொப்பளிக்கத் தனக்கேயுரிய செவ்விய மொழி நடையில் சுவைபடத்தந்திருக்கும் இந்நூலாசிரியர் அரியாலையூர் சி.சிவதாசன் அவர்கள் பாராட்டுக்குரியவர். இது ஒரு கலை சார்ந்த நவீனம் எனல் பொருந்தும். சிறந்த நவீனத்தைப் படிக்கும் உணர்வையும் ஒரே மூச்சில் படித்து முடிக்க வேண்டும் எனும் மன உந்துதலையும் தரும் இப்படைப்பு போற்றத்தக்கது. மட்டுமல்ல எதிர் காலத்தில் பல பாராட்டுக்களையும் பெறும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலின் மூலம் கதாநாயகனும் நூலாசிரியரும் சிரஞ்சீவிகளாய் வாழ்வர் என்பதையும் சொல்லாலமல் இருக்க முடியவில்லை.

மருதனார்மடம்
சுன்னாகம்
01.07.2001.

வீ.இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம்.

# பதிப்பாசிரியரின் உரை

மரபு வழி இசை நாடகத்துறையின் முன்னோடியான முது பெரும் நாடகக் கலைஞர் அரியாலையூர் சோகச்சோபித சொர்ணக்கவிக்குயில் திரு. வி. கே. இரத்தினம் அவர்களின் நாடக அரங்கப்பிரவேசம் முதல் இன்றுவரை நாடகக் கலையின் வளர்ச்சிக்காக முன்நின்று செயற்படும் செயற்பாடுகளை விளக்கிக்கூறும் இந்நூலை அச்சிட்டு வெளிக்கொணருவதை யிட்டு தாரணிபதிப்பகத்தாராகிய நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்நூலின் ஆசிரியரின் "வேப்பமரத்தடிப்பேய்" என்னும் சிறுவர் நவீனம் நூலாக வெளிவந்துள்ளது.சிறந்த கவிதைகளை ஆக்குவதில் வல்லவரான இவர் வீரகேசரி வாரவெளியீட்டில் தொடர்ந்து எழுதிய "அதிசயப்பறவை" என்னும் சிறுவர் நவீனம் பலரின் பாராட்டுதலை பெற்றது இந்நவீனம் இன்னமும் நூலுருவில் வெளிவரவில்லை. இந. நூலினையும் அச்சிடும் பாக்கியம் எமக்குக் கிடைக்கலாம் என எதிர்பார்க்கிறோம்.

ஈழத்துப் பத்திரிகைகளில் புகழ்பூத்து வரும் இவ் வெழுத்தாளருக்கு இன் நூலானது இன்னும் புகழை தரக்கூடியது. அவரின் வெற்றிக்கு நாமும் வாழ்த்து தெரிவிக்கின்றோம்.

திரு.திருமதி.சிவானந் ராஜி
( பதிப்பக உரிமையாளர்கள் )

உ
கலைவாணி துணை

# நூலாசிரியரின் உரை

தொலைக்காட்சி சாதனம், கணனி ஆகியவற்றின் வருகையினால் உலகம் மாறுபட்ட வளர்ச்சிப்பாதையில் முன்னேறிக்கொண்டிருக்கும்போது, அவ்வாறான முன்னேற்றப் பாதையில் முன்னேறிவரும் புதிய சமுதாயத்திடம் எம்மவரின் பாரம்பரிய நாடகக் கலை வடிவங்களை, சாதனைகள் படைத்த கலைஞர்களின் செயற்பாடுகளை நூலுருவில் வழங்கி பழைய வரலாற்றுப் பதிவுகளை அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதே என்பேரவா.

இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் கலைத்துறையின் செயற்பாடுகளை அக்காலப்பிரிவில் வாழ்ந்த, இந்த மிலேனியம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டுமிருக்கும் அரியாலைக்கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களின் அரங்க அனுபவங்களையும், நட்டுவாங்கச் செயற்பாடுகளையும் முன்கொணர்ந்து அதன் மூலம் அக்கால மரபுவழி இசைநாடக வரலாற்றினையும், யாழ்ப்பாண மாவட்ட கலாநிகழ்வுகளையும் இந்நூலின் மூலம் உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலின் ஆக்கத்திற்கு முன்னின்று உழைத்தவர்கள், விபரங்கள் தந்துதவியவர்களை என் நெஞ்சம் மறவாது. இந்நூலுக்கு ஓவியம் வரைந்த யாழ் – பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவன் திரு வ.வித்தியாபரன் அவாகளுக்கும், நூலை அழகுற அச்சிட்டு மிகக்குறுகிய காலத்தில் தந்துதவிய தாரணி பதிப்பகத்தாருக்கும் என் நன்றிகள்

மேலும் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய பெருமதிப்புக்குரிய பேராசிரியர்கள் சபா.ஜெயராசா, பி.கோபாலகிருஸ்ண ஐயர் ஆகியோருக்கும், வாழ்த்துரை நல்கிய பாரம்பரிய கலைபண்பாட்டுக் கழகத் தலைவர் திரு.செல்லையா மெட்ராஸ்மெயில் அவர்களுக்கும், முகவுரை வழங்கிய கலாபூஷணம் திரு.ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களுக்கும், அணிந்துரை அளித்த வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் என் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய திரு.வீ.இராசையா அவர்களுக்கும்., என்னை அறிமுகம் செய்யும்பணியை அழகுற ஆக்கித்தந்த

என்னில் வயதில் இளையவரும் அறிவில் ஆற்றலுள்ளவருமான திருமதி மீரா அருள்நேசன் அவர்களுக்கும் என்றென்றும் என் நன்றிகள்.

இந்நூலின் ஆக்கப் பிரதியைத் திருத்தம் செய்து உதவிய திரு யோ.ஜெயக்குமார் B.A அவர்களுக்கும், என்னுடன் சகல விதத்திலும் இந்நூலின் பிரசவத்திற்காக உதவிய கலைஞரின் குடும்பத்தினருக்கும், யாழ் பல்கலைக் கழக விரிவுரை யாளர் திரு.பீ.கணேசலிங்கம் அவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்

அரியாலையூர் சி. சிவதாசன்

இல.58, கனகரத்தினம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

# வாழ்த்துரை

**எமது குடும்பத் தலைவரும் இந்நூலின் நாயகனுமாகிய
கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களையும்**

**இந்நூலின் மூலம் எம் தந்தையாரின் நாடக நட்டுவாங்க
நற்பணியை நூலுருவில் ஆக்கித்தந்த அரியாலையூர்
சி.சிவதாசன் அவர்களையும் எம்மனம் மிக மகிழ வாழ்த்துகிறோம்**

☆ மனைவி செல்வமணியுடன் ........

☆ வைகுந்தவாசன் அன்னலட்சுமி குடும்பத்தினர்

☆ வரதராசா இரஞ்சினிதேவி குடும்பத்தினர்

☆ நேத்திரானந்தம் கமலினிதேவி குடும்பத்தினர்

☆ வசந்தவாசன் நிர்மலா குடும்பத்தினர்

☆ வதனவாசன் கௌரி குடும்பத்தினர்

☆ அன்பரசன் இராகினிதேவி குடும்பத்தினர்

# மணக்கும் மலர் மணங்கள்

1. அரிய கலையூர்
2. சந்திரமதி இரத்தினம்
3. ஸ்ரீ கலைமகள் நாடகசபா
4. கலைமகள் நாடகசபாவின் செயற்பாடும் கலைஞர் இரத்தினத்தின் பங்களிப்பும்
5. மேடையில் இணைந்த கலைஞர்கள்
6. கதாநாயகர்களும், அவர்கள் பற்றியும் கலைஞர் வி.கே.இரத்தினம்
7. வசந்தகான நாடகசபாவில் வி.கே.இரத்தினம்
8. ஒரே மேடையில் ஒரே நாடகம்
9. சுபத்திரை ஆழ்வாரின் சந்திப்பும் ஆசியும்
10. வன்னியில் நாடகவிழா
11. சோகச் சோபித சொனர்ணக் கவிக்குயில்
12. கூவிலில் நாடகமும் ஒரு புதிய கலைஞனின் வருகையும்
13. களியாட்ட விழாக்களில் இசைநாடகங்கள்.
14. சாவகச்சேரி (பா.உ) நவரத்தினத்துடன் சிரித்துப் பேசிய பெண்
15. தென்னிந்திய திரைப்பட நடிகர் மல்லியம் இராசகோபாலின் ஏமாற்றம்
16. இரத்தினம் கத்தியால் குத்திப் போட்டான்
17. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நாடகவிழா
18. சந்தர்ப்பத்தில் உதவிய நடிகர்
19. கலைஞர் இரத்தினமும் அவர் மேடையேறிய அரங்குகளும்
20. நட்டுவாங்கத்தின் ஆரம்பம்
21. கைதடியில் சூழ்ச்சிவலை நாடகப் பயிற்றுவிப்பு
22. ஒரு நாடகக் கலைஞனின் வேண்டுகோள்
23. வெள்ளி விழாவில் பாமா விஜயம்
24. காத்தி சனசமூக நிலையக் கலைஞர்களுக்கு.......
25. கல்லூரிகளில் தனியார் கல்வி நிலையங்களில் நாடகப் பயிற்றுவிப்பு
26. அரிசந்திரனாகப் புதிய பாடகர் ஒருவர்
27. பண்டாரவன்னியன் கதை இசைநாடகமாகியது
28. சாரங்கதரன் நாடக மேடையேற்றம்
29. தீர்க்கசுமங்கலி
30. கலைஞரைப் பெரிதும் வாட்டிய புற்றுநோய்
31. மறக்கமுடியாத நிகழ்வுகள்
32. பாரம்பரியகலைபண்பாட்டுக் கழகம்
33. நிறைவுரை



கலைஞர் வி.கே.இராத்தினம் அவர்களின் இளமைத்தோற்றம்

மலர்மணம் !

# "அரியகலையூர்"

கீழ்த்திசையிலிருந்து எழில் மிகு யாழ்ப்பாண நகரினை நோக்கி பிரயாணம் செய்வோமானால் உயர்ந்த கம்பீரமாக நிற்கும் அழகிய நுளைவாயில்க் கோபுரத்தினை நாம் காணலாம். "யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கின்றது" என எழுதப்பட்டிருக்கும் இக் கோபுர வாயிலைக் கடந்து ஒரு சில அடிகள் முன்னோக்கிக் கால்பதிப்போமாகில் வட திசையில் ஈழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும் உப்பு விளை நிலமும், கிழக்கே பருவப்பெருமழையை நம்பி நெல்விளைவிக்கும் களனித்தரைகளும் ஆங்காங்கே வானத்தை எட்டிப்பிடித்து விடுவோம் என வளர்ந்து நிற்கும் பனைமரங்களும் வடலிகளும் உயர்ந்து சிறு சிறு பிட்டிகளாகக் காட்சிதரும் வெண்மணற்றிடர்களும் நிறைந்து காணப்படும் மிக அழகிய கிராமம் ஒன்றினை நாம் காணலாம்.

யாழ்ப்பாண மாநகர சபையின் கிழக்கு எல்லையாகத் திகளும் இக்கிராமம் யாழ் மாநகர சபையின் பெரும்பாகத்தினையும் கிழக்கே நல்லூர் பிரதேச சபையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய தற்போதைய உள்ளூராட்சி அமைப்பின் கீழ்க் கொண்டபிரதேசமாகும் ஏறக்குறைய பத்து சதுர கிலோமீற்றர் பரப்பளவாகவும் இருபதினாயிரம் தமிழ்ப்பேசும் மக்கள் வாழும் வசிப்பிடமாகவும் அமைந்த பிரதேசமாகும் இவ்வழகிய அமைப்பினைக்கொண்ட கிராமத்தின் பெயர் அரியாலையாகும் தமிழ் மக்கள் போற்றி வழிபடும் சைவப் பேராலயங்களும் ஆங்காங்கே ஒரு சில கிறீஸ்தவ ஆலயங்களும் பிரசித்தி பெற்ற அரசாங்கப் பாடசாலைகளும் நிறையக் காணப்படும் இக் கிராமம் பற்றிய சரித்திரச் சான்றுகள் பல உள. இருந்தாலும் மிகப்பெரும் சான்றுடன் நிருபணமாகும் வரலாறு ஒன்றினை நாம் இங்கு நோக்கின் அதன் பெருமை சொல்லுந்தரமன்று.

யாழ்ப்பாணத் தமிழ் இராட்சியத்தின் இராசதானியாகஅக்காலத்தில் நல்லூர் இருந்ததாக சரித்திர ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள் .தற்போது நல்லூரில்க் காணப்படும் சான்றுகளை நாம் நோக்கின் அக்கூற்று உண்மை என்பதை ஏற்றுக்கொள்ளலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் காலப்பகுதியில் உக்கிரசிங்கனின் மகன் வாலசிங்கன் என்பான் யாழ்ப்பாண இராட்சியத்தைப் பரிபலித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிட்டுள்ளது இந்த வாலசிங்கன் ஆட்சிபுரியும் காலத்திலே பாரதப் பெருமண்ணின் சோழநாட்டிலிருந்து இரண்டுகண்களும் குருடான யாழ்ப்பாணன் என்பான் மரக்கலமேறி தான் இயற்றிய பாடலைப்பாட யாழ்ப்பாண இராட்சியம் நோக்கிப் புறப்பட்டு வந்தான். அந்த யாழ்ப்பாணனால் வாலசிங்க மன்னனைக்காண முடியவில்லை அந்தக்காலத்தில் மன்னர்கள் பிறவிக் குருடர்களை கான விரும்புவதில்லை.

அதேபோலவே யாழ்ப்பாணன் வாலசிங்க மன்னனைக் காணவிழைந்த போது மந்திரிகளால் தடுக்கப்பட்டான். யாழ்ப்பாணன்தான் மன்னவனைக் காணாமல் இவ்விடம் விட்டு அகலப்போவதில்லை எனப் பிடிவாதமாக நின்றபடியால் நிலைமையை மந்திரிகள் வாலசிங்கமன்னனுக்குக் கூற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் நிலைமையை மந்திரிகள் வாயிலாக அறிந்த வாலசிங்கமன்னன் யாழ்ப்பாணனின் இசைப்பாடலைக் கேட்பதற்கு ஒரு ஒழுங்கினை மேற்கொண்டான் மன்னன் வாலசிங்கன் தான் அமர்ந்திருக்கும் அரியாசனத்திற்கும் சபாமண்டபத்திற்கும் இடையே திரைபோட ஏற்பாடுசெய்து யாழ்ப்பாணனை சபாமண்டபத்தில் அமர்ந்து யாழ் இசைத்துப் பாடும்படி செய்தான். மன்னன் தன் முன்னே திரைபோட்டிருக்கின்றான்என்பதைப் பிறவிக் குருடனான யாழ்ப்பாணன் தன் அகக் கண்களால் உணர்ந்து மன்னனை நோக்கி பின்வருமாறு பாடலானான்.

"நாரைகோட்டினங்கன்று நல்வள நாடு
நயந்தனிப்பான் விரையூட்டும் தார்புய வெற்பீழ
வீமமன்னனென்றே விரும்பிக் கரையோட்டமாக
மரக்கலம் போட்டுனைக் காணவந்தால்
திரைபோட்டிருந்தனையோ வாலசிங்க
சிகாமணியே "

ஓ! வாலசிங்க மன்னவனே உன்னைக் காணவேண்டும் யாழ்இசைத்து உன்னைப்புகழ்ந்து பாடி மகிழவேண்டும் என நான் அக்கரையிலிருந்து மரக்கலமேறி வந்தேன். ஆனால் நீரோ என்னைப் பார்க்காமல் திரை போட்டிருப்பதேனோ? என யாழிசைத்துப் பாடினான். மன்னன் வாலசிங்கன் தான் செய்த செயலுக்காக வருந்தினான். உடனே தன் முன் இடப்பட்ட திரைச்சீலையை விலக்கினான் புலவரே நின் பாடலில் என் பிழையை நீர் பாடினீர் கண்கள் இரண்டும் குருடானபோதும் தங்கள் அகக்கண்ணால் என் பிழையை உணர்த்திப் பாடியுள்ளீர் நின் புலமையை நான் மெச்சுகிறேன் உமக்கு என்ன வேண்டுமோ? அதைக் கேளுங்கள் நான் கொடுக்கிறேன் என்றான். "பேரன்புக்குரிய பெருவேந்தே! என்ன வேண்டும். என்பதை நான் உங்களிடம் வேண்டுவதை விட அதனை நீங்கள் விரும்பித் தருவதே மேல்" எனச்சமயோசிதமாகப் பதிலளித்தான் யாழ்ப்பாணன். மன்னன் மிக்க மகிழ்ந்து பல பெறுமதியான பரிசில்களை வாரிவழங்கினான் மேலும் நல்லூரின் கிழக்கே பரந்து பெரு நிலப்பரப்பாக இருந்த வெண்மணற்றிடரையும் அவனுக்கு அன்புடன் வழங்கினான். மன்னன் வாலசிங்கனின் பெருந்தன்மையை மதித்து அவனை வணங்கிய பாணன் சோழநாட்டிலிருந்து தனது மனைவி, மக்கள் உறவினர்களை அழைத்து வந்து அப்பெருநிலப்பரப்பில் வாழ்ந்து வந்தான். அந்த யாழ்ப்பாணன் வாழ்ந்த இடத்தில் பெரிய குளமொன்று இருந்தது அது இன்று அழிந்த நிலையில் இருந்தாலும் அவ்விடத்தை இன்றும் பாணன்குளம் என்றே எல்லோரும் அழைத்து வருகின்றார்கள். பிறவிக்குருடனான யாழ்ப்பாணன் யாழிசைத்துப் பரிசு பெற்ற பெருநிலப்பரப்பே அரியாலையாகும்.

அதனாலன்றோ! இம்மண்ணில் பலதுறைகளிலும் சிறந்து விளங்கும் அறிஞர்களும், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் முறையாகப் பேணிக்காக்கும் அதியுயர்ந்த கலைஞர்களும் இன்று வரை வாழ்ந்து வருகின்றார்கள். இந்த அரியாலை மண்ணின் பெரும் சிறப்பினைத் தனது நகைச்சுவை மாதாந்த ஏடான சிரித்திரன் பத்திரிகையில் விபரித்துக் கூறவந்த அதன் ஆசிரியர் பெருமதிப்புக்குரிய திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் அரியாலை என்று இக் கிராமத்தை அழைப்பதிலும் பார்க்க "அரியகலையூர்" என்று அழைப்பதே சாலப் பொருத்தமானதாகும் என விதந்து குறிப்பிட்டுள்ளார்.

## மலர்மணம் 2

## "சந்திரமதி இரத்தினம்"

யாழ்ப்பாணத்தில் இவ்வரிய கலையூராகிய அரியாலைக் கிராமத்தில் கல்வி கற்றுக் கல்விமான்களாகத் திகழ்ந்தவர்கள் எமது நாடாகிய ஈழத்திருநாட்டில் நிர்வாகத்துறை, மருத்துவத்துறை, நீதித்துறை, நிதித்துறை போன்ற துறைகளில் மேன்மையுற்று விளங்கிய அதே சமயத்தில் கல்விகற்கக்கூடிய ஆற்றல் இருந்தும் ஏழ்மை நிலைகாரணமாக அதனைத் தொடரமுடியாத நிலையிலும் படிப்பு வாசனையின்றி வேறு தொழிற்துறைகளைப் பின்பற்றி வந்தவர்கள் பலர் கலைத்துறையின் ஈடுபாடு காரணமாக அத்துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் அவர்களிற் சிலர் தனியே இசைத்துறையிலும் இயற்துறையிலும் மேன்மையுற்று மேன்நிலை அடைந்துள்ளார்கள். இருந்தும் இயலும் இசையும் இணைந்து விளங்கும் நாடகக்கலையினை பலர் பின்பற்றி வந்த போதும் ஒரு சிலரே இக் கலையின் மூலம் நாடறிந்த கலைஞர்களாக மிளிரமுடிந்தது. படிததறிந்தவர்களாலும், பாமரமக்களாலும் விரும்பப்படும் இக் கலையின் மூலம் பல பெரும் சாதனைகளை அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள்.

பார்ப்போரின் இதையங்கில் பசுமரத்தாணி போல் பதியக்கூடியதும அவர்களது உள்ளமதைக் கொள்ளை கொள்ளக் கூடியதுமான இந் நாடகக் கலையினை அரியாலை மக்கள் தம்கிராமத்தில் ஆரம்பகாலங்களில் பல்வேறு சமூக அமைப்புக்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்தார்கள். அக்காலத்தில் இசையையே மக்கள் கூடுதலாக விரும்பினார்கள். அதன் காரணமாக கூத்துக்களை இசைமுறையிலேயே ஆடிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் கூத்தாடிகளுக்கு ஏற்பட்டது. இவ்வகையான கூத்தினை "இசைக்கூத்து" என்றே அவர்கள் அழைத்தார்கள். இக்கூத்துக்களை இயக்கி நெறியாள்கை செய்தவர்களை அண்ணாவிமார்கள் என்று அழைத்தார்கள். ஆதனால் அண்ணாவிமார்களின் பெயர் முன்சொல்லப்பட்டு அவரின் பெயரிலேயே (அவரின் பெயர் முன்னும் நாடகத்தின் பெயர் பின்னுமாக) கூத்துக்கள் நடாத்தப்பட்டு வந்தன. காலப்போக்கில் சினிமாவின் வருகையினால் கூத்துக்களை நவீன மயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் இந்த

அண்ணாவிமார்களுக்கு ஏற்பட்டது இந்நிலையிலேயே இசையுடன் இயலும் சேர்ந்து நவீன மயப்படுத்தப்பட்ட கூத்துக்களை நாடகங்கள் என மக்கள் அழைக்கலாயினர். அவர்களிடையே இந்நாடகங்கள் நல்ல வரவேற்பினைப் பெற்றது.

இக்கால கட்டத்தில் ஈழத்தமிழ்ப் பிரதேசமெங்கும் நல்ல நாடகங்களை மக்கள் பார்த்து மகிழக் கூடிய வாய்ப்புக்கள் கிட்டின. தென்னிந்திய சினிமாவிற்கு நிகராக மக்கள் நாடகங்களையும் இரசிக்கத்தொடங்கினர். அரியாலை மக்களும் காலம் காலமாக கூத்துக்களையும் பின் நவீன மயப்படுத்தப்பட்ட நாடகங்களையும மெடையேற்றி வந்தார்கள் இந்த அரியாலை மக்கள் நாடகங்களை இயக்கி ஆடுபவர்களாக மட்டுமல்லாது கலையார்வம் மிக்க இரசிகர்களாகவும் விளங்கியுள்ளார்கள் தமக்குப் பிடித்தமான நாடகங்களை பல முறை மேடையேற்றிப்பார்த்து மகிழ்வதில் இவருக்கு நிகர் இவர்களாகவே திகழ்ந்தார்கள். இவ்வரிய கலை மண்ணின் மற்றுமொரு சிறப்பு என்ன வென்றால் நாடகங்களில் தோன்றும் கதாபாத்திரங்கள் அந்தந்தப் பாத்திரப் படைப்புகளுக்குகேற்ப நடித்துச் சிறப்புற்றால் அக்கலைஞர்களை அப்பாத்திரப் பெயர் கொண்டே அழைப்பார்கள் அவ்வாறு அழைக்கப்பட்ட கலைஞர்கள் மறைந்த போதும் அவர்களின் வாரிசுகளை அறிமுகப்படுத்தும் போது அக்கலைஞரின் பாத்திரப் பெயர்களைக் கொண்டு இன்னாரின் வாரிசு எனக் கூறுவதை நாம் இன்றும் இம் மண்ணில்க் காணலாம்.

இவ்வாறு நாடகப் பெயர்களால் அழைக்கப்பட்ட கலைஞர்கள் அரியாலையில் பலர் இருந்திருக்கிறார்கள் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுள் அல்லிப்பரமு, அருச்சுனன் தம்பிப்பிள்ளை, பவளக்கொடி கந்தையா, குறத்தி சின்னையா, முத்துமாரிக் கதிராமு, காத்தான் கந்தையா போன்ற கலைஞர்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவ்விதம் பெயர்பெற்ற இக்கலைஞர்கள் ஆடியவை சங்கீத (இசை)க் கூத்துக்களேயாகும் காலத்தின் தேவைக்கேற்ப மக்களின் இரசனைக்கேற்பக் கூத்துக்களை நவீனமயப்படுத்திய முன் கூறியவாறுஇயலும் இசையும் இணைந்து கலப்புற்றன. இவ்வாறு நவினமயப்படுத்தப்பட்டவை நாடகங்கள் எனப் பெயர் பெறலாயின. புராணக்கதைகளைக் கூறும் நாடகங்கள் புராண இதிகாச நாடகங்கள் எனவும் சரித்திர வாயிலாக அரச கதைகளைக் கூறுவன சரித்திர நாடகங்கள் எனவும் சமூக வரலாறுகளை மையமாக வைத்துப் புனையப்பட்ட கதைகள் சமூக நாடகங்கள் எனவும் அழைக்கப்பட்டவாயின இவ்வாறு நவீன மயப்படுத்தப்பட்ட நாடகங்கள் வாழ்க்கை வரலாற்று முறைகளை மக்கள் மனதில் புடம் போட்டுக் காட்டின இதன் நோக்கில் மக்களைக் கவரும் விதத்தில் 1941க்குப் பின் அரியாலையில் மட்டுமல்ல பல்வேறு யாழ்ப்பாணக் கிராமங்களிலும் புதுப்புது வடிவம் பெற்று நாடகங்கள் மேடையேற்றப்பட்டன அப்பொழுது தான் நாடகங்களின் தேவையை நாடு நன்கு அறிந்தது. படிக்காதவர்களும் மட்டுமல்லாது படித்தவர்களும்.நாடகங்களைத் தயாரித்து வழங்க முற்பட்டார்கள். வெறும் "கூத்தாடிகள் என்று வர்ணிக்கப்பட்ட கலைஞர்கள் போற்றப்பட்டார்கள், கௌரவிக்கப்பட்டார்கள் அவ்வாறு கௌரவம் பெற்று உயர்வுற்று பலராலும் அரியாலையூரான் அரியாலைக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து இன்றுவரை நாடகமே உயிரென வாழ்ந்து வருபவரும் தான் நடித்த பாத்திரத்தின் பெயரால் அழைக்கப்பட்டு வரும் கலைஞர்தான் இந்த "சந்திரமதி இரத்தினம் " அவர்கள் ஆவார். அவர்களின் நாடக அனுபவங்கள் பற்றியும், சாதனைகளைப் பற்றியும் ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும்.



## "ஸ்ரீ கலைமகள் நாடகசபா"

சந்திரமதி இரத்தினம் அவர்களின் நாடக அனுபவங்கள் சாதனைகள் பற்றி ஆராய முற்படும் பொழுது அவர் சார்ந்த ஸ்ரீகலைமகள் நாடகசபா பற்றி ஆராய்வது மிக அவசியமாகின்றது அரியாலையின் மேற்குப் பகுதியில் வாழ்ந்த ஒரு சிறிய சமூக அமைப்பினைக் கொண்ட மக்கள் கல்வியறிவில் பின்தங்கியவர்களாக வாழ்ந்தாலும் உடல் உழைப்பினால் மேம்பாடுடையவர்களாக வாழ்ந்தார்கள். இவர்கள் பொழுது போக்கிற்காக ஓய்வு நேரங்களில் இசைப்பாடல்களை எழுதுவதும் அவற்றை இசைக்கூத்து வடிவமாக்கி மேடையேற்றுவதையும பொழுதுபோக்காக் கொண்டிருந்தார்கள். அக்கால கட்டத்தில் கூத்து ஆடுபவர்கள் மன்றங்களையோ சபாக்களையோ ஏற்படுத்தாத நிலையில் அண்ணாவிமாரின் பெயர்கொண்ட குழு அமைப்பின் பெயரிலேயே கூத்துக்களை ஆடிவந்தார்கள். இவ்வாறு குழு அமைத்துத் தானே நட்டுவாங்கம செய்து அரியாலை மேற்குப் பகுதியில் முதன் முதலில் சிறுத்தொண்டன் என்னும் வரலாற்று இசைக்கூத்தினை நிகழ்த்தியவர் சின்னச்செல்லையா என்பவர் ஆவார் இந்த இசைக்கூத்தில் நீலன் செல்லக்கண்டு, வ. சண்முகம், நீலன்இராசு, வ. ஏரம்பு ஆகியவர்களும் அவர்களோடு அப்பொழுது சிறுவனாக இருந்த அரியாலையூர்க் கலைஞர் வே. ஐயாத்துரை அவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்தச் சிறிய சமூகத்தின் எழுச்சிக்காக வைத்திய கலாநிதி திரு. எம். வி. முருகேசு அவர்கள் அரும்பாடுபட்டார் முற்போக்கு எண்ணம் கொண்ட இவர் 1935ம் ஆண்டு இச் சிறிய சமூக மக்களை ஒன்றிணைக்கச் சங்கம் ஒன்றினை ஆரம்பித்தார் மேலும் இவர் தூதன் என்ற பெயரில் அச்சுப்பத்திரிகை ஒன்றினையும் வெளியிட்டு வந்தார். அவ்விதம் இப்பெரியார் சமூகமேம்பாட்டிற்காக முன்னின்று செயற்பட்ட பொழுது திரு சின்னச் செல்லையா என்பவரும் குட்டிக் கந்தையா என்பவரும் இரு வேறு குழுக்களாக இசைக் கூத்துக்களை ஆடிவந்தார்கள் குட்டி கந்தையா மிகப் பெரிய குரல்வளம் மிக்கவர். ஒலிபெருக்கி வசதி இல்லாத காலத்தில் இவர் தம் குரல் வளத்தினால் மக்களைக் கவர்ந்தார். இவர் அக்காலத்திலாடிய காத்தான் சிந்து வழி இசைக் கூத்தினைக்காண பெரும் சனக் கூட்டம் திரண்டு வந்ததாக அறிகிறோம். இவ்வாறு இருவேறு குழுக்களாக இசைக்கூத்துக்களை ஆடிவந்த இவ்விருவராலும் இச்சமூக மக்கள் முன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டார்கள. சமூக, முன்னேற்றத்திற்கு கல்வியறிவும்பண்பாடுகள் மட்டுமல்லாது கலையும் ஒரு சிறந்த ஊடகம் என்பதற்கு இச் சிறிய சமூக மக்களின் முன்னேற்றமும் ஒரு எடுத்துக்காட்டாகும

காலம் பலப் பல மாற்றங்களோடு முன்னோக்கிச் சென்று கொண்டிருந்து. தென்னிந்திய சினிமாக்களின் வருகை மக்களைக் கவரத் தொடங்கியது இக் காலகட்டம் 1942க்குப் பின் ஏற்படத் தொடங்கியது முன்சென்ற அத்தியாயத்தில் கூறப்பட்டது போல கூத்துக்களை மாற்றி இசையும் இயலும் கலந்த நாடக வடிவங்களை மக்கள் முன் கொண்டுசெல்லவேண்டிய காலத்தின் கட்டாய தேவை ஏற்பட்டது. இதன் நோக்கினை அடிப்படையாகக்
கொண்டு பல நாடக மன்றங்கள் ஈழத்தின் வட பகுதியெங்கும் தோன்றின தாம் இணைந்து வாழும் சமூகங்களுக்கான நாடகமன்றங்களை அமைத்து அம்மன்றங்களுக்கூடாக நாடகங்களை மேடையேற்றத் தலைப்பட்டார்கள். யாழ்ப்பாண மாவட்டமெங்கும் அவ்விதம் மாற்றங்கள் தோன்றுவதைக் கண்டு அரியாலைவாழ் மக்களும் மன்றங்கள் பலவற்றைச் சமூக அமைப்பின் ரீதியாகத் தோற்றுவித்தார்கள் இக் காலகட்டத்தில் அரியாலை மேற்கில் வாழ்ந்த நீலன் செல்லக்கண்டு என்பார் சிந்திக்கத்தொடங்கினார். அவர்சார்ந்த சிறிய சமூகத்தவர்களின் கலைவளத்தினை நன்கறிந்த அவர் நன்கு இசைவளம் பொருந்திய நல்ல கலைஞர்களை ஒன்று திரட்டி தாமும் ஒரு நாடகமன்றத்தினை அமைத்தாலென்ன? என்ற முடிவிற்கு வந்தார்.

அப்பொழுது இளம்பராயத்தினராக இருந்த அரியாலையூர் கவிஞர் ஐயாத்துரை இனிய குரலோடு பெண்கள் போன்று குரல் இசைக்க வல்லவராயிருந்த கலைஞர் இரத்தினம் இவர்களோடு இன்னும் கலையார்வம் மிக்க இளைஞர்களை ஒன்றிணைத்து "அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபா" என்ற பெயரில் நாடகமன்றம் ஒன்றினை ஆரம்பித்தார். இந்த நாடகமன்றமே இயலும் இசையும் ஒருங்கே இணைந்த நல்ல நாடகங்களை பிற்காலத்தில் மேடையேற்றி கலையுலகிற்கு நல்ல பல கலைஞர்களை உருவாக்கித்தந்த பெருமைக்குரியது என்பதில் எதுவித ஐயமுமில்லை. இந்தச்சந்தர்ப்பத்தில் ஒன்றினை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது. அரியாலையில் முப்பெரும் நாடகக் கலைஞர்களான கவிஞர் வே. ஐயாத்துரை கலைஞர். வி. கே. இரத்தினம் காத்தான் கந்தையா ஆகியோரைக் கௌரவித்து வெளியிடப்பட்ட "கலைப்புகழ் விழா மலரில்" "அரங்கு பல கண்ட அரியாலை இரத்தினம்" என அவரைப்பாராட்டி அவரோடு பல நாடகங்களை மேடையேற்றிய நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள் எழுதிய வாசகங்களை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது

" கலைஞர் இரத்தினத்தை" 1943ம் ஆண்டு யாழ் மாநகர மண்டபத்தில் நடைபெற்ற "சதி நந்தாவதி" என்னும் நாடகத்தில் பார்க்கிறேன். இவர் அந்த நாடகத்தின் கதாநாயகியான பெண் வேடத்தில் தோன்றினார் பாடினார், ஆடினார், நடித்தார், நடனம் ஆடினார் அக் காலத்தில் சினிமாவின் தாக்கம் நாடக மரபை அவ்வளவாக பாதிக்கவில்லை அவர் இக்கால சினிமாவில் நடிகர்களைப் பின்பற்றி "இரவல் குரல் ஏற்காமல் தாமாகவே சகல துறைகளிலும் நாடக இணக்கத்துடன் சுயமாக இயங்கி நடித்து இற்றைவரை நாடகத்து

இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கலைஞர் ஆவார். அவர் இற்றை வரை புரிந்துவரும் கலைத்தொண்டினையும் அவர் சிறப்பினையும் இம் மலரில் எடுத்துக்காட்டுவது எனது கடமையாகும். அக்காலத்தில் நான் பெண் பாத்திரமேற்று நடிப்பதும் பக்கவாத்தியம் வாசிப்பதும் எனது கடமையாக ஏற்றுச் செயற்பட்டேன். கலைஞர் இரத்தினம் "அரியாலை கலைமகள் நாடக சபாவின்" ஆரம்பகால உறுப்பினர் கலையின் பெயரால் கலைமகளுக்குக் கோவில் கட்டிக் கலை வளர்க்கும் கவிஞர் ஐயாத்துரையின் மைத்துனராகவும், அவரின் குடும்பமே ஒரு கலைஞர் கூடமாகவும் விளங்கும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார். இவரின் மாமனார் அமரர் செல்லக்கண்டு நாடகப் பாடல்கள் எழுதுவார் இவரின் சகோதரர்கள் ஆசிரியர் பாலசிங்கம் செல்லத்தம்பி இவர் மருமகன் வரதராசா ஆகியோர் நாடகக்கலை வல்லுனர்களாகவும் இசைக்கலைஞர்களாகவும் விளங்குகின்றார்கள். ஆகவே இரத்தினத்தின் குடும்பமே கலைக்குடும்பம் என்பதில் கலைஞர் இரத்தினம் பாராட்டப்படவேண்டியவர். மேலும் நாடகமேடைகளில் இன்று பிரபலமாக விளங்குகின்ற "ஸ்பெஷல்" நடிகர் அரியாலை செல்வரத்தினத்தை மேடைக்குக் கொண்டுவந்து அவரைப்புகழ் பெற்ற நடிகராக்கிய திறமையும், பெருமையும், கலைஞர் இரத்தினத்திற்கே முதலில் உரியதாகும். அன்றிலிருந்து இன்றுவரை எமது இரத்தினத்தின் செயற்பாடுகள் ஏராளம். யாவற்றையும் குறிப்பிடின் இம் மலர் விரியும் அடக்கத்தை ஏற்று சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

காங்கேசன்துறை "வஸந்த கான சபாவும்" அரியாலை கலைமகள் நாடக சபாவும் பல காலம் இணைந்தே செயற்பட்டு வருகின்றன. கலைமகள் நாடகசபாவின் தயாரிப்பிலான "ஆரியமாலா", "பதவிமோகம்", "வள்ளிதிருமணம்", "சத்தியகுமார்", "அமர்நாத்" இன்னும் பல நாடகங்களுக்கு வஸந்தகான சபா நடிகர்கள் சேர்ந்து நடித்தும், வாத்தியங்கள் இசைத்தும், பங்கு கொண்டுள்ளார்கள் இதற்கெல்லாம் முக்கிய காரணமாயிருந்தவர் எமது இரத்தினமே அரிச்சந்திரன் நாடகத்தை இரண்டாயிரம் தடவைக்குமேல் நடத்திவரும் வஸந்தகான சபாவின் ஆரம்பகால "சந்திரமதியாக" நடித்து அந்நாடகத்திற்கு மெருகூட்டியவரும் பல சிரமங்களின் மத்தியில் தன் சுயபலனை எதிர்பாராது கலைச்சேவை புரிந்தவருமாவார். தன் உடலநிலை காரணமாக தற்போது மேடையில் நடிப்பதை தவிர்த்துக் கொண்டாலும் தன்னிடம் சேருகின்ற இளைஞர்களை நாடகத்தில் பயிற்றுவித்து தொண்டு புரிவது இவரின் கலை உளப்பாங்கினை வெளிப்படுத்துகின்றது.

கண்டி புஸ்பதான மண்டபம் பேராதனைச் சர்வகலாசாலை, கொழும்பு சைவமங்கையர் கழகம்(மண்டபம்) லும்பினி மண்டபம் லயனல் வென்ட் இலங்கை வானொலி நிலையம் திருமலை கணேசன் தியேட்டர் ஆகிய பிரபல அரங்குகளில் நடித்து சிங்களக் கலைஞர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

மரபு நாடகக் கலைக்குப் புத்துயிரளித்து வந்தவரும் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன், அமரர் " இலங்கையர்கோன்" பேராசிரியர் கா. சிவத்தம்பி, அமரர்கள் கலையரசு சொர்ணலிங்கம், கலாஜோதி சண்முகநாதன் (சானா) ஆகியோரின் அபிமானத்தையும் பெற்றவர் இரத்தினம் இவரின் கலைத்தொண்டு மேலும் வளர்க! கலைஞர் இரத்தினம் நீடூழி வாழ்க!!

"வஸந்தகான சபா"
காங்கேசன்துறை
(12-06-1984)

# கலைப்புகழ் விழா மலர்
## வெளியீடு ~ 23.06.1984

மேலும் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபா 1942ம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இம் மன்றத்தின் தலைவராக நீலன் செல்லக்கண்டு அவர்களும் செயலாளராக கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களும், தனாதிகாரியாக க. இரத்தினம் அவர்களும் இயங்கிவந்தார்கள். திரு நீலன் .செல்லக்கண்டு, கவிஞர் வே. ஐயாத்துரை ஆகியோர் இறந்த பின்பு அவர்களின் இடத்துக்கென எவரும் நியமிக்கப்படவில்லை. கலைஞர் க. இரத்தினம் இப்பொழுது மன்றத்தை வழிநடத்தி வருகின்றார்.

## மலர் மணம் 4

### " கலைமகள் நாடகசபாவின் சபாவின் கலைஞர் இரத்தினத்தின் பங்களிப்பும்'

சின்னச் செல்லர், காத்தான் கந்தையா என்போர் அரியாலை மேற்கில் இசைக் கூத்துக்களை நடத்தி வழிகாட்டிகளாக இருந்தபோதும் அவர்கள் மேற்கொண்ட தொழில்வளம் காரணமாக மேற்கொண்டு அவர்களால் 'கூத்துக்களை நடத்தமுடியவில்லை. மேலும் இசைக்கூத்துக்களை மக்கள் பார்ப்பதில் ஆர்வம் குறையத்தொடங்கியது. தென்னிந்தியத்திரைப்பட வருகையும் தென்னிந்திய கலைஞர்கள் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று இயலும் இசையும் கவந்த நாடகங்களை மேடையேற்றத்

தொடங்கியமையினால் இந்நிலை ஏற்பட்டது. இந்நேரத்தில் மேற்கூறப்பட்ட நாடக நடிகர்களின் நாடகப்பட்டறையிலே அனுபவம் பெற்ற நீலன் செல்லக்கண்டு என்பவர் இந்நிலை கண்டு முதலில் வருந்தினாராயினும் செயற்திறனில் முழு நம்பிக்கை கொண்ட இவர் தென்னிந்திய சினிமாக்களையும் நாடகங்களையும் நன்கு பார்த்து அதன் நுட்பங்களை மிகத்தெளிந்தறிந்து கொண்டார். தென்னிந்திய நாடகங்களுக்கு நிகரான நாடகங்களை நாமும் ஏன் மேடையேற்ற முடியாது. நாமும் முயற்சித்தால் வரமுடியும் என்ற அசைக்க முடியாத எண்ணம் உருவேற அவர் அமைத்துக்கொண்ட மன்றமே "அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபா" ஆகும் இம் மன்றத்தினை ஆரம்பித்த அவர் வீணே வாழவிருக்கவில்லை. செயற்படவும் ஆயத்தமானார்.

அவர் இசைஞானம் கொண்ட நாடகப்பாடல்களை எதுகை மோனையுடன் எழுதினார். நல்ல அடுக்கு வசனங்களை இடையிடையே புகுத்தினார். அது மட்டுமல்லாமல் தென்னிந்திய சினிமாக்களில் வந்த சங்கரதாஸ சுவாமிகள் பாடல்களையும் இணைந்தும் அதே மெட்டில் புதிய பாடல்களை மெட்டமைத்தும் பல நாடகங்களை மிகக் குறுகிய காலத்துள் எழுதி முடித்தார். அதோடு நின்றுவிடாமல் சீன்கள், தட்டிசீன்கள் ஆகியவற்றை மன்றத்தின் தேவைக்கேற்ப உருவாக்கினார். அவரால் எழுதப்பட்ட நாடகங்கள் "ஆரியமாலா" "சதிநந்தவாதி" "அல்லி அருச்சுனா" "சதிஅகல்யா" "நவீன சத்தியகுமார்" "ஸ்ரீ வள்ளி" ஆகியனவாகும். யாழ்ப்பாண மாநகரில் மட்டுமல்லாது அக்காலத்தில் தமிழர்கள் வாழ்ந்த திருகோணமலையிலும் வன்னிநிலப்பரப்பிலும் இவர்களின நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

கலைஞர் இரத்தினம் அவர்களை நான் இந்த நூலை எழுதுவது சம்மந்தமாக பலமுறை செவ்விகண்ட போது திருகோணமலையில் தமது நாடகமன்றம் நாடகச்சுற்றுலா மேற்கொண்டதை ஒரு மறக்கமுடியாத சம்பவமாக அவர் கூறியுள்ளார். கலைஞர் இரத்தினத்தின் ஒன்றுவிட்ட சகோதரர்களான திரு.வே.க.பாலசிங்கம், திரு.வே.க.சுப்பிரமணியம், திரு.வே.க.செல்லத்தம்பி காலஞ்சென்ற திரு.செ.சிவநாமம் ஆகியோரிடமிருந்தும் கலைஞர் இரத்தினத்தோடு இணைந்து கலைமகள் நாடகசபாவின் கதாநாயகனாகப் பாத்திரமேற்று நடித்த அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்களும் கூறிய சம்பவங்களை மையமாக வைத்து இச் சுற்றுலா பற்றிய விபரங்களை இங்குதருகிறேன். மேற்கூறிய நால்வரில் கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களும், செ. சிவநாமம், அவர்களும் காலமாகிவிட்டார்கள். கலைஞர் இரத்தினத்தின் நாடகப் புகு முகமே இங்கு ஆரம்பிப்பதனால் இக்குறிப்புக்களை இங்கு கட்டாயத் தேவையுள்ளது

இந்த நாடகச்சுற்றுலாவிற்காக அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபையினர் ஐந்து நாடகங்களைத் தயார்படுத்தினர். அவை முறையே "ஆரியமாலா" "அல்லி அருச்சுனா" "ஸ்ரீ வள்ளி" "சதிஅகல்யா" "நவீன சத்தியகுமார்" ஆகியன அப்போது இரண்டாம் உலகமகா யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம் பிரிததானிய அரசாங்கம் திருகோணமலைத் துறைமுகத்தினை தம் ஆதிக்கத்துக்குட்படுத்தி வைத்திருந்த காலம், பிரித்தானிய றோயல் கடற்படையில் மேசன் வேலைசெய்வதற்காக பல மேசன் குடும்பங்கள் வேலை தேடித் திருகோணமலையில் குடியேறிய காலம். பிரித்தானிய அரசின் கீழ் யாழ்மாவட்டம், வன்னிமாவட்டம், மற்றும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இளைஞர்கள் பலர் கூலிப்பட்டாளங்களாகத் திருகோணமலையில் இருந்த காலம். அரியாலை மேற்கில் வாழ்ந்த மேசன் வைரமுத்துவும் அவர் சகோதரர் மயில்வாகனம் என்பவரும் இவ்விதம் வேலை செய்வதற்காக திருகோணமலைக்குச் சென்று குடியேறிய காலம். அவர்களின் மாமனாரான குடும்பிக்கார வேலுப்பிள்ளையர் அடிக்கடி யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் சென்று வருவார். இவர் இவ்வாறு சென்று வரும் நாளில் இவருக்கும் திருகோணமலையில் இருந்த கணேஷன் தியேட்டர் முதலாளிக்கும் நட்பு ஏற்பட்டது அந்த நட்பின் காரணமாக கணேஷன் தியேட்டர் முதலாளியான திரு தம்பிமுத்து அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க வேலுப்பிள்ளையர் மேற்கூறிய ஐந்து நாடகங்களையும் ஸ்ரீ கலைமகள் நாடக சபா மூலம் திருகோணமலையில் மேடையேற்ற முடிவுசெய்திருந்தார்.

இதன் பிரகாரம் 1942ம் ஆண்டு நடுப்பகுதியில் அன்று ஒருநாள் காலை அரியாலை மேற்கில் வாழ்ந்த அச் சிறிய சமூக மக்கள் மிகக்குதூகலத்தோடு தம் கலைமகள் நாடகசபாக் குழுவினரை திருகோணமலைக்கு வழியனுப்பிவைக்க முழு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். பெண்கள் குழுவினருக்காக பிரயாண உணவுப்பண்டங்கள் தயாரிப்பதிலும் நடிகர்கள் தமது உடுப்புக்களைத் தயார்படுத்தி பயணப் பெட்டிகளில் அடுக்குவதிலும் முனைப்பாக இருந்தார்கள். தயாரிப்பாளரும் நட்டுவாங்கப் பொறுப்பாளருமான திரு நீலன் செல்லக்கண்டு அவர்கள் ஒழுங்குபடுதிய பக்கவாத்தியக் காரரின் வருகைக்காகவும் ஒழுங்கு செய்த வாகனத்தின் வருகைக்காகவும் காத்திருந்தார். சமூகப்பற்றும் கலையார்வமும் மிக்க பெரியவர்கள் அங்கே பயணம் செல்லவிருக்கும் கலைஞர்களை ஆசிகூறி வழியனுப்பக் கூடி நின்றார்கள். அப்பொழுது அங்கேயொரு மோட்டார் வாகனம் பாம்! பாம்! என்ற சத்தத்துடன் வந்து நின்றது. ஆங்காங்கே ஒவ்வொருவராக நின்ற சிறுவர் சிறுமியர் "தட்டிவான் வந்துட்டுதடா!" "தட்டிவான் வந்துட்டுதடா!"என்று சத்தமிட்டவாறு வானை நெருங்கி வந்து வேடிக்கை பார்த்தார்கள். வான் சாரதியும் பெருமிதமாக மீண்டும் மீண்டும் கோனை அழுத்தினார். அது பாம்! பாம்! என்றது சிறுவர் சிறுமிகள் ஆனந்தத்தால் ஆரவாரம் செய்தார்கள்.

இந்த ஆரவாரத்தில் அவ்வூர் மக்கள் சந்தோஷம் அடைந்து கொண்டிருந்த பொழுது உரும்பிராயில் இருந்து வந்த செய்தியொன்று அவர்களின் கற்பனைகளையெல்லாம் தகர்த்தெறிந்தது கவலைக்குள்ளாக்கியது. அந்தச் செய்தியென்ன? அச் செய்திகேட்ட நீலன் செல்லக்கண்டு அவர்கள் அதிர்ந்தே போனார். செய்வதறியாது திகைத்து நின்றார் ஊர்ப் பெரியவர்களும் கவலை கொண்டார்கள். கலைஞர்களைச் சொல்லவும் வேண்டுமா? அவர்களும் அதே நிலைதான் அப்படி உரும்பிராயில் இருந்து வந்த செய்தி தான் என்ன? அந்தக்காலத்தில் பின்னணி இசைக்கலைஞர்களைத் தேடிப்பிடிப்பது முயற் கொம்பாகவே இருந்தது. பின்னணி இசைக்கலைஞனின் குறைவே அதற்குக் காரணம் ஆர்மோனியம் மிருதங்கம் இவ்விரண்டு இசைக்கருவியையும் நம்பியே இசை நாடகங்களை மேடையேற்ற வேண்டிய அவசியம் இருந்தது. திருகோணமலைக்குச் செல்லும் ஸ்ரீ கலைமகள் நாடக சபாக் குழுவினால் ஆர்மோனியம் வாசிப்பதற்கென உரும்பிராய் பிலிப்பு என்பவரும், மிருதங்கம் இசைப்பதற்காக காங்கேசன்துறை வி.வீ காசிநாதர் என்பவரும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தார்கள். தவிர்க்க முடியாத காரணங்களினால் ஆர்மோனியம் பிலிப்பு அவர்கள் வரமுடியாதென கையை விரித்துவிட்டார். இந்தச் செய்தியை பிலிப்பு அவர்கள் தகவல் கொடுத்து விட்டவர் மூலம் அறிந்தே எல்லோரும் கதிகலங்கிப்போயிருந்தார்கள். அவர்கள் இவ்விதம் இருக்கையில் அங்கே காங்கேசன்துறை வீ. வீ. காசிநாதர் மிருதங்கப் பக்கவாத்தியத்துடனும் பயணப் பொதியுடனும் வந்திறங்கினார் அவரிடம் இத் தகவலை நீலன் செல்லக்கண்டு அவர்கள் கூறிய போது வீ. வீ. காசிநாதர் வழமையான புன்னகையோடு நீலன் செல்லக்கண்டுவை பார்த்து எதற்கும் நீங்கள் பயப்பட வேண்டாம் எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன் என மொட்டையாக சொல்லி நிறுத்தினார்.

"என்ன? நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே யார்? அப்படியெனின் ஆர்மோனியம் வாசிப்பது" என நீலன்செல்லக்கண்டு அவர்கள் வீ. வீ. காசிநாதரைப் பார்த்து வினாவினார் "செல்லக் கண்டண்ணே" பிலிப்பு உந்த விடயத்தை நேற்று எனக்கு சொல்லிப்போட்டான் "நான் கொழும்பில ஆர்மோனியம் வாங்கிவரச் சென்ற எனது தம்பி வீ. வீ. வைரமுத்துவுக்கு திருகோணமலைக்கு உடன் வரும்படி தந்தி அனுப்பியுள்ளேன்.அவன் தம்பி தந்தியைக் கண்டதும் அங்கு நிச்சயம் வருவான் நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை பிரயாணத்துக்குத் தயாராகுங்கள் என்று கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் எல்லோரின் உள்ளமும் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தது. பிரயாணத்துக்கான ஏற்பாடுகள் தடல்புடலாகச் செய்யப்பட்டு நாடகக்குழுவினர் வாகனத்தில் ஏறியதும் அந்த வான் "பாம்" "பாம்"என்ற கோனை இசைத்தவாறு முன்னோக்கி நகரத்தொடங்கியது.

அந்தக்காலத்தில் இப்படி பயணம் சென்று வேறு ஊாகளில் நாடகம் செய்வதானால் கிடைத்தற்கரிய பாக்கியமகவே கொள்ள வேண்டும் அதன் காரணத்தால் நாடகக்குழுவில் இருந்த கலைஞர்களெல்லாம் புளங்காகித மடைந்த போதும் கலைஞர் இரத்தினம் மட்டும் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்பட்டார் அவரின் கவலைக்குக் காரணம் என்ன? என்பது அவருடன் கூட பிரயாணம் செய்யும் அனைவருக்கும் தெரியும் ஆனால்அவர்கள் அதனை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை கலைஞர் இரத்தினத்தின் கண்களிலிருந்து சொட்டுச் சொட்டாக நீர்த்திவலைகள் வெளிப்பட்டபோதே செல்லக்கண்டு அவர்கள் உஷாரானார் "தம்பி இரத்தினம் ஆண்டவன் உனக்குத் துணையிருப்பார் சரஸ்வதி அம்பாள் உன் கண்ணீரைத் துடைப்பாள் நீ எதற்கும் கலங்காதே" என ஆறுதல் கூறினார் அப்படிக் கலைஞர் இரத்தினத்துக்கு ஏற்பட்ட கவலைதான் என்ன? அவரது தாயாரும், மூத்த தங்கையாரும் நெருப்புக்காச்சலால் பீடிக்கப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தார்கள் அவர்களை அந்த நிலையில் விட்டுப் பிரிந்து செல்கின்றோமே என்ற கவலைதான் அவரைக் கண்கலங்க வைத்தது கலைஞரென்றால் எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தி வேண்டும் பெண்பாத்திரமேற்று நடிக்கும் கலைஞர் இரத்தினம் இல்லையென்றால் கலைமகள் நாடக சபாவில் அவர் இடத்தை பூர்த்திசெய்ய எவருமே இல்லை. முழுநாடகமுமே அவர் செல்லாவிடத்து நின்று போகும் அதனை நினைத்துத்தான் கலைஞர் இரத்தினம அவர்கள் எதையும் பொருட்படுத்தாது இந்தக் கவலைப் பிரயாணத்தை மேற்கொண்டார். தட்டி வானும் எத்தனையோ பாரங்களைச் சுமந்து கொண்டு கண்டி வீதியின் காட்டுப்பாதையூடாக சென்று கொண்டிருந்தது. திரு நீலன் செல்லக்கண்டு அவர்களின் நகைச்சுவை வெடிகளும் இந் நாடகக் குழுவினரின் அழைப்பையேற்று அவாகளுடன் சென்ற திரு அவ்விப்பரமு அவர்களின் நாடகப் பாடல்களும் இடையிடையே இதமளிக்க பிரயாணம் மிக இனிமையாக நிறைவேற்றிக்கொண்டிதுந்தது. இயற்கை அன்னையின் எழில் வனப்பினால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் புண்ணிய சிவபூமியான திருகோணமலையை முதன் முதல் தரிசிக்கும் இந்த நாடகக்குழவினர் ஏற்கனவே அங்கு வந்துபோன குடும்பிக்கார வேலுப்பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் அவரது மருமகன்களான திரு. ச. வைரமுத்து திரு. ச. மயில்வாகனம் அவர்கள் வசிக்கும் சுண்டங்காடு வீட்டினைச் சென்றடைந்தார்கள் கலைஞர் வீ. கே. இரத்தினம் அவர்கள் நாடகக்குழுவில் மிகவும் வயதில் இளையவர் வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டேனே என்ற எண்ணம் அவரை வெகுவாகப் பாதித்திருந்தது. வீட்டிலிருந்து புறப்படும் பொழுது தாயாரும் சகோதரியும் சுகவீனமுற்றிருந்தமையே முழுக் காரணம் ஆகும். அவர் இது பற்றி மிகவும் கவலை தோய்ந்தவராகவே காணப்பட்டார். ( இந்த நிகழ்வு பற்றி அவருடன் நான் நேர் முகங்காணுகின்ற பொழுது அவர் கண்கள் கலங்கின. )

இருந்தாலும் மற்றவர்களுக்கு அதனைப்பற்றிச் சொல்லி கவலை கொள்ள அவரால் முடியவில்லை ஏனென்றால் இதுவரை காலமும் தான் பிறந்த மண்ணிலேயே நாடகமாடிய கலைஞர் இரத்தினம் அவர்களும் அவர்சார்ந்த அரியாலை ஸ்ரீகலைமகள் நாடகசபாக் குழுவினரும் பல மைல்களுக்கப்பால் இன்னுமொரு மாவட்டத்தில் தம் நாடகக்கலை முத்திரையைப் பதிக்கவந்திருக்கிறார்கள் அது சம்மந்தமான சிந்தனை தான் அவர்களின் உள்ளத்திலே வேர் ஊன்றிக் கொண்டிருந்தது திரு ச. வைரமுத்து அவர்களும் அவர் தம்பியாரும் நாடகக் குழவினரை நன்கு வரவேற்று உபசரித்தார்கள் கணேசன் தியேட்டர் உரிமையாளர் திரு தம்பிமுத்து அவர்கள் அங்கே வந்தார் தனது நண்பரான குடும்பிக்கார வேலுப்பிள்ளை அவர்களோடு மேடையேறவிருக்கும் நாடகங்கள் பற்றியும் நடிகர்கள் பற்றியும் விபரங்களைச் சேகரித்துக்கொண்டு சென்றார் அன்றைய பொழுது மிக அமைதியாக சந்தோசமாகக் கழிந்தது இதற்கிடையில் வி. வி. காசிநாதரின் தம்பியும் நாடகத்துறையில் பிற்காலத்தில் தனித்துவமாகத திகழ்ந்தவருமான திரு வீ. வீ. வைரமுத்து அவர்கள் கொழும்பிலிருந்து தந்தி கிடைக்கபெற்று அங்குவந்து சேர்ந்தார் அவரின் வருகை எல்லோருக்கும் பேருவகை அளித்தது


மறுநாட் காலை நாடக ஒத்திகை பார்க்க முடிவாயிற்று. கலைமகள் நாடக சபாவின் நாடக வழிகாட்டியான திரு நீலன் செல்லக்கண்டுவின் வழிகாட்டலில் கலைஞர் இரத்தினம், கவிஞர் ஐயாத்துரை, வி. கே. பாலசிங்கம் ஆசிரியர் ஆகியோர் பின்னனி இசைக் கலைஞர்களான காங்கேசன்துறை வி. வி. சகோரதர்களுடன் இசை ஒத்திக்கைகளை கவனித்தார்கள். வி. வி. சகோதரர்களின் பூரண ஒத்துழைப்புடன் பாடல்களுக்கான ஒத்திகை மிக இலகுவாக மேற்கொள்ளப்பட்டது.

கணேசன் தியேட்டர் முதலாளி திரு தம்பிமுத்து அவர்கள் பெரிய அளவிலான விளம்பரப் பதாகையுடன் அங்கே வந்தார். அந்த விளம்பரப் பதாகையைப் பார்த்ததும் நாடகக் குழுவினர் அனைவருமே அதிர்ச்சியடைந்தனர். அந்த விளம்பரத்தில் யாழ்ப்பாணம் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபா பெருமையுடன் வழங்கும் ஐம்பெரும் நாடகங்கள் எனக் குறிப்பிட்டபின் முதன் முதலாக பெண்பாத்திரத்தில் வி. கே. இரத்தினேஸ்வரி என்னும் பெண் தோன்றி நடிக்கவுள்ளார்" என எழுதப்பட்டிருந்தது. கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களையே இங்கே இரத்தினேஸ்வரியாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அதுவே எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆணைப் பெண்ணாகச் சொல்லப் பட்டதால் நாடக இரசிகர்கள் ஆண் என்பதை அறிந்து மேடையில் ஏதாவது குழப்பம் செய்ய முயன்றால் நிலமை

என்னாவது என " தயாரிப்பாளர் திரு நீலன் செல்லக்கண்டு அவர்கள் முதலாளி திரு தம்பிமுத்துவைப் பார்த்துக் கேட்டார்" நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. ஒப்பனை அறைக்குள் உங்களைத்தவிர வேறு எவரும் வரமாட்டார்கள். நீங்கள் கவனமாக செயற்பட்டால் சரி" எனத் திரு தம்பிமுத்து கூறிவிட்டார். மறுத்துப் பேச எவராலும் முடியவில்லை. நடப்பது நடக்கட்டும் என எல்லோரும் பேசாமல் இருந்துவிட்டார்கள்.

முதல்நாள் நாடகம் "சதிநந்தாவதி" இந்த நாடகத்தின் முதற்கட்டமே கதாநாயகி நடனமாடிக் கொண்டு வருவதாக அமைக்கப்பட்டது. தயாரிப்பாளர் திரு நீலன் செல்லக்கண்டு அவர்களால் எழுதப்பட்ட பாடலை பெண் (கதாநாயகி) வேடம் தாங்கிய தலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் பாடிக்கொண்டே நடனம் ஆட திரைவிலக நாடகப் பார்வையாளர்கள் எல்லோரும் விசில் அடித்து ஆரவாரம் செய்து கமோன் இரத்தினேஸ்வரி, இரததினேஸ்வரி எனச் சத்தம் போட்டதுமல்லாமல் வஞ்சிமோர் வஞ்சிமோர் எனவும் கூச்சலிட்டார்கள். வஞ்சிமோர் (Oncemore) என்பது ஒரு ஆங்கிலச் சொற்பதமாகும் இதனைத் தமிழில் மீண்டும் ஒருதடவை எனப் பொருள் கொண்வோம் இங்கு இரசிகர்கள் வஞ்சிமோர் (Oncemore) வஞ்சிமோர் (Oncemore) எனச் சத்தமிட்டதன் பொருள் இப்பொழுது புரிகிறதல்லவா? மீண்டும் அந்தக் காட்சிளை செய்து காட்டுமாறு இரசிகர்கள் இட்ட அன்புக் கட்டளையை திரும்பவும் செய்து காண்பிக்காவிட்டால் மேடையை நோக்கி கற்கள் கூட வரலாம் அதனால் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் திரும்பவும் பாடி நடனமாட வேண்டியதாயிற்று மீண்டும் மீண்டும் ரசிகர்களிடையே இருந்து வஞ்சிமோர் வார்த்தை வரலாயிற்று அப்பொழுது நாடகத் தயாரிப்பாளர் நீலன் செல்லக்கண்டு மேடையில் தோன்றி "பார்வையாளப் பொருமக்களே நீங்கள் மீண்டும் மீண்டும் ஆடச் சொன்னதால் உங்கள் பெண் நடிகை வி. கே. இரத்தினேஸ்வரி அவர்கள் களைப்புற்றுப் போனார் "சதிநந்தாவதி" யென்னும் இந்த நாடகம் முடிவுற்றதும் இரு நடனங்களை வி. கே. இரத்தினேஸ்வரி அவர்கள் ஆடிக்காட்டுவார். நீங்கள் அமைதியாயிருந்து நாடகத்ததைக் கண்டு களித்த பின் நடனத்தையும் கண்டு களிக்கலாம் அதுவரை நாடகத்திற்கு இடையூறு தராமல் ஒத்துழைப்பு நல்குங்கள்" என்றார் சபையினர் அமைதியானார்கள் முதல்நாள் நாடகமான "சதிநந்தாவதி" எதுவித இடையூறுமின்றி நிறைவெய்தியதும் கலைஞர் வி. கே. இரத்தினம் ( இரத்தினேஸ்வரி ) அவர்கள் சபையோருக்காக இரு நடனங்களை ஆடிக்காட்டினார் அவர் மேடையில் ஆடிக்கொண்டிருந்த பொழுது மேடையை நோக்கி கைக் குட்டையில் பணம் முடிந்து பலர் கவுண் எறிவது

போல் எறிந்தார்கள். வி. கே. இரத்தினம் அவர்கள் கல்கட்டித் தான் தன் மீது வீசுகிறார்களோ எனப் பயந்து மேடைக்குள் ஓடிவிட்டார் பின்பு தான் அங்கு எறியப்பட்டவை பண முடிச்சுக்கள் எனக் கண்டு கொண்டார்கள். இவ்வாறு மிக வரவேற்பினை பெற்ற ஐந்து நாடகங்களில் இறுதி நாளன்று "அல்லி அர்ச்சுனா" இடம் பெற்றது இந்த நாடகத்தில் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் நாரதராகத் தோன்றி மிகத் திறமையாக நடித்தார். ஏற்கும் எந்தப் பாத்திரத்தினையும் அந்தப் பாத்திரத்திற்கேற்ப திறம்பட நடிக்கக் கூடிய ஆற்றலை இந்த அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகமன்றத்தினர் பெற்றிருந்தனர். சந்தர்ப்ப நிலைகளுக் கேற்ப பாத்திரங்களை மாற்றி எப்பொழுதும் நாடகங்களை நிறைவேற்றும் திறனை இவர்கள் பெற்றிருந்தார்கள். மேலும் இக் கலைமகள் நாடக சபாவில் பல நாடகங்களில் பெண் பாத்திரமேற்றே கலைஞர் இரத்தினம் அவர்கள் நடித்துள்ளார்கள். இவரோடு இணைந்து கதாநாயகர்களாக அரியாலையூர் வே. ஐயாத்துரை, ஆரியகுளம் நடே சு, கோண்டாவில் பொன்னுத்துரை, கரவெட்டி நற்குணம், கரவெட்டி அண்ணாச்சாமி, மல்லாகம் குழந்தைவேலு, கொய்யாத்தோட்டம் இராசரெட்ணம், கோசி அருளானந்தம் காரையூர் பக்கிரி சின்னத்துரை உணாவில் வினாசித்தம்பி, காரையூர் இராசு திருநெல்வேலி ஆசைப்பிள்ளை காங்கேசன்துறை வீ . சி . செல்வராசா, கலட்டி அண்ணாவியார் கணபதிப்பிள்ளை ஆகியோர் நடித்துள்ளார்கள் இருந்தும் நடிகமணி வி . வி . வைரமுத்துவுடன் பல மேடைகளில், பலபாத்திரங்களில் தோன்றி நடிதமையாலேயே இவர் மறக்கமுடியாத நினைவுகளாகக் கொண்டுள்ளார் அவைபற்றிப் பின்பு ஆராயுமுன் நடிகமணி வி . வி . வைரமுத்துவுடன் எப்போது நாடகமாடத் தொடங்கினார் என்பதை இப்போது நோக்குவோம்.



# மேடையில் இணைந்த கலைஞர்கள்

1943ம் ஆண்டு யாழ்ப்பாணம் பட்டன அந்தஸ்திலைப் பெற்றிருந்தாலும் ஒரு கிராமத்தின் அமைப்பிலேயே காட்சியளித்தது. இன்று போதனா வைத்தியசாலையாக உயர்ந்து நிக்கும் இந்த வைத்தியசாலை சிறிய வைதிதியசாலையாகவே இருந்தது. ஆங்காங்கே புடவைக் கடைகள் உலர்தானியக்கடைகள் நகைக்டைகள் இரும்புக்கடைகள் போசனசாலைகள் மிகக் குறைவாகவே இருந்தன மக்கள் தேவையைக் கருதிமட்டுமே பட்டனப் பகுதிக்கு வந்து போவார்கள் கூடுதலாக மாட்டுவண்டிகலே இப்பகுதிகளில் காளப்படும் இந்தப் பட்டனசபையின் தலைவராக சாம் சபாதி என்பவர் இந்தார் படித்துச் சட்டத்தொழிலை மேற்கொண்டு வந்த இவர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார் யாழ்ப்பாண நகரினை முன்னேற்றவேண்டும் என்ற எண்ணங்கொண்ட அவரின் காலத்திலேயே சிறிய நூலகம் விளையாட்டுத்திடல் கடைத்தொகுதிகள் ஆகியன ஓரளவு கொண்டுவரப்பட்டன.

கேளிக்கைகள் பொழுது போக்கு அம்சங்கள் கொண்ட மக்களின் தேவைகலையும் ஏற்படுத்துவதில் இவர் ஈடுபாடு கொண்டிருநற்தார். 1943ம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் நகரமண்டபத்தில் ஒரு கலைவிழாவினை ஏற்பாடு செய்திருந்தார். அந்த விழாவில் நான்கு நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டது. அவை முறையே அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபாவினரின் "சதிநந்தாவதி."தீகவில் வேலுப்பிள்ளை குழுவினரின் "அரிச்சந்திர மயானகாண்டம் " வட்டுக்கோட்டை உருத்திராபதியின் " அல்லி அர்ச்சுணா ".கரவெட்டி அண்ணாச்சாமி குழுவினரின் " கோவலன் கண்ணகி ".இந்நாடகத்தில் .நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள் கண்ணகி வேடமிட்டு நடித்தார்., "சதிநந்தவதியான ".ஸ்ரீகலைமகள் நாடக சபையின் நாடகத்தில் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் நந்தாவதி பாத்திரத்தில் நடித்தார். சொந்த உறவினர்களான நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களும் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மேடைகளில் ஒன்றாக சந்தித்த போதும் இணைந்து நடிக்கும் வாய்ப்பினைப் பெறவில்லை. காரணம் இருவரும் பெண்பாத்திரங்களில் தோன்றி நடித்தமையை கலைஞர் இரத்தினம் நடித்த நாடகங்களுக்கு நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள் ஆர்மோனியம் வாசித்தமையுமாகும். இந்த இரு பெரும் கலைஞர்கள் இருவரையும் இணைந்து நடிக்க வைத்ததும் இந்த நகர மண்டப மேடைதான். இந்த மண்டபம் பற்றி அறியாதவர்கள் இன்று பலர் இருக்கின்றார்கள். பிற்காலத்தில் யாழ்பாண மாநகர சபையாக இருந்த இக்கட்டடத்தில் அமைந்த நகர மண்டப அரங்கு "சுப்பிறீம் கோட் " எனப்படும் உயர் நீதி மன்றமாக இயங்கியது. இதன் பின் றீயோ படமாளிகையாகவும் இயங்கியது. 1983ம் ஆண்டுக்குப்பின் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற அனர்த்தங்களாலும் அழகிய இக் கட்டடம் இழந்து போனது.

மேலும் விடயத்திற்கு வருவோம், 1944ம் ஆண்டு யாழ் மாநகர சபைத் தலைவர் பொங்கல் விழா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார். அப்பொங்கல் விழாவன்று பிற்பகல் நிகழ்ச்சிகளாக விளையாட்டுப் போட்டியும் மாட்டு வண்டி சவாரிப் போட்டியும் இரவு நேர நிகழ்ச்சியாக கலைநிகழ்ச்சிகளும் ஒழுங்குசெய்யப்பட்டன. இந்நிகழ்ச்சிகளை முன்னாள் மாநகர உறுப்பினராக இருந்த கொட்டடி தெய்வேந்திரம் அவர்கள் பொறுப்பேற்று முன்நின்று நடத்தினார். இவருக்கு உதவியாக இவரின் நண்பன் ஆரியகுளம் நடேசன் அவர்களும் செயல்பட்டார். பிற்பகலில் இடம்பெற்ற மாட்டுவண்டி சவாரியை பார்ப்பதற்காக யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பெரும் திரளான மக்கள் கூட்டம் நகரில் கூடியிருந்தார்கள். அப்போது இளைஞராக இருந்த கலைஞர் இரத்தினம் அவர்களும் இந்நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்காக முற்றவெளி மைதானத்திற்குத் தன் துவிச்சக்கர வண்டியில் சென்றிருந்தார். மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிகள் முடிய மாலையாகியது. அந்நேரம் அங்கிருந்து புறப்பட ஆயத்தமான கலைஞர் இரத்தினம் அவர்கள் மாநகர சபை மண்டபத்திற்கு முன்னாலுள்ள பிரதான வீதியால் ஆரியகுளம் வந்துகொண்டிருந்தார். அவருக்கு இரவு நேர கலை நிகழ்ச்சிகளையும் பார்த்துக்கொண்டு சென்றாலென்ன? என்ற எண்ணம் மனதில் எழுந்தது. அதனால் தனது துவிச்சக்கர வண்டியை பாதுகாப்பான இடத்தில் வைத்து விட்டு நகர சபை மண்டபத்தினுள் நுழைந்தார். அங்கு நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்தது. நாதஸ்வரக் கச்சேரி முடிந்ததும் "கோவலன் கண்ணகி" நாடகம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. நாடகத்தையும் பார்த்துக் கொண்டு வீடு செல்வோமெனக் கருதி கலைஞர் இரத்தினம் அவர்கள் அங்கிருந்தார். "கோவலன் கண்ணகி" நாடகத்தில் நடிகமணி வி.வி.வைரமுத்துவும் இணுவில் கனகரத்தினம் அவர்களும் நடிக்க ஏற்பாடாகி இருந்தது.

"கோவலன் கண்ணகி" நாடகத்தில் நடிப்பதற்காக நடிகமணி வி.வி.வைரமுத்துவும் அவரது சகநடிகர்களும் அங்கு வந்போதும் கண்ணகி வேடத்தில் நடிக்கவிருந்த இணுவில் கனகரத்தினம் அவர்கள் அங்கு வந்து சேரவில்லை. நாதஸ்வர கச்சேரி முடிந்ததும் நாடகத்தை தொடங்க முடியாத நிலையில் நடிகமணி வி.விவைரமுத்து அங்குமிங்குமாக அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார். நாடகத்தை ஒழுங்கு செய்து கொண்டபடி தெய்வேந்திரமும் ஆசிரியகுளம் நடேசனும் என்ன செய்வதென்று புரியாமல் நடிகமணியிடம் மாற்றுவழி ஏதாவது இருக்கின்றதா? எனக்கேட்டுக்கொண்டிருந்தார்கள். மண்டபத்திற்கு வெளியே இவர்கள் இவ்வாறு கதைத்துக்கொண்டிருந்தபோது மண்டபத்தினுள் நாதஸ்வரக் கச்சேரியை ரசித்துக்கொண்டிருந்த கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் "சிறிது நேரம் வெளியில்



நடிகைமணி வி.வி.வைரமுத்துவின் "மயானகாண்டம்" நாடகக் கலைஞர்களுடன் "சந்திரமதி வேடத்தில் கலைஞர் வி.கே.இரத்தினம்.

நின்றுவிட்டு வந்தாலென்ன?"' என எண்ணியவாறு வெளியே வந்தார்.

அப்பொழுது நாடகத்தை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவரான ஆரியகுளம் நடேசன் அவர்கள் தற்செயலாக திரும்பிய போது தூரத்தே கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் நிற்பதைக் கண்டார். அவரின் முகம் மலர்ந்தது. கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களை நோக்கி ஓடிவந்தார். " அண்ணே இங்கேயா நீங்கள் நிற்கிறீர்கள்? நாம் பெரும் சிக்கலில் மாட்டித் தவிக்கின்றோம். உங்களால் எமக்கு உதவ முடியுமா? " என அவரைப் பார்த்துக் கேட்டார். அந்நேரம் நடிகமணியும் கலைஞரைக் கண்டுவிட்டு ஓடோடி வந்தார். வந்தவர் டேய் மச்சான் இரத்தினம் நீ இப்பொழுது என்னோடு எப்படியும் நடிக்கவேண்டும். என்னோடு நடிக்க இருந்த இனுவில் கனகரத்தினம் இன்னமும் வரவில்லை என்ன? காரணமோ? தெரியவில்லை . உன்னை விட்டால் என் மானத்தைக் காப்பாற்ற யாருமில்லை. உடனே வா எனக் "கையைப் பிடித்து இழுத்தார். அதற்கு கலைஞர் இரத்தினம் அவர்கள் சரி நடிக்க வருவதானால் என்வீடு போய் ஒப்பனை பொருட்களை எடுத்து வரவேண்டும் . அதனை எடுத்து வர உங்களால் உதவ முடியுமா? என நடிகமணியைப் பார்த்துக் கேட்டார். அதற்குள் குறுக்கிட்ட ஆரியகுளம் நடேசன் அவர்கள் அப்படியானால் என்வாகத்தில் சென்று வரலாம் எனக் கூறினார். அதனைக் கூறிய நடேசன் அவர்கள் அவசரஅவசரமாக மேடைக்குச் சென்று நாதஸ்வரக் கச்சேரியை தொடர்ந்து நிகழ்த்துவதற்கான ஒழுங்கினைப் பார்க்கும் படி கொட்டடி தெய்வேந்திரமவர்களிடம் கூறிவிட்டுத் தனது வாகனத்தில் கலைஞர் இரத்தினம் அவர்களோடு புறப்பட்டு அரியாலை சென்று மிகக் குறுகிய நேரத்துக்குள் அங்கேவந்து சேர்ந்தார். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் தனது ஒப்பனையை தானே முடித்து மேடையேற ஆயத்தமானார். நடிகமணி சந்தோசத்தால் பூரித்துப்போனார். இதுவரை காலமும் தனித்தனி மேடைகளில் வேவ்வேறு குழுக்களோடு நாடகமேறிய இரு கலைஞர்கள் ஒன்றிணைந்தார்கள்.

இந்த ஒன்றிணைப்பே பிற்காலத்தில் இவர்களை ஒன்றிணைந்து பல மேடைகளில் ஒன்றாக செயல்பட வழிவகுத்தது. நாடகம் நல்லபடியாகவே நிறைவேறியது. கலைஞர் வி.கே.இரத்தினம் நாடகம் முடிந்து ஒப்பனை அறைக்குள் வந்தபோது அவரை எல்லோரும் வாழ்த்தினர். எந்தத் தருணம் ஆனாலும் எக்கதையாக இருந்தாலும் அதற்கு ஏற்ப தன்னைத் தயார்படுத்தும் வல்லமை கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களிடம் இருந்தது.

# "கதாநாயகர்களும் அவர்களைபற்றியும் கலைஞர் வி.கே.இரத்தினம்"

யாழ்ப்பாண நகரசபையின் பொங்கல் விழாவில் ஒன்றிணைந்து நடிகமணி வி.வி.வைரமுத்துவும், கலைஞர் இரத்தினமும் நடித்தபோதும் பின்பு இவர்கள் இணைந்து நடிப்பதற்குச் சந்தர்ப்பங் கிடைக்கவில்லை. இருந்தும் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் நடித்த பல நாடகங்களுக்கு நடிகமணி வி.வி.வைரமுத்துவும் அவர் சகோதரர் வி.வி. காசிநாதன் அவர்களும் பக்கவாத்தியம் இசைந்திருக்கிறார்கள். வெவ்வேறு குழுக்களில் இவர்கள் நடித்துக்கொண்டிருந்த போதிலும் உறவினர்களான இவர்கள் மேடைகளில் மட்டுமல்லாது தம் சமூக நிகழ்வுகளிலும் சந்தித்து தம் கலையுணர்வுகளைப் பரிமாறிக்கொள்ளத் தவறுவதில்லை. புராண இதிகாச இசை நாடகங்களுக்கு மதிப்பு ஏற்பட்ட காலத்தில் நாட்டுக்கூத்து கலையினை கரையூர்ப்பகுதியில் பைக்கிரி சின்னத்துரை என்பவரும் கொய்யாத் தோட்டம் பாண்டியன் தாழ்வுப் பகுதியில் பூந்தான் யோசேப்பு என்ற கலைஞனும் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். காரையூர் பைக்கிரி சின்னத்துரை மிகவும் நல்ல கலைஞர். பலராலும் பாராட்டபபெற்று முன்னணியில் திகழ்ந்தவர் இவர் நாட்டுக் கூத்துப் பாணியை விட்டு மக்கள் விரும்புவதும் புரியக் கூடிய முறையில் அமைக்கப்பட்டதுமான இசைநாடகப் பாணியில் நாடகங்களைக் தானும் நடித்தாலென்ன? என ஆர்வம் கொண்டு அதனை நடைமுறைப் படுத்த விரும்பினார்.

அதனை செயல்படுத்த நல்ல பெண் நடிகரை அவர்தேடிக்கொண்டிருந்தார். அரியாலைப் பகுதியில் நடக்கும் நாடகங்களை அவர் பார்க்கத் தவறுவதில்லை.
கலைஞர் வி.கே.இரத்தினத்தின் இசையாற்றலும் பெண்மைக்கான நளினமும் அவரை வெகுவாக கவர்ந்தது. அது மட்டுமல்லாது அவரை வழிநடத்தும் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் தலைவர் நீலன் செல்லக்கண்டு அவர்களின் திறமையையும் அவரையும் அவர்நன்கு அறிவார். தனது எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் அவர் அரியாலை மேற்குப் பகுதிக்குச் சென்று நீலன் செல்லக்கண்டு அவர்களைச் சந்தித்து அவர்மூலம் வி.கே.இரத்தினத்தை தனது நாடகக் குழுவில் நடிக்க ஒப்புதல் பெற்றார்.

பக்கரி சின்னத்துரை அவர்களுடன் "ஞானசௌந்தரி" என்னும் வேதபுராணத்தை கூறும் இசை நாடகத்தில் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் ஞானசவுந்தரியாக நடித்தார். இந்நாடகக்கதையில் சிற்றன்னையால் கொடுமைக்குள்ளாகும் ஞானசௌந்தரி இரு கைகளும் வெட்டப்பட்ட நிலையில் இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கும் கட்டத்தில் மிக சிறப்பாக நடித்து

ஒவ்வொரு கலைகளையும் குளமாக்கினார் கலைஞர் வி. கே இரத்தினத்தின் இந் நாடகப் பிரவேசம் பக்கிரி சின்னத்துரையின் நாடகக் குழு விற்கு நன் மதிப்பைப் பெற்றுக் கொடுத்தது நாடகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது என களைஞர் வி.கே இரத்தினத்தை நான் நேர்முகமாகச் செவ்வி கண்ட போது சொன்னார் மேலும் நல்லூர் கிழக்கு ஆனந்தா வித்தியாசாலையின் கட்டட நிதிக்காக அவ்வித்தியாசாலையின் முதல் அதிபரான கரவெட்டி சுப்பிரமணியம் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க நவீன சத்தியகுமார் என்னும் நாடகத்தை கலைஞர் வி. கே. இரத்தினம் சார்ந்த சிறீகலைமகள் நாடக சபாவினச் நடத்தித் தருவதாக ஒப்புக் கொண்டனர் இந்நாடகம் தனியே மேடை யேற்றப்படுவதாக இருந்த போதும் வேறு ஒரு நாடகக் குழுவினரின் நாடகமும் அங்கு மேடையேறவிருப்பதாக அறிவிக்கப்பட்டது வடமாராட்சி அல்வாய்ப் பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடக நடிகர்கள் ஒன்றிணைந்து வழங்கும் பக்த குசேலர் நாடகமே அதுவாகும் இவ்விரு குழுவினரும் வெளியே காட்டிக் கொள்ளாத போதும் போட்டி யடிப்படையியே இந்நாடகங்களை அரங்கேற்றினார்கள். அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் பிரதம இயக்குனர் நீலன் செல்லக்கண்டு அவர்கள் பாடல் அமைத்து வசனங்கள் எழுதி திருகோணமலையில் மேடையேற்றிய நவீனசத்தியகுமார் என்னும் இந்த நாடகத்தின் காட்சிகளை கலைஞர் வி.கே இரத்தினத்தின் நடிப்பாற்றலுக்கு ஏற்றவாறு சில மாற்றங்களைச் செய்து இவ்வரங்கில் மேடையேற்றினர் கலைஞர் வி. கே இரத்தினம் அவர்கள் பெண்கள் போல நடனமாடுவதில் கைதேர்ந்தவர் அதனால் இந்நாடகத்தில் இவரின் மூன்று நடனங்கள் சேர்க்கப்பட்டது தனியே இரு நடனங்களும் காதலன் சத்தியகுமார் முன்னால் அவன் பாடலுக்கேற்ப ஆடுவதாக ஒரு நடனமும் இக்கலைஞரால் ஆடப்பட்டது இந்த நாடகத்தின் எழுச்சியே கலைஞர் வி. கே இரத்தினத்தைப் பெண் வேடத்தில் போட்டால் மேடையேற்றப்படும் நாடகங்கள் வெற்றிபெறுவதோடு மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெறும் என்பதை எலலோர் மனதிலும் பசுமரத்தாணிபோல் பதிய வைத்தது எனலாம் இந்த நாடத்தின் பின்பே ஓய்வின்றி கலையுலகில் கலைஞர் இரத்தினம் பிரவேசிக்க ஆரம்பித்தார்.

கலைஞர் வி. கே இரத்தினத்தின் பெண் பாத்திர நடிப்பாற்றலுக்கு தனி மவுசு ஏன் வந்தது? பெண்பாத்திரம் ஏற்று நடிப்பவர்கள் மேடையில் தோன்றும் போது அசல் பெண்ணைப் பார்ப்பதாகவே முதலில் தோன்ற வேண்டும். அப்பொழுது தான் பார்வையாளர்களை முற்று முழுதாக அந்த நாடகத்தைப் பார்க்கும் ஆவலைத் தூண்டுவிக்க இயலும் நாடகம் நடிக்கும் போது பெண்களுக்கான அந்த அசைவுகளை நளினங்களை அப்பெண் பாத்திரம் ஏற்று நடிக்கும் கலைஞர் காண்பிக்க முயலவேண்டும்இவை இருந்தால் தான் பெண் பர்த்திரத்தில் சோபிக்க முடியும் இவை அனைத்தும் கலைஞர்

இரத்தினத்திடம் நிறையக் காணப்பட்டது. அதுவே அவரின் பெண்பாத்திர நடிப்புக்கு பூரண வெற்றி கிடைக்க வழிசெய்தது. நீங்கள் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள் சினிமா உலகில் சேவாலியர் விருதும். அகில இந்திய விருதும் பெற்ற காலஞ்சென்ற சிவாஜிகணேசன் அவர்கள் தமது பேட்டியொன்றில் குறிப்பிடுகையில் " தானும் காக்கா இராதா கிருஷ்ணனும் சினிமாவுக்கு வரமுன்னால் நாடகங்களிலே அதுவும் பெண்பாத்திரத்திலேயே நடித்து வந்தார்களாம். ஒரு கலைஞனானவன் பெண் பாத்திரமேற்று நடித்தால் அவனால் எந்தப் பாத்திரத்திலும் கனகச்சிதமாக நடிக்க முடியும். ஏனென்றால் சகல நெளிவு சுளிவுகளையும் அங்கே அனுபவம் பெறமுடியுமென்றார். இது உண்மையான கருத்து இந்த அடிப்படையிலே தான் கலைஞர் இரத்தினமவர்கள் பெண்பாத்திரத்தில் நன்றாகச் சோபிக்க முடிந்தது.

கலட்டி அண்ணாவியர் கணபதிப்பிள்ளை அவர்களைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. கலட்டி அண்ணாவியார் கணபதிப்பிள்ளை நடிக்க வருகின்றாரென்றால் அவர் நடிக்கவிருக்கும் நாடகத்தினைப் பார்த்து இரசிப்பதற்கு என்று ஒரு கூட்டம் புறப்படும். அந்த அளவிற்கு நடிப்பாற்றல், செல்வாக்குமிக்க நடிகராவார். இவர் தனது நாடகங்களில் கதாநாயகி பாத்திரத்தில் நடிப்பதற்காகக் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களைப் பலமுறை நாடியுள்ளார். கலைஞர் வி.கே.இரத்தினம் மேடையில் பெண்பாத்திரமேற்று நடிப்பாரானால் அவரோடு கதாநாயகன் பாத்திரமேற்று நடிக்கும் எமக்கு ஒரு அலாதியான உற்சாகம் தோன்றுமென பலமுறை அவர் கூறியுள்ளார். பாடல்களை இசைப்பதில் உனக்கிணையாக ஒரு பெண்பாத்திரமேற்று நடிக்கக்கூடிய ஒருவர் உன்னாலேயே உருவாக்க முடியுமென ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் மனந்திறந்து கூறியுள்ளாரென கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களை நான் பேட்டி கண்ட போது அவர் என்னிடம் கூறியுள்ளார்.

இவர் கட்டுக்கோப்பாக அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவில் ஒரு கலைஞராக அதனை வழி நடத்தும் ஒரு உறுப்பினராக இருந்த போதும் வேறு நாடகக் குழுவினரின் தேவை கருதி அவர்களோடும் இணைந்து செயற்பட்டுள்ளார். கோண்டாவில் பொன்னுத்துரை என்னும் கதாநாயக பாத்திரமேற்று தன்னுடன் நடித்த நடிகர்ப்பற்றி கலைஞர் வி. கே இரத்தினம் அவர்கள் கூறும்பொழுது "மிகவும் குரல்வளம் " மிக்க இந் நடிகருடன் நடிப்பதே ஒரு அலாதி இவரின் குரல் வளத்தைப்பற்றி மேலும் கூறுகையில் ஒலிப்பெருக்கி இல்லாமலே இவர் குரல் நீண்ட தூரத்திற்குக்கேட்கக் கூடியது எனவும் கதாபாத்திரத்திற்கேற்ப நடிக்கும் இந் நடிகர் தான் நடித்துக்கொண்டிருக்கையிலேயே தன்னோடு நடிக்கும் சக நடிகர்களையும் ஊக்குவிக்கும் செயல்பாங்கு கொண்டவரெனவும் சொன்னார் இவருடன் சேர்ந்து நடித்ததைப் பெருமையாகவே கலைஞர் வி. கே இரத்தினம் அவர்கள் கருதியுள்ளார்.

முன்னோடு சேர்ந்து நடித்த கரவெட்டி அண்ணாச்சாமி ஆசிரியப்பற்று கலைஞர் வி.கே இரத்தினம் கூறுகையில் "ஆசிரியர் அண்ணாச்சாமி அவர்கள் ஒரு நாடகப் பல்கலைக்கழகம் என்றே கூறலாம் " நாடகம் சம்மந்தமான சகல செயல்ப்பாடுகளையும் மிகத்திறமையாக செயல்ப்படுத்தும் ஆற்றல் கொண்ட இவர் சிறந்த ஆர்மோனிய கலைஞர் அதுவுமன்றி நாடக மேடைக்குரிய சகல தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கி எல்லாவற்றையும் தானே ஆக்கியும் வைத்திருந்தார். இவருடன் கிட்டத்தட்டத்தான் ஐம்பதுக்கு மேற்பட்ட தடவைகள் நாடக மேடையில் இணைந்து நடித்ததாகவும் சொன்னார் கலைஞர் வி.கே இரத்தினம் அவர்களுடன் இணைந்து நடித்த கதாநாயக நடிகர்கள் பற்றி அவர் கூறியவற்றை இங்கு அறிந்து கொண்போம் அடுத்து வரும் அத்தியாயத்தில் நடிகமணி வி.வி வைரமுத்து அவர்களின் வசந்தகான சபாப் பிரவேசம் பற்றி ஆராய்வோம்.

## மலர்மணம் -7

## வசந்தகான நாடகசபாவில் கலைஞர் வி. கே இரத்தினம்

1953ம் ஆண்டுவரை முன்னால் குறிப்பிட்ட ஒரு நாடகத்தினைத் தவிர நடிகமண் வி. வி. வைரமுத்துவும் கலைஞர் வி.கே இரத்தினம் அவர்களும் எந்த சந்தர்ப்பத்திலும் இணைந்து ஒன்றாக நடிக்கவில்லை இருந்தும் கலைஞர் வி.கே இரத்தினம் அவர்கள் நடித்த நாடகங்கள் பலவற்றிக்கு பக்கவாத்தியக் கலைஞர்களாக நடிகமணி வி. வி. வைரமுத்துவும் அவர் சகோதரர் வி.வி காசிநாதர் அவர்களும் இயங்கியுள்ளார்கள் அவ்விதமான சந்தர்ப்பங்களில் கலைஞர் வி. கே இரத்தினம் அவர்களும் நடிகமணி வி.வி வைரமுத்துவும் சந்தித்துள்ளார்கள் இருவரும் உறவினர்களாக இருந்தமையினால் சமூக ஒன்றுகூடல்களில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1953ம் ஆண்டுக்கு முன் பல நாடகங்களில் பல்வேறு குழுக்களுடன் கலைஞர் வி.கே இரத்தினம் அவர்கள் பெண் பாத்திரத்தில் தோன்றி யாழ்ப்பாண பகுதி எங்கும் பிரபல்யம் ஆகிக்கொண்டு இருந்தார் .

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபா அக்கால எல்லைக்குள் இசைநாடகங்கள் மட்டுமல்ல சரித்திர சமூக நாடகங்களையும் காலத்தின் தேவைக்கேற்ப, மக்களின் இரசனைக்கேற்ப மேடையேற்றி வந்தது அவ்விதம் இச் சபாவினர் மேடையேற்றிய நாடகங்களில் குறிப்பிடத்தக்க சிலவற்றை இங்கு தருகின்றேன் "பதவி மோகம் " "கன்னிக்கோட்டை " "சகோதர விரோதி " "சகோதர பாசம் " "சூழ்ச்சி வலை" "வேடன் கண்ணப்பா" சூழ்ச்சியின் வீழ்ச்சி ஆகிய நாடகங்களிலெல்லாம் கலைஞர் வி. கே இரத்தினம் அவர்கள் பெண்பாத்திரம் ஏற்று நடித்துள்ளார்

கலா நிதி வித்தியானந்தன் அவர்கள் "இலங்கையர் கோன்' எனப்பலராலும் அழைக்கப்பட்ட சிவஞானசுந்தரம் அவர்ளும் (இவர் இலங்கை நிருவாக சேவையில் இருந்தவர்) நடிகமணி வி.வி வைரமுத்துவை வைத்து மரவு வழி இசைநாடகம் ஒன்றை மேடையேற்ற வேண்டும் என முன்னின்று உழைத்தனர் மேடைகளில் ஒரு நாள் (இரவு முலுவதும்) ஆடப்பெற்று வந்த " சம்பூரண் அரிச்சந்திர " என்னும் நாடகத்தை தெரிவு செய்து இந் நாடகத்தின் பிற்பகுதியில் வரும் மக்களை ஈர்த்திழுக கக்கூடிய "மயான காண்டம் " பகுதியை ஒரு மணித்தியாலதுக்குள் அடக்கி 1953ம் ஆண்டு யாழ்ப்பாணம் மாநகர சபையில் மேடையேற்றினார்கள். இந் நாடகம் மேடையேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் போதே வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது இந் நாடகத்தில் பெண் வேடத்தில் சந்திரமதி பாத்திரமாக நடித்தவர் பத்மாவதி சவசம்பு அவர்களாவர்.

நடிகமணி வி.வி வைரமுத்து ராஜாபாட்டாக நடித்த அவ்விசை நாடகமான "அரிச்சந்திரா மயான காண்டம்" அவருக்கு பல விதத்திலும் புகழை தேடிதந்து கொண்டிருந்தமையினால் இதனை தொழில் ரீதியாக அவர் மேற்கொள்ள சந்தர்ப்பம் ஏட்பட்டது எனவே அவர் ஒருநாடக மனறத்தினை அமைத்து கட்டுக்கோப்பாக இயங்க வேண்டிய நிலமைக்குள்ளானார். அதன் பிரகாரம் தனது மூத்த மகளின் பெயரை முன்னதாக கொண்டு " வசந்தகான நாடக சபா " எனப் பெயரிட்டு நாடகமன்றம் ஒன்றினை அவர் ஆரம்பித்தார் இப்பெயரிடப்பட்ட நாடக மன்றம் 1953ம் ஆண்டு தீபாவளி தினத்தில் "இலங்கையர் கோண்" சிவஞானசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காங்கேங்சன்துறையே நடிகமணி வி.வி.வைரதுவின் பிறந்தகமாகும் இதனால் காலப்போக்கில் " காங்கேசன்துறை வசந்தகான நாடக சபா" என்றே இம்மன்றத்தை நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்கள் கூறிவரலானார் நடிகமணியின் "மயான காண்டம் "பெரும் புகழ் அடைந்த போதிலும் தொழில் ரீதியாக அவர்களோடு எல்லா இடங்களுக்கும் சென்று சிவசம்பு பத்மாவதி அவர்களால் நடிக்க முடியவில்லை குறிப்பிட்ட நாடகத்தில் " சந்திரமதி "பாத்திரம் மிகவும் முக்கியமானது அரிச்சந்திரன் பாத்திரத்தோடு சந்திரமதி பாத்திரமும் சேரும் பொழுதுதான் நாடகத்தின் நிலை மிக உச்ச கட்கத்தை அடையும் அந்த அளவிற்கு அரிச்சந்திரனாக நடிக்கும் நடிகமணி வி.வி வைரமுத்துவுடன் இணைந்து நடிக்கக்கூடிய ஆற்றல் பெண் என்ற காரணத்தினாலோ அல்லது மேடையில் தோன்றும் அச்சத்தினாலோ பெண் (சந்திரமதி) பாத்திரத்தில் நடித்த உண்மையான பெண் நடிகருக்கு ஏற்படவில்லை. அதனால் சந்திரமதி பாத்திரத்திற்கு ஒருவரை தேடவேண்டிய கட்டாயம் வசந்தகான நாடக சபாவினருக்கு ஏற்பட்டது தொழில் ரீதியாக கலைஞர்களுடன் தனி ஒரு பெண் நாடகங்களுக்குச் சென்று வருவரானால் அதனை ஏற்க அன்றிலிருந்த எம் தமிழ்ச்சமூகம் முன்வரவில்லை இதுவும் பெண் பாத்திரம் ஏற்று நடித்தவருக்கு ஏற்பட்ட பெரும் சிக்கலாக இருந்தது அதன் காரணமாக அவரும்

பின்வாங்கினர் யாரை சந்திரமதியாக போடுவது என்ற பிரச்சனை பூதாகாரமாக உருவெடுத்ததுஎங்கும் வைரமுத்துவின் "அரிச்சந்திர மயான காண்டம்" நல்லதொரு நாடகமெனப் பேசப்பட்ட கோவில் திருவிழாக்களிலும், கட்டட நிதிகளுக்காகவும் அந்த நாடகத்தினை தம் ஊர்களிலும் மேடையேற்றவேண்டும் என்ற அவாவிலும் யாழ்ப்பாண மாவட்ட மக்கள் முனைப்புடன் செயல்ப்பட்டுக்கொண்டு இருந்தார்கள் ஆனால் இங்கோ நடிகமணி வி.வி.வைரமுத்து நல்லதொரு நடிகரைத் தேடி அலைந்து கொண்டு இருந்தார்

யாழ்ப்பாணம் அரியாலை கலைமகள் நாடக சபாவில் நடிக்கும் தனது உறவினரால் கலைஞர் வி.கே இரத்தினம் சந்திரமதி பாத்திரத்திற்கு மிக பொருத்தமானவர் என்பதை அறிந்து இருந்தும் அவர் ஒரு மன்றத்தில் நாடகம் நடிப்பதோடு மட்டுமல்லாது அந்த நாடகமன்றத்தினை இயக்கி வரும் பிரதான உறுப்பினராக இருந்தமையினால் அவரை அணுக முடியாத நிலையில் அவரிடம் சங்கடமான நிலை தோன்றியது அப்படியான நிலையில் அவரால் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை அவர் நேராக அரியாலை ஊருக்கே வந்தார். அரியாலையூர் கவிஞர் வே .ஐயாத்துரை திரு நீலன் செல்லக்கண்டு கலைஞர் வி.கே இரத்தினம் இம் மூவரையும் அழைத்து தனது நிலைமையை எடுத்து விளக்கினார். நடிகமணி வி.வி வைரமுத்துவின் உண்மை நிலைமையை புரிந்து கொண்ட கவிஞர் கே வி ஐயாத்துரை அவர்கள் "தம்பி வைரமுத்து நீவேறு நாங்கள் வேறல்ல நாடக மன்றங்கள் வேறாக இருப்பினும் கலைஞர்களாகிய நாங்கள் எப்பொழுதும் ஒரே குடும்பத்தவரே! வேறு வேறு நாடகமன்றங்களிலெல்லாம் அவர்கள் கேட்டு வரும்பொழுது தம்பி இரத்தினம் நடிக்கச் செல்கின்றான் உன் நாடகத்தில் நடிப்பதற்கு நாம் தடை விதிப்போமா? எமது நாடகமனறத்திற்கு பக்க வாத்திய உதவி தேவைப்படும் போதெல்லாம் நீயும் உனது அண்ணரும் உதவி செய்துள்ளீர்கள் அனறு பக்கவாத்திய கலைஞராக இருந்த நீ இன்று நல்ல நடிகனாக மாறியிருக்கிறாய்! கலைமகள் அருள் என்றும் உனக்குக்கிட்டும் தம்பி இரத்தினத்தை என்நேரமும் நீ அழைக்கலாம் எனக் கூறினார். கவிஞர் கே.வி ஐயாத்துரையின் அவ்வார்த்தைகளால் நடிகமணி வி.வி வைரமுத்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார் இதன் காரணமாக கவிஞர் கே.வி ஐயாதுரை அவர்கள் இறக்கும்வரை அரியாலைப் பகுதிக்கு வரும் நாட்களில் கவிஞரின் இல்லத்திற்குச் சென்று அவரை தரிசிக்க நடிகமணி தவறுவதில்லை.

இவ்வாறுதான் நடிகமணி வி.வி வைரமுத்துவிற்கும் கலைஞர் வி.கே இரத்தினத்திற்கும் இடையே நாடகத்துறையில் இணைவு ஏற்பட்டது அவர்கள் இருவரும் கலையுலகில் பிரிக்க முடியாத பேரன்புக்குரியவர்கள் ஆனார்கள். அது போல அவர்களின் இணைப்பினால் கலையுலகமும் தரமான நாடகங்ளைக் கண்டுகளிக்கக் கூடியதாய இருந்தது நடிகமணி வி.வி வைரமுத்துவின் வசந்தகான சபாவின் ஆரம்பகாலக் கலைஞர்கள் யார்? யார்? என்பது பற்றி இங்கு குற்ப்பிட வேண்டியது

அவசியமாகின்றது. வசாவிளான் மார்க்கண்டு, கரவெட்டி நற்குணம், பருத்துத்துறை சின்னத்துரை, சி. செல்வராசா அரியாலையூர் வி.கே இரத்தினம் இவர்களுடன் நடிகமணி வி.வி வைரமுத்து அவர் மகள் வசந்தா ஆகியோரே இவர்கள் ஆவர். இவர்கள் ஒன்றிணைந்து எடுத்துக் கொண்ட நிழற்படமொன்றினைப் பெரியதாக்கி கலைஞர் வி.கே இரத்தினம் அவர்கள் தமது வீட்டின் வராந்தா முகப்பில் வைத்திருக்கறார்.

இந் நாடகமன்றக் குழுவில் இப்பொழுது நடிகமணி வி.வி வைரமுத்துவின் மகளைத் தவிர உயிருடன் இருக்கும் ஒரே நடிகரும் கலைஞர் வி.கே இரத்தினம் அவர்களேயாவார். 1993ம் ஆண்டு தைமாதத்தில் தான் கரவெட்டி நற்குணம் அவர்கள் இடம் பெயர்ந்து வன்னியில் இருநத் சமயம் இறந்ததாக அறியப்படுகிறது. தன்னோடு நடித்த இணை நடிகர்களான இவர்கள் பற்றி கலைஞர் கூறுகின்ற போதெல்லாம் அவர் கண்கள் கலக்கமடைகின்றன. நடிகர்களைப் பொறுத்த வரையில் எல்லா நடிகர்களுக்கும் எல்லாத் துறைகளும் கைவந்து கூடுவதில்லை. நடிப்பில் வசனம் பேசத் தெரிந்தவன் பாடத் தெரியாதவனாக இருக்கின்றான் பாடத்தெரிந்தவன் நடிப்பை வெளிப்படுத்த இயலாதவனாக இருக்கின்றான். இவை இரண்டும் தெரிந்தவன் ஒப்பனையில் வேடப் பொருத்தம் இல்லாதவனாகக் காணப்படுகின்றான் ஆனால் தம் நடிகர் குழுவிலோ எல்லோரும் எல்லாமே நிறையப் பெற்று மேடையில் நடித்தமையினால் தான் மக்களின் மனதில் இன்றும் நீங்கா இடம்பெற்ற கலைஞர்களாக திகழ்கின்றோமென கலைஞர் இரத்தினம் அவர்கள் கூறினார். எல்லாம் அன்னை கலைவாணியின் அருள் எனக் கூறும் இவர் தனது அனுபவங்களைப் பற்றி எடுத்துக் கூறுவனவற்றை எனிவரும் அத்தியாங்களில் கவனிப்போம் .

## மலர் மணம் -8
## ஒரே மேடையில் ஒரே நடகம்

கலைஞர் வி. கே இரத்தினமும் நடிகமணி வி.வி வைரமுத்துவும் இணைந்து நடிக்கத் தொடங்கிய காலத்தில் இவர்கள் இணைந்து நடிக்கும் நாடகங்களை மக்கள் மிகவும் விரும்பிப்பார்த்தார்கள். சிறந்த இசையோட்டமும் அதற்கேட்ப நடிப்பாற்றலும் இவர்களின் நாடகத்தின் முன்னேற்றத்திற்கு வழிசமைப்பனவாக அமைந்தன. அதன் காரணமாக வடமாகானத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் இவர்களின் நாடகங்களே அதிகமாக மேடையேறி வந்தன. இவ்விருவரும் இணைந்து நடித்த "மயான கண்டம் " நாடகம் மிகவும் சிறப்பான நாடகமாகக் கருதப்பட்டது. பத்திரிகைகளும் பலவாறு இந் நாடகத்தைப் புகழ்ந்து எழுதின. அக்கால கட்டத்தில் வடமராட்சி பகுதியில் அண்ணாச்சாமி ஆசிரியரும் அல்வாய் தெற்கு தம்பியையா சாஸ்திரி அவர்களும் இசை நாடகங்களை மேடையேற்றிக்கொண்டிருந்தார்கள்.

பத்திரிகைகள் கலைஞர் வி.கே இரத்தினம் நடிகமணி வி.வி வைரமுத்துவும் தோன்றும் "மயான காண்டம் " நாடகம் பற்றி எழுதியமையை அவர்களும் அறிந்திருந்தார்கள். கலைஞர் வி.கே இரத்தினமும் நடிகமணி வி.வி வைரமுத்துவும் நடிக்கும் "மயான காண்டம் " நாடகம் யாழ் கொழும்புத்துறை நெடுங்குளத்தில் மேடையேற்றப்பட இருப்பதனைப் ாத்திரிகை மூலம் அறிந்த அல்வாய்ப் பகுதியையும் சேர்ந்த இளைஞர்கள் சிலர் அல்வாயிலிருந்து யாழ்ப்பாணம் வந்து " மயான காண்டம் " நாடகத்தைப் பார்த்தார்கள். அந்த நாடகத்தில் கலைஞர் வி.கே இரத்தினம் நடிகமணி வி.வி வைரமுத்துவும் திறமையுடன் நடித்தமையை அவர்கள் கண்டார்கள். இந் நாடகத்தின் ஒவ்வொரு காட்சிகளும் அமைக்கப்பட்ட விதமும் கலைஞர்களின் இசைவன்மையும் நடிப்புத்திறனும் அவ்விளைஞர்களைக் வெகுவாக கவர்ந்தது. அவர்கள் வடமராட்சிக்குத் திரும்பினார்கள். தாம் பார்த்த " மயான காண்டம்" நாடகம் பற்றி அங்குள்ளவர்களுக்கு தெரிவித்தார்கள். அவ்வூரார் என்ன அண்ணாச்சாமி ஆசிரியர் தம்பியையா சாஸ்திரியாரை விட கலைஞர் வி.கே இரத்தினமும் நடிகமணி வி.வி. வைரமுத்துவும் சிறப்பாக நடித்தார்களா? இவர்கள் இருவரும் அண்ணாச்சாமி ஆசிரியரின் நாடகத்தில் நடித்தவர்கள்தானே அவரை விடவும் திறமையாக நடிக்க அவர்களால் முடியுமா? எனக் கேட்டார்கள். இலைஞர்கள் அவர்களைப் பார்த்து நாம் இரு குழுக்களும் நடித்த நாடகங்களைப் பார்த்தவர்கள் நாம் என்ன பொய்யா கூறுகின்றோம் நீங்களும் நேராகப் பார்த்தால் தான் உங்களுக்கு உண்மை விளங்கும் என்று கூறினார். அதையும் தான் பார்த்து விடுவோமே என அவ்வூர் மக்கள் முடிவு செய்தார்கள் .

அவ்வூர் மக்கள் ஒன்று கூடினார்கள் தமதூரிலுள்ள சாமணாந்தறைப் பிள்ளையார் கோவில் நிதிக்காக இவ்விரு குழுக்களின் "மயான காண்டம்" .சைநாடகத்தினை மேடையேற்றுவது எனத்தீர்மானித்தானர். தீர்மானதினை அரங்கேற்றும் முயற்சியாக கரவெட்டி அண்ணாச்சாமி ஆசிரியரை அணுகி விடயத்தைக் கூறினார்கள். அண்ணாச்சாமி ஆசிரியர் அவர்கள் தன்னை அணுகிய அவ்வூர் மக்களைப்பார்த்து "ஒரே மேடையில் இருவேறு குழுக்கள் நடிக்கும் ஒரே நாடகமா இதற்கு நான் ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன் தம்பி வைரமுத்துவும் சகோதரன் இரத்தினமும் என்னோடு நாடகங்கள் பலவற்றில் நடித்தவர்கள் அவர்களின் ஆற்றல் எனக்கு நன்கு தெரியும் அவர்களும் ஒரே மேடையில் இவ்வாறு நடிப்பதற்கு சம்மதிக்கமாட்டார்கள். வெவ்வேறு நாடகமானால் சொல்லுங்கள் நான் சம்மதம் தருகின்றேன் என்றார். அவ்வூர் மக்கள் விடுவதாயில்லை இது போட்டியல்ல நாடகத்தின தன்மையை மக்கள் பார்க வேண்டும் அவர்கள் இரசிக்க வேண்டும் கலைஞர்களாகிய நீங்கள் இதற்குப் பின்னடிப்பது சரியல்ல எங்களின் இக கோரிக்கையினை எப்படியும் நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

என விடாப்பிடியாக நின்றார்கள். அண்ணாச்சாமி ஆசிரியரால் அவர்களின் வேண்டுதலைத் தட்டிக் களிக்க முடியவில்லை. ஈற்றில் அவர் வைரமுத்துவும் இரத்தினமும் இதற்கு ஒப்புதல் தெரிவிப்பார்களானால் நானும் சம்மதிக்கின்றேன் ''எனக் கூறினார்.

மிக்க மகிழ்ச்சியோடு சென்ற அவ்வூர் மக்கள் அரியாலைக்கு வந்து கலைஞர் வி.கே இரத்தினம் மூலம் நடிகமணி வி.வி லைரமுத்துவை அணுகுவதாக முடிவு செய்தார்கள். அந்த முடிவின்படி காங்கேசன்துறை சென்று வி.வி வைரமுத்துவை அணுகினார்கள். அவரும் ஆசிரியர் அண்ணாச்சாமி அவர்கள் எம்மோடு இணைந்து நடிகர் அவர் வேறாகவும் நாம் வேறாகவும் ஒரே நாடகத்தை ஒரே மேடையில் மேடையேற்றுவதனால் அது போட்டியாக அமைந்துவிடும். வளர்ச்சி பெறும் கலைஞர்களாகிய நாங்கள் அவ்விதம் நாடகம் நடிப்போமானால் அது போட்டியாக மாறிவிடும். நடிகர்கள் மனதிலே குரோதத்தை வளர்த்துவிடும் பழம் பெரும் நடிகரான ஆசிரியர் அவர்கள் இதனை விரும்பமாட்டார் அப்படியானால் வெவ்வேறு நாடகங்களை நாம் அரங்கேற்றுவோம் எனக்கூறினர். இதனைக் கேட்ட அவ்வையூர் அன்பர்கள் விடுவதாகவில்லை நீங்கள் மறுக்கின்றீர்கள் ஆனால் ஆசிரியர் அண்ணாச்சாமி அவர்களை நாம் அணுகிய போது அவர் பூரண சம்மதம் தெரிவித்ததோடு கலைஞர்கள் வெவ்வேறாக மேடையில் ஒனறு கூடும் போது அவர்களுக்கிடையே உற்சாகமும் புரிந்துணாவும் ஏற்படுவதோடு பல நுணுக்கங்களையும் தெரிந்துக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுகிறது என்றல்லவாக் கூறினார் என்றார்கள். நடிகமணி வி.வி வைரமுத்துஆச்சாரியப்பட்டார் ஒரு நல்ல கலைஞனின் கருத்தை எண்ணி வியந்துபோனர் ''சரி''ஆசிரியர் அவர்களே சம்மதம் தெரிவித்தபோது மறுப்பதற்கில்லை நாடகத்தெதியினை அறிவியுங்கள் நாம் வருகிறோம் எனக் கூறினார் அவ்வையூர் அன்பர்களின் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கே எல்லையில்லை நடிகமணி வி.வி. வைரமுத்துவிடம் இருந்து விடைப்பெற்று சென்றார்கள்.

நாட்கள் இரு வாரங்களைக் கடந்த நிலையில் தேதிகுறிப்பிடப்பட்டு நடிகமணி வி.வி வைரமுத்துவிற்கும் கரவெட்டி ஆசிரியர் அண்ணாசாமி அவர்களுக்கும் நேரிடையாக அறிவிக்கப்பட்டது. இரு குழுவினரும் நாடகத்திற்கான ஒழுங்கினை மேற்கொண்டனர்.

அன்றைய தினம் அவ்வையூர் மிகக் கோலாகலமாகக்காணப்பட்டது. தமதூார் பிள்ளையார் ஆலய நிதிக்காக மேடையேறவிருக்கும் நாடகம் பற்றியே எங்கும் பேச்சாக விருந்தது. ஆசிரியர் அண்ணாச்சாமி அவர்களும் தமதூரின் பிரபல சோதிடர் தம்பியையா அவர்களும் இணைந்து நடித்த ''மயான கயண்டம் '' இசை நாடகத்தினை பல முறை பார்த்தவர்கள் அவர்கள். ஆனால் நடிகமணி வி.வி வைரமுத்துவும் கலைஞர்

கலைஞர் வி.கே இரத்தினமும் "மயான காண்டம்" இசை நாடகத்தில் இணைந்து நடித்ததனை பார்க்கும் வாய்ப்பு இன்றுதான் அவர்களுக்கும் கிடைக்கப்போகின்றது. ஒரே நாடகம் ஒரே மேடையில் யாருக்கும் கிடைக்காத பாக்கியம். எங்கள் மண்ணில் அதுவும் முதற்தடவையாக எமக்குக்கிடைக்கப் போகின்றது என்ற புளங்காகிதத்தில் அவ்வையூர் மக்கள் பெருமைப்பட்டார்கள். வடமராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்தும் நாடக இரசிகர்கள் பலர் அன்றையதினம் அவ்வையூக்கு வந்திருந்தார்கள். இரவுவந்து மக்கள் சாமணந்தறை வெட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கினை நோக்கி விரைந்தார்கள். எங்கும் ஒரே சனக்கூட்டம் எப்பொழுது நாடகம் ஆரம்பிக்கும் என்ற ஏக்கம் அரங்கை எதிர் நோக்கியவாறு காத்திருந்தார்கள். பலத்த கரகோசம் எங்கும் எழுந்தது விசில் சத்தம் புறப்பட்டது மக்கள் பொறுமை இழந்து கொண்டிருந்தாகள் நாடகம் ஆடவிருக்கும் நடிகமணி வைரமுத்து வி.கே இரத்தினம் குழுவினர் ஒரு புறமும் கரவெட்டி அண்ணாச்சாமி ஆசிரியர் தம்பியையா சோதிடர் இணைந்த குழுவினர் ஒருபுறமும் தங்களை நாடக பாத்திர அலங்கரிப்பின் ஈடுபட்டிருந்தனர். நாடக அமைப்பாளாகளான அவ்வையூர் ஆலய நிர்வாக அன்பர்கள் ஏற்பாட்டின்படி ஆசிரியர் அண்ணாசாமி குழுவினரின் "மயான காண்டம்" இசை நாடகமே முதலில் மேடையேறுமென அறிவிக்கப்பட்டது. மக்கள் சபையில் அமைதி ஏற்பட்டது நாடகம் அரங்கேறிக்கொண்டிருந்தது ஓரிரு காட்சிகளைவிட முற்றும் சோக மயமான இந் நாடகம் அமையப்பெற்றமையினால் எல்லோர் மனமும் சோக முறு நிலையிலேயே காணப்பட்டது. அண்ணாச்சாமி ஆசிரியர் மிகவும் திறமைசாலி. இசையில் வல்லவர் அது போலவே சோதிடர் தம்பியையும் இசையில் வல்லவர் அவர்களின் நாடகம் முற்றுப் பெற்றது.

சிறிது நேர இடைவெளிக்குப்பின் நடிகமணி வி.வி வைரமுத்து கலைஞர் இரத்தினம் இணைந்து அரிச்சந்திரன் சந்திரமதியாக நடிக்கும் "மயான காண்டம் " நாடகம் ஆரம்பமானது. பலபேரின் எதிர்பார்ப்புகள் இந் நாடகத்தின் மீதே இருந்தது. நாடகம் ஆரம்பமாகும் முதற்காட்சியில் சந்திரமதியாக நடிக்கும் கலைஞர் இரத்தினம் அவர்கள் காலகண்டேயரின் வீட்டில் கடவுளை வேண்டிப் பாடுவதாக அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் காட்சி ஆரம்பமாகி கலைஞர் இரத்தினம் அவர்கள் பாடிக்கொண்டிருக்கும் மின்சாரம் தடைப்பட்டுப் போனது. பார்வையாளர் பகுதியில் அமளி ஏற்பட்டது. விசில் சத்தங்கள் எங்கும் ஒலித்தன. எல்லாபக்கங்களிலிருந்தும் ஏற்பட்ட கூச்சல் குழப்பங்கள் நிர்வாகத்தினர் கதிகலங்கிப் போனார்கள். இது விசமிகளின் வேலையாக இருக்கலாமோ என அவர்கள் அஞ்சி நின்ற வேளை மின்சாரம் மீண்டும் ஒளிபரப்பியது மின்சாரக் கோளாறே காரணம் எனத் தெரியவந்தது. ஒலிபெருக்கியில் நாடகம் தொடர்ந்து இடம்பெறும் மின்சாரக் கோளாறினால் ஏற்பட்ட தடங்கலுக்கு நாம் மிக வருந்துகின்றோம் என ஏற்பாட்டாளாகள் கூறியதைத் தொடர்ந்து மக்கள் மனங்களில் சந்தோச ஒளி வீசியது. நாடகம் ஆரம்பமானது சபையில் கூடியிருந்த

மக்கள் வெள்ளத்தில் ஒரே நிசப்தம் உண்மையான ஒரு நிகழ்வே மேடையில் நடைபெறுகிறது என எண்ணி மக்கள் தம்மை மறந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இசை வல்லவர்களான நடிகமணி வி.வி. வைரமுத்துவும் கலைஞர் வி கே இரத்தினமும் அவர்களோடு இணைந்த நடிகர்களும் பாடல்களாலும் நடிப்பினாலும் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்து கொண்டிருந்தார்கள். பார்வையாளர்கள் கன்கள் குளமாகிக் கொண்டிருந்தன நாடகம் வெற்றிகரமாக நிறைவேறியது. கலைஞர் வி. கே இரத்தினத்தின் பெண் பாத்திர நடிப்பை வியந்து கூறாதவர்களே இல்லை. நடிகமணி வி.வி வைரமுத்து வல்ல அரிச்சந்திரன் வைரமுத்து என்னும் அளவிற்கும் அவர்புகழும் ஓங்கியது. நடிகமணி வி.வி.வைரமுத்துவினதும் கலைஞர் வி. கே இரத்தினம் அவர்களின் உயர் பெண்மை நடிப்பையும் கண்ட ஆசிரியர் அண்ணாச்சாமி அவர்கள் இருவரையும் கட்டித்தழுவி உங்கள் திறமையான நடிப்பு என்னை நன்றாகவே கவர்ந்தது. ஈழத்து நாடக உலகில் நீங்கள் இருவரும் இமயம் போல் திகழ்வீர்கள் இது என் ஆசி மட்டுமல்ல. வாழ்த்தும் கூட "எனக் கூறி முத்தமிட்டு மகிழ்ந்தார்.

அவரின் அன்றைய கூற்றுப் பொய்க்கவில்லை. நடிகமணி வீ.வி.வைரமுத்து என்ற கலைஞனும், வீ.கே.இரத்தினம் என்ற கலைஞனும் ஈழத்து நாடக உலகில் வைரம் நிறைந்த முத்தாகவும், நல்லொளி வீசிப் பிரகாசிக்கும் இரத்தினமாகவும், சுடர்விட்டு ஒளிர வழிவகுத்தது. வடமராட்சியினில் பதினைந்து தடவைகள் தொடர்ந்து "மயானகாண்டம் " என்னும் இவ்விசை நாடகம் மேடையேறவும் ஊன்றுகோலாக இருந்தது.

## மலர் மணம் - 9

## "சுபத்திரை ஆழ்வாரின் சந்திப்பும் ஆசியும் "

இக்காலத்துக் கவிஞர்களானாலும் சரி, கலைஞர்களானாலும் சரி, வேறு துறைகளில் வல்லவர்கள் ஆனாலும் சரி தம்மை மிஞ்சுமளவிற்கு எவரும் வரக்கூடாது என்பதே அவர்களின் சிந்தனையாகவும், அதற்காக மற்றவர்களை வஞ்சிப்பதும் கைவந்த கலையாகச் செயற்படுகிறவர்களையே நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எந்த விடயத்திலும் இந்நிலையானது தலை தூக்குவதனால் அறிவைச் சம்பாதிக்க முடியுமே தவிர ஆக்கமான வழிவகைகளைப் பெறுவது மிகக் கடினம். இப்போதுள்ள கலைஞர்களிடம், கலை ஆர்வம் மிக்கவர்களிடம் மலிந்து காணப்படும் இச் செயலானது மறைந்து போகும் நிலை தோன்றுமானால் அவ்ர்களும் புகழின் உச்சிக்கே சென்றுவிடலாம்.

நான் என்ற வார்த்தையை நீக்கி நாம் என்ற எண்ணம் தோன்றுமாயின் அதுவே புகழ் என்னும் ஏணியில் ஏறுவதற்கான ஏறு தடிகளாக உதவி நிற்கும் என்பதில் ஐயமில்லை. இந்த வகையில் முன்னைய காலங்களில் வாழ்ந்த கலைஞர்கள் முன் மாதிரி ஆனவர்கள். திறமை எங்கிருக்கிறதோ அதனைத் தட்டிக் கொடுக்கும் வல்லமை அவர்களுக்கிருந்தது.எதிரியானாலும் சரி விரும்பமில்லாதவர்கள் என யாரையும் ஒதுக்கிவிட இவ்வித கலையுணர்வு கொண்டவர்கள் எண்ணங் கொண்டதில்லை. அவ்விதம் மற்றக் கலைஞர்களை அவரவர் திறன் கண்டு போற்றி புகழ்ந்த மலையாய பழம் பெரும் நாடகக் கலைஞன் நான் "சுபத்திரை ஆழ்வார் " என நாடகப் பாத்திரத்தின் பெயர் கொண்டு அழைக்கப்பட்டவர். தான் நெல்லியடி கிருஷ்ண ஆழ்வார். இவர் இசையில் வல்லவர். நடிப்பில் உயர்ந்தவர். அதனையும் விட வல்லமை பொருந்திய நல்ல கவிஞருமாவார். இத்தனை ஆற்றல் மிக்க இவர் நல்லனகண்டு நயமுரைக்கத் தவறுவதிலலை. காலம் உணர்ந்து, பொருள் புரிந்து திறனறிந்து செயற்படும் பண்பாளர். பொய்யை மெய்யென்று உரைக்காதவர். இவர் வடமராட்சி நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நடிகமணி வீ.வீ.வைரமுத்துவை சிறந்த ஆர்மோனிய வித்தவானாகவும் நல்லதோர் பாட்டுக்காரனாகவும் அறிந்திருந்தவர். வடமராட்சியில் தென் அல்வாயிலும், அதன் பின் தும்பளை நெல்லண்டை, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, புலோலி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும், கலைஞர் வீ.கே.இரத்தினமும் ஒன்றிணைந்து நடிக்கும் "மயானகாண்டம்" இசை நாடகம் பலமுறை மேடையேற்றப்பட்டபோதும் அதனைப் பார்க்கும் சந்தர்ப்பம் சுபத்திரை ஆழ்வாருக்குக் கிடைக்கவில்லை.

"இம்மயான காண்டம் " நாடகம் பற்றி பலரும் புகழ்ந்து கதைக்கும் போதெல்லாம் அந்நாடகத்தைத் தானும் பார்த்து விட வேண்டுமென்ற ஆவல் அவருகிருந்தது. அந்தச் சந்தர்ப்பம் மிக விரைவிலேயே அவருக்குக் கிட்டியது. அவர் பிறந்த ஊரான நெல்லியடிக்கு மிக அண்மையிலுள்ள கரவெட்டி நாவலடி என்னும் இடத்தில் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும், அரியாலையூர்க் கலைஞர் வி.கே.இரத்தினமும் ஒன்றிணைந்து நடிக்கும் காங்கேசன்துறை வசந்தகான நாடக சபாவினரின் "மயான காண்டம் " நாடகம் மேடையேறுவதாகவும் இந்நாடகம் நடைபெறும் அரங்கில் கலையரசு சொர்ணலிங்கம் என்னும் பெரியார் வீ.வீ.வைரமுத்து அவர்களை கௌரவிக்கவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது. இம்முறை எப்படியும் இந்நாடகத்தைப் பார்த்து விடுவோம் என்ற பேராவாவில் பழம்பெரும் கலைஞனான "சுபத்திரை" ஆழ்வார் காத்திருந்தார்.

நாடகம் மேடையேறப்போகும் நாளில் கலைஞர் வீ.கெ.இரத்தினம் அவர்கள் மலேரியாக் காச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். நாடகம் இன்ன நாளென்றும் அதற்கு ஆயத்தமாக இருக்கும்படியும் வீ.வீ.வைரமுத்து அவர்கள் கலைஞர் இரத்தினத்திற்கு கடிதமூலம் அறிவித்திருந்தார். ஆனால்

அக்கடிதத்திற்குப் பதில் எழுதும் நிலையில் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் இருக்கவில்லை. நாடகம் நடைபெற இருக்கும் தினத்தன்று மாலை ஐந்து மணியிருக்கும் சகல ஆயத்தங்களோடும் நடிகமணி வீ.வீ.வைரமுத்து மற்றைய கலைஞர்களோடு கலைஞர் வீ.கே.இரத்தினத்தை அழைத்துச் செல்ல மோட்டார் வாகனத்தில் அரியாலையில் இருக்கும் இரத்தினம் அவர்களின் வீடு வந்து சேர்ந்தார். கலைஞர் வீ.கே. இரத்தினம் அங்கேஇருக்கும் நிலை கண்டு நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும், மற்றும் கலைஞர்களும் மனமுடைந்து போனார்கள். முக்கியமான ஒரு நாடகம் அதுவும் ஈழத்து நாடக உலகின் தந்தையெனப் போற்றப்படும் முதுபெரும் நாடக்க கலைஞர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் முன்னிலையில் நடைபெறப் போகும் நாடகம், இதுவே மிகவும் மனமுடைவிற்குக் காரணமாக இருந்தது. அதோடு கலைஞர் வீ.கே.இரத்தினத்தின் தந்தை.தாயார்,மனைவி இவர்கள் அவரை இக் காய்ச்சல் நிலையில் நாடகத்திற்கு அனுப்பத் தயாராக இருக்கவில்லை. எல்லோரும் யோசனையில் ஆழ்ந்திருந்தார்கள். அங்கே வந்திருந்த கலைஞர்களுள் ஆர்மோனியம் வாசிக்கும் கலைஞரான நாகமுத்து அவர்கள் எப்படியும் கலைஞர் வீ.கே.இரத்தினத்தை கூட்டிச்செல்ல வேண்டுமென்ற முடிவிற்கு வந்தார். அதற்கான ஓர் உபாயத்தை கையாள நினைத்தார். அது மிகவும் சுவர்சியமான ஒரு நிகழ்ச்சி. ஆர்மோனியக் கலைஞர் நாகமுத்து அவர்கள் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களின் வீட்டாரைப் பார்த்து "எனக்கு செம்பு ஒன்றில் தண்ணீரும், வேம்பமிலையும் கொண்டு வந்து தருமாறு" கேட்டார். வீட்டாரும் அவர் கேட்டுக் கொண்ட பொருட்களைக் கொண்டுவந்து அவர் முன் வைத்தார்கள். மேலும் அவர் கேட்டுக் கொண்ட பொருட்களைக் கொண்டு வந்து அவர் முன வைத்தார்கள். மேலும் அவர் வீட்டாரைப் பார்த்து " ஒரு தட்டில் திருநீறும் தருமாறு" கேட்டக் கொண்டார். திருநீறும் அவர் முன்வைக்கப்பட்டது. இப்பொழுது எல்லோரையும் விலகி இருக்கும்படி பணித்த கலைஞர் நாகமுத்து அவர்கள் "கையில் மும்முறை நீர் எடுத்து ஏதோ வாயில் முணுமுணுத்தவாறு கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் முகத்தில் தெளித்தார். வேப்பிலையைக் கையில் எடுத்து கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களின் மேலெல்லாம் தடவி அதனையும், தண்ணீர்ச் செம்பையும் கையிலெடுத்து தெருவாசல் பக்கம் சென்று செம்பிலிருந்த நீரை வெளியே ஊற்றி வேப்பிலையினையும் வீசி எறிந்து விட்டு உள்ளே வந்து திருநீற்றினை இரத்தினம் அவர்களின் நெற்றியில் பூசியபின் எல்லாம் சரி கொஞ்ச நேரம் கண்ணை மூடி நித்திரை கொள்ளுமாறு கூறிவிட்டு வெளியே வந்தார். வந்தவர் நடிகமணி அவர்களை கையசைத்து வெளியே தன்னிடம் வருமாறு கூறினார். நடிகமணி வீ.வீ.வைரமுத்துவுக்கு ஒரே ஆச்சரியம் கலைஞர் நாகமுத்துவின் செய்கைகளைப் பார்த்தவர் அவர் அழைத்ததும் வெளியே வந்தார். நாகமுத்து அவர்கள் நடிகமணியைப் பார்ததுச் சிரித்தார். என்ன? ஆச்சரியமாக இருக்கிறதா? இது ஒரு மன நிலை மாறுவதற்கான

வைத்தியம் நீங்கள் எல்லோரும் புறப்பட ஆயத்தமாகுங்கள்.நிச்சயம் இரத்தினமும் எம்முடன் வருவான். சவலைப்படாதீர்கள்" என்றார். நேரம் அரைமணித்தியாலங்களைக் கடந்த நிலையில் ஆர்மோனியக் கலைஞர் வீ.கே.இரத்தினம் அருகே வந்தார். "இரத்தினம் ! இரத்தினம்! எழும்பு இப்போ எப்படிச் சுகம் தானே! அதெல்லாம் சமாளிக்கலாம் வெளிக்கிட்டுவா எனக் குரல் கொடுத்தவாறு கலைஞர் வீ.கே.இரத்தினத்தின் நாடக உடுப்புப் பெட்டியைக் கொண்டு வருமாறு கூறினார். இரத்தினத்தின் மனைவியும் மறுபேச்சின்றி பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்தார். இரத்தினம் அவர்களும் மறுபேச்சின்றி பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்தார். இரத்தினம் அவர்களும் மறுபேச்சின்றி ஆயத்தமாகி வெளியே வந்தார். எல்லோரும் வாகனத்தில் ஏறினர். கலைஞர் வீ.கே.இரத்தினம் குடும்பத்தினர் செய்வதறியாது ஏங்கி நிற்க, வாகனம் புறப்பட்டது. உள்ளுக்குள் நோயின் வேகம் இருந்த போதும் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் அதனைத் காட்டிக் கொள்ளவில்லை. இந்த நாடகப் பயணத்தின் மூலம் தனக்கு ஒரு பெரும் நாடகக் கலைஞனின் ஆசி கிடைக்கப் போகிறது என்பதை கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார். இதன் மூலம் தனக்கும் நடிகமணி வீ.வீ வைரமுத்துவிற்கும் ஈழத்து நாடக உலகில் முத்திரை பதிக்கும் காலம் வரப்போகிறது என்பதையும் அவர் நினைத்திருப்பாரா?

இறைவனின் செயற்பாடுகள் தான் என்னே? விந்தையிலும் விந்தை என்றே கூற வேண்டும் எங்கெங்கோ பிறந்து வளர்ந்து கலையுலகில் கால் பதித்த கலைஞர்களை எங்கோ ஒரு மூலையில் எப்பொழுதாவது சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது நாடகமாடிவிட்டு ஊரவரின் கைதட்டலுக்கு மத்தியில் பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவுமொன்று எனக் கைகழுவிகாரிய மாற்றும் வலுக்குறைந்த சமூகத்தில் பிறந்த இக்கலைஞர்களை ஒன்றிணைத்து கலையுலகில் இசை நாடகத்திற்கு புதியதோர் அத்தியாயத்தை உருவாக்கப் போகிறது என்பதை அவனன்றி வேறு யாரால் அறிய முடியும. அவன் ஆட்டுகிறான் நாம் ஆடுகிறோம். அவனல்லால் ஓர் அணுவும் அசையாது. இந்தக் கருத்தினை நான் ஏன் கூறுகிறேன் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். முன்னேறி வரும் சமுதாயத்தின் கதவுகள் வலுக்குறைந்தோர் சமுதாயத்தில் பிறந்தவர்களுக்கு வழிவிடாது. இறுக மூடியிருந்த காலகட்டத்திலே வலுக்குறைந்தோர் சமூகத்தில் கலைஞர்களாகத் தோன்றிய நடிகமணி வீ.வீ.வைரமுத்து, கலைஞர் வீ.கே.இரத்தினம் போன்றவர்கள் கலை என்னும் திறவுகோலைப் பாவித்து எதிர்நீச்சல் புரிந்து பூட்டிய கதவுகளைத் திறந்து முன்னுக்கு வந்தார்கள்.எனறால் அது யாருடைய செயற்பாடு அந்த ஒருவனின் செயற்பாடுதானே!

வாகனம் கரவெட்டி நாவலர்மடம் (நாவலடி) பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் அரங்கினை அண்மித்து விட்டது. அங்கே கூடி நின்றவர்கள் ஆரவாரத்துடன் நாடகக்காரரின் வாகனம் வந்து விட்டது, வந்து விட்டது என ஆர்ப்பரித்து நிற்க, நாடகத்தினை

ஒழுங்கு செய்தவர்கள் நாடகக் கலைஞர்களை வரவேற்று அரங்கின் "மேக் அப்"செய்யும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். உடையலங்காரங்கள் முடிவுற்று நாடகம் குறிப்பிட்ட நேரத்தில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் தலைமையில் மேடையேறிக் கொண்டிருந்தது. நோயுற்ற நிலையிலும் கூட கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் தன்னையும் மறந்து ஏற்றுக் கொண்ட சந்திரமதி பாத்திரத்தை கனகச்சிதமாக நடித்துக் காண்பித்துக் கொண்டிருந்தார். சபையோரும் மிகச் சோகமயமான அந்த "மயானகாண்டம்" இசை நாடகத்தினை சோகமே உருவான நிலையில் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இம்மயான காண்டம் நாடகத்தில் ஒரு கட்டம் "காலகண்ட ஐயரின் பணிப்பின் பேரில் தன் மகன் தேவதாசனை தற்பைப்புல் கொய்வதற்காக அயலாற்றுப் பிள்ளைகளுடன் காட்டிற்கு அனுப்பிவிட்டு அவன் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பாள் சந்திரமதி. அவள் இடுப்பிலே தண்ணீர் கொண்டு வருவதற்கான மண்குடம் இருக்கும் அதனை ஒரு கையால் அணைத்தவாறு மறுகையினை நீட்டியவாறு பின்வரும் பாடலைச சந்திரமதி இசைப்பாள்.

"காட்டிற்குப் போன எந்தன் கண்மணி அந்தி
சாய்ந்தும் வீட்டிற்கு வரவும் காணேன்"

என பாடி முடிக்கையில் அயலாற்றுச் சிறுவர்கள் வரும் காட்சியை அவள் காண்பாள். அங்கே தன்புதல்வனைக் காணாது திகைத்துப்போல் எங்கே என் மகன் ! எங்கே என் மகன் என அயலாற்றுப் பிள்ளைகளையும் கேட்பாள். அவர்கள் பாம்பினால் அவள் மகன் இறந்ததைக் கூறும் பொழுது தன்னையுமறியாது சந்திரமதியானவள் துக்கமடையும் பொழுது அவள் கைகளிலே இருக்கும் பானை கைநழுவிக் கீழே வீழ்ந்துடையும் இந்தக் காட்சியில் ஒரு தாய்மையின் வெளிப்பாட்டினைக் குறியீடுகளால் விளக்கும் கட்டத்தில் உருக்கமாக நடித்து எல்லோரையும் கதிகலங்கச் செய்தார் நடிகர் வீ.கே.இரத்தினம் அவர்கள். இந்த மயான காண்டம் இசை நாடகத்தில் முழுமையான நடிப்பு அரிச்சந்திரனாக நடிக்கும் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவிற்கும் சந்திரமதியாக நடிக்கும் வீ.கே.இரத்தினம் அவர்களுக்குமே இருக்கும். இவரின் திறமையான நடிப்புமே இந்த நாடகம் இற்றைவரை மக்கள் மனதில் நீக்கமற நிலைத்து நிற்பதற்கும் காரணமாகும்.

நாடகம் முடிவடைந்ததும் அங்கு ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக வீ.வீ.வைரமுத்து அவர்கள் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் கௌரவிக்கப்படும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. வழமையில் நாடகம் முடிந்தால் மக்கள் மற்றைய நிகழ்சிகளைப் பொறுமையோடு பார்க்க மாட்டார்கள். எழுந்து சென்று விடுவார்கள். ஆனால் இந்த நாவலர் மடத்தில் அப்படி நடக்கவில்லை. கௌரவிக்கப்பட இருக்கும் கலைஞனை நேரடியாக நாடக வேடமின்றித் தரிசிப்பதற்காக மக்கள் எவரும் அசையாது அப்படியே இருந்தார்கள்.

நாடகத்தில் பங்கு பற்றிய கலைஞர்கள் மேடையில் அமர்ந்திருக்க கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தனது உரையினை ஆரம்பித்தார். இந்த "மயான காண்டம்" இசை நாடகத்தினை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதனை நாடகம் முடிவடைந்த பின்பும் அக்கலைஞர்களைக் கௌரவிக்கும் இவ்விழாவை அவர்கள் கண்டுகளிக்க இருப்பதிருந்தே நான் உணரக் கூடியதாக இருக்கின்றது. ஒரு பொய்யாவது பேசக்கூடாது உண்மையே பேச வேண்டும் என்பதில் நிலையாக நிற்கும் ஒரு மன்னனின் குடும்பம் எவ்வளவு சோதனைகளையும் வேதனைகளையும் சந்திக்கிறது என்பதை விளக்கும் இந்த நாடகத்திலே தமது பொறுப்புக்களை உணர்ந்து தாம் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களை மிகச் செம்மையாக மக்கள் மனதிலே பசுமரத்தாணிபோல் பதிய வைத்துள்ளார்கள். இங்கே பங்கு பற்றிய கலைஞர்கள் குறிப்பாக பெண் சந்திரமதி பாகம் ஏற்று நடித்த கலைஞர் இரத்தினம் அவர்களின் அசைவுகள், நளினங்கள், அவரின் இசையாற்றல், நடிப்புத்திறமை உண்மையிலேயே சந்திரமதியை நாம் நேராகக் காணும் நிலையை இங்கே தோற்றுவித்தது. இருந்தாலும் இங்கே அரிச்சந்திரன் பாகமேற்று நடிக்கும் ஒப்பற்ற கலைஞன் வீ.வீ.வைரமுத்து அவர்களைக் கௌரவிக்கும் பணியை ஏற்று நான் வந்துள்ளேன். வீ.வீ.வைரமுத்து அவர்களின் நடிப்பு சாதாரணமானதல்ல தென்னிந்தியக் கலைஞர்களுக்கு நிகராக எம்மண்ணிலும் தரம் வாய்ந்த கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இந்த நடிகனிடம் சகல விடயங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இக்கலைஞன் கலைஞர் வீ..வீ.வைரமுத்து அவர்கள் ஈழத்து நாடக வரலாற்றிலேயே ஒரு தன்னிகரில்லாத கலைஞனாக நிலைத்து நிற்பார் என்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை. அவ்விதமான இக்கலைஞனை இன்றிலிருந்து இந்நாவலர் மட மக்கள் சார்பாக நடிகமணி வீ.வீ.வைரமுத்து எனப் பெயர் சூட்டி மகிழ்கிறேன். என மிக இரத்தினச் சுருக்கமாகப் பேசிய அவர் பொன்னாடை போர்த்தி நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களைக் கௌரவித்தார். அன்றிலிருந்துதான் வீ.வீ.வைரமுத்துஅவர்கள் நடிகமணி வீ.வீ.வைரமுத்து என பலராலும் அழைக்கப்படலானார்.

நிகழ்வுகள் இனிது முடிந்து கலைஞர்கள் ஒப்பனை அறையிலே இருந்த போது அங்கே ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் ீஎல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். அங்கு நின்ற எல்லோருக்கும் அவர் யார் என்பது தெரியவில்லை. ஒருசிலருக்கு மட்டுமே அவர் யார் என்பது தெரியும் அந்த ஒருசிலர் எழுவதைக் கண்டே மற்றவர்களும் மரியாதைக்காக எழுந்தார்கள். எல்லோரையும் அமரச் செய்த அந்த மனிதர் வைரமுத்து அவர்களை முதலில் ஆரத்தழுவி தன் அன்பைத் தெரிவித்தார். நடிகமணியான வீ.வ.வைரமுத்து அவர்களை முன்பே அந்த மனிதர்

வேறு யாருமல்ல, சுபத்திரை ஆழ்வார் எனதான் ஏற்று நடித்த பாத்திரப் பெயரால் பலராலும் மதிக்கப்படும். கிருஸ்ண ஆழ்வார் அவர்களே வடமராட்சி மண்ணில் இந்தக் கலைஞனைத் தெரியாதவர்களே இல்லை எனலாம். அவ்விதம் சிறப்பு வாய்ந்த அக்கலைஞன் அங்கு நின்றவர்களை அமரச் சொல்லிவிட்டு சந்திரமதியாக நடித்த தம்பி யார்? என வினாவினார். தற்பொழுது நடிகமணியாகப் பரிணமித்திருக்கும் வீ.வீ.வைரமுத்து அவர்கள் சந்திரமதியாக நடித்த கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களை அந்தப் பெருங்கலைஞனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். கிருஸ்ண ஆழ்வார் கலைஞர் வீ.கே.இரத்தினம் அருகே வந்தார் தம்பி நீ நன்றாக நடிக்கிறாய் முன்பு நானும் உன் போல் பெண்வேடமிட்டு நடித்தவன். அதனால்த்தான் இன்றும் என்னைச் சுபத்திரை ஆழ்வார் என எல்லோரும் நான் நடித்த பாத்திரப் பெயர் கொண்டு அழைக்கிறார்கள். பெண் பாத்திரத்துக்கான சகல பொருத்தங்களும் உனக்குண்டு. நீர் ஒரு நிறைவான கலைஞன். உன்னைப் போல பெண் பாத்திரத்திற்கு சகலமும் பொருத்தமான ஒரு கலைஞன் உன் மூலம் தான் தோன்ற முடியும். உனக்கு நிகர் எவருமில்லை. அதற்காக என்னை விட ஒருவன் இல்லையென பெருமிதம் கொள்ளாமல் கலை உலகத்திற்கு நீர் ஆற்ற வேண்டிய நற்பணியை நல்ல முறையில் செய்துவா! நீரும் தம்பி நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும் ஈழத்து நாடக உலகில் நன்கு மதிக்கப்படுவீர்கள் அதற்கான இசைவளமும் குரல் வளமும் உங்களிடமுண்டு. என ஆசீர்வதித்தார்.

அவரின் அடக்கமான பேச்சும், நிதானமான போக்கும் அவர் முகத்திலே மிளிரும் சந்தோசமும் கலைஞர் வீ.கே.இரத்தினத்தை ம்டுமல்ல அங்கு நின்றோர் அனைவரையும் நன்கு கவர்ந்தது. அவரின் நல்லாசியைப் பெற்ற கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் அவரை இரு கரங்களையும் கூப்பி வணங்கி ஐயா! தங்களின் ஆசி என்றும் என்னை நல்வழியில் நல்ல கலைஞனாக இட்டுச் செல்லும் என நான் முழுமையாக நம்புகிறேன். நன்றி ஐயா! எனச் சொன்னார். அந்தப் பெரியவரின் ஆசி வீண்போகவில்லை. காலப்போக்கில் ஈழத்து நாடக உலகில் அதுவும் மரபு இசை நாடக வரலாற்றில் இவர்கள் இருவரும் பல பரிணாம வளர்ச்சிகளை அடைந்தார்கள். அவர்கள் எல்லோராலும் போற்றப்பட்டார்கள் நன்கு மதிக்கப்பட்டார்கள். இவர்கள் இருவரில் நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்கள் நம்மிடையே இன்று இல்லை. கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் இன்றும் இசை நாடக மரபை பேணிவளர்த்து, நெறியாள்கை செய்து, காத்து வருகின்றார்.

# மலர் மணம் 10

## "வன்னியில் நாடக விழா"

நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும், வீ.கே.இரத்தினம் அவர்களும் இணைந்து நடித்த காங்கேசன்துறை வசந்தகான நாடக சபாவின் நாடகங்களுக்கு 1960ம் ஆண்டிற்குப் பின் நல்ல வரவேற்பிருந்தது. கோவில் திருவிழாக்கள், களியாட்ட விழாக்கள் வேறு பல அமைப்புக்களின் நிதி சேகரிப்புக்களுக்காகவும் இவர்களின் மரபுவழி இசை நாடகத்தை நாடிப் பலரும் வருகை தர ஆரம்பித்தார்கள். இதனால் இம் மன்றம் தொழில் முறையில் நாடகங்களை மேடையேற்றிவரத் தடைப்பட்டது. தனியே மயான காண்டம் இசை நாடகத்தினை மேடையேற்றி வந்த இவர்கள் "சம்பூரண அரிச்சந்திரா" என்ற பெயரில் அரிச்சந்திர மகாராஜனின் கதையை முழுமையாகவும் மேடையேற்றி வந்தார்கள். மேலும் மக்களின் ஆர்வம் இவர்களின் நாடகங்களின் மேல் செல்லத்தலைப்பட்டபோது புதிய நாடகங்களையும் இவர்கள் அரங்கேற்ற வேண்டிய காலத்தின் தேவை ஏற்பட்டது. அதனால் ஸ்ரீவள்ளி, பக்தநந்தனர், ஏழுபிள்ளை நல்ல தங்காள், பாமா விஜயம், சத்தியவான் சாவித்திரி, கோவலன் கண்ணகி, சாரங்கராதா, ஞானசௌந்தரி, அல்லி அருச்சுனா ஆகிய நாடகங்களையும் மேடையேற்றினார்கள். இவையாவும் பாரத நாட்டின் தமிழ் நாடகத் தந்தையெனப் போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகளால் எழுதப்பட்டவை. மேலும் தென்னிந்திய சினிமாவில் சில வெளியாகி வந்தவை.

இருந்தாலும் இந்நாடக சபாவினர் மக்களின் இரசனைக்கேற்ப மேடை நாடக வடிவில் இவற்றைத் தயாரித்து பதிய பாடல்களையும் உருவாக்கி நல்ல முறையில் வெளிக்கொணர்ந்தமையினால் இவர்களின் இவ்விசை நாடகங்களுக்கு தனிமவுசு ஏற்பட்டது.

இலங்கை வானொலியில் பல நாடகங்களை எழுதியும், மேடையேற்றியும் வந்த இலங்கையர்கோன் என அழைக்கப்படும் சிவஞான சுந்தரம் அவர்கள் பற்றி முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். இவர் இலங்கை நிர்வாக சேவையில் கடமை புரிந்தவர். இவரே மயான காண்டம் மரபுவழி இசைநாடகத்தினை ஒரு மணித்தியாலத்தில் நடித்து முடிக்கக் கூடியதாக ஆக்கியவர் நடிகமணி வீ.வீ.வைரமுத்து மீது நல்லன்பு கொண்டு விளங்கியவர் இவர். வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி என்னும் பிரதேசப் பெரும் பாகப் பிரிவில் காரியதிகாரியாகக் (D.R.O) கடமை புரிந்த காலத்தில் வன்னி நெடுங்கேணியில் ஒரு நாடக விழாவினை ஒழுங்கு செய்யும் நோக்குடன் வவுனியாவில் அவரின் மேலதிகாரியான அரசாங்க அதிபரை அணுகினார். அரசாங்க அதிபர் அவரின் வேண்டுகோளை நிராகரிக்கவில்லை. மாறாக வவுனியா

விலும் நாடக விழா ஒன்றினை ஒழுங்கு செய்யும்படி கூறினார். காரியாதிகாரியான இலங்கையர்கோன் (சிவஞானசுந்தரம்) அவர்கள் நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களை அணுகி நாடகவிழா பற்றிக் கூறி, அவர்களின் அனுமதியையும் பெற்றுக் கொண்டார். வீரகேசரி, தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகள் இந்நாடக விழா நடைபெற இருப்பது பற்றி விளம்பரம் செய்தன. கிராமத்து நாடகங்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவ்வூர் மக்களின் நாடகங்கள் முதலிரு நாட்களும், இறுதி மூன்றாம் நாள் நாடகமாக மயான காண்டம் நாடகமும் நெடுங்கேணியில் அரங்கேற இருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் நடிகமணி வீ.வீ.வைரமுத்து குழுவினருக்கு வசதியாக நெடுங்கேணி நாடக விழா நாடகம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்நாடக விழாவில் சாரங்காராதா என்னும் இசைநாடகமே மேடையே பெறுவதாக ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையர்கோன் அவர்களின் ஏற்பாட்டில் நெடுங்கேணியில் இறுதிநாள் நிகழ்ச்சியாக இடம்பெற்ற மயானகாண்டம் இசை நாடகத்தை அவ்வூரார் நன்கு ரசித்தார்கள். குறிப்பாக பெண் வேடத்தில் நடித்த கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களின் சோக நடிப்பை பலரும் புகழ்ந்தார்கள். நாடகம் முடிந்த பின் ஒப்பனைப் பகுதியை முற்றுகையிட்ட அவர்கள் சந்திரமதி பாத்திரமேற்றவர் ஆணா! இல்லை அவர் பெண்தான் எங்கே அவரைக் காட்டுங்கள் என முண்டியடித்து அவரைப் பார்ப்பதற்காக நின்றார்கள். நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்கள் ஒப்பனையை நீக்கிய நிலையில் நின்ற கலைஞர் வீ.கே.இரத்தினத்தை நேரடியாக காண்பித்த போது தான் அவர்களால் சந்திரமதி பாகம் ஏற்று நடித்தவர் ஆண் என்பதை நம்ப முடிந்தது. அவ்வளவு பெண்மைக்கான வேடப்பொருத்தம் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களிடம் காணப்பட்டமையும், பாடல் இசைப்பதிலும், சோகம், ததும்ப நடிப்பதிலும் அவர் காட்டிய திறமையே மயான காண்டம் நாடகம் மக்களிடையே பிரபல்யமடையக் காரணமாக இருந்தது. அதற்காக நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களையும் மற்றைய நடிகர்களையும் குறைத்து மதிப்பிடுவதாக எண்ணக் கூடாது. மயான காண்டம் நாடகத்தைப் பொறுத்தவரை சந்திரமதி பாத்திரமே முக்கால் பங்குவரை நிறைந்து காணப்படுவதால் இதனை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அதனை உறுதி செய்வது போல் வவுனியா நாடகவிழாவில் உரையாற்றும் போது இலங்கையர்கோன் (சிவஞானசுந்தரம்) அவர்கள் காலகண்ட ஐயர் வீட்டில் அடிமைப் பெண்ணாகப் பரிதவிக்கும் சந்திரமதியை, காட்டிலே பாம்பினால் கடியுண்டு கிடக்கும் தன் மைந்தனைக் கட்டியழும், தாய்மை நிலையில் சந்திரமதியானவளை, மயானத்திலே பிணமான தன் மகனைச் சுடச்

சென்ற வேளையிலே பிணம் சுடும் புலையன் தன் தாலியைக் கண்டு விட்டதால்த் தன் கற்பிற்குத் களங்கம் ஏற்பட்டுவிட்டதே எனக் கலங்கும் சந்திரமதியை, புலையனாக நிற்பவன் வேறு யாருமல்ல தன்கணவன் அரிச்சந்திரன் தான் என்பதைக் கண்டு துடித்துப் போகும் சந்திரமதியை, முழுமையாகவே நெடுங்கேணி நாடக விழாவில் நிலை நிறுத்திக் காண்பித்த கலைஞனை யதார்த்தம் என்றால் என்ன என்பதை எமக்குதன் நடிப்பாற்றலினால் வெளிப்படுத்திக் காண்பித்த நடிப்பிசைக்கலைஞனை நான் மய்யானகாண்டம் நாடகத்தில் கண்டேன். அந்த இரத்தினம் என்னும் கலைஞன் இன்று உங்கள் சித்திராங்கி என்னும் பெண்ணாகத் தோன்றி சாரங்கதரன் வேடமிடும் நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்களுடன் காதல் ரசம் சொட்டும் பாத்திரத்தில் உங்களை மகிழ்விக்க இருக்கிறார். இலங்கையில் மரபவழி இசைநாடகத்தினை முன்னணியில் திகழ வைத்த வரும் இக்கலைஞர்களை வவுனியா மக்களாகிய நீங்களும் தரிசிக்கப்போகிறீர்கள் எனக் குறிப்பிட்டுப் பேசியதிலிருந்து கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் பெண்பாத்திரமேற்று நடிப்பதில் பெற்ற ஆளுமையை நாம் உணரக் கூடியதாகவுள்ளது. மேலும் வவுனியாவில் மேடையேறிய சாரங்கராதா இசை நாடகத்தினை முழுமையாக இருந்து ரசித்த சிங்கள அரசாங்க அதிபரும் இசையுடன் கலந்த இவ்விதமான நாடகங்களை சிங்களக் கலைஞர்கள் கூட நடித்தமையை தான காணவில்லையென கூறியிருந்தார். அவரின் இந்தக் கூற்று மரபுவழி இசைநாடகம் தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை என்பதை அறுதியிட்டுக் கூற ஏதுவாகும். என்பதை நாம் மற்ககவியலாது.

நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும், கலைஞர் வீ. கே.இரத்தினம் அவர்களும் தமிழ் நாடக வரலாற்றில் காலத்தால் அழிக்க முடியாத கலைஞர்கள் என்பதை ஈழத்து நாடக வரலாற்றை எழுதுகின்ற எந்த எழுத்தாளர்களும் புரிந்து கொள்வார்கள். என நான் கருதுகிறேன். பெண் நடிகராக கல்லைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் புரிந்த சாதனைகளையுதட, இன்லும் இசைநாடக மரபை வளர்த்துவரும் அவரின் நட்டுவாங்க செயற்பாடுகளையும் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் கவனிப்போம்.

## மலர் மணம் 11
## சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில்

இயல், இசை, நாடகம் எனத் தமிழ் மூன்று வகைப்படும். என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இயல் என்பது வசனநடை அலங்காரப் பேச்சுக்களானது. இசை பாடல்களாக கவிதைகளாக வெளிக்கொணரப் படுகிறது. ஆனால் நாடகமோ இயலும், இசையும், அத்துடன் அசைவும் ஒருங்கமைந்த வெளிப்பாடாகத் தோற்றமளிக்கின்றது. இந்த நாடகத்தமிழின் மூலம் தான் சாதாரண மனிதர்களின் முன் எந்த விடயத்தையும் இலகுவாக தெளிவு படுத்தி புரிய வைக்க முடியும். குருடனால் பார்க்க முடியாது கேட்க முடியும். செவிடனால் கேட்க முடியாது பார்க்க முடியும் அசைவுகளை உணர முடியும். ஊமையினாலே கேட்க முடியாது அசைவுகளை உணர முடியும். செவிடனாலும் ஊமையினாலும் உணரக்கூடிய, அசைவினை பார்க்க முடியாத நிலையிலிருக்கும் குருடன் கேட்டு அறியக் கூடிய ஊடகமே நாடகமாகும். அதிலும் இசைநாடகத்தில் வசனப்பாணியும் இசையின் மேலோங்கிய ஊடுருவலும் நிறையப் பெற்று இருப்பதனால் பாமர மக்களிடையே இசைநாடகம் முதன்மை பெற்றது. ஆட்ட நாட்டுக் கூத்துக்களில் இவை இருந்தபோதும் அவற்றைக் கிரகிக்கும் தன்மையை பாமர மக்கள் உணர்ந்து கொள்ள முடியவில்லை. காலப்போக்கில் இசைநாடக வளர்ச்சியின் காரணமாக ஆட்ட நாட்டுக் கூத்துக்கள் அரங்கேறுவது குறைந்து கொண்டு போனது. இசைநாடகங்களை பலரும் மேடையேற்றி வந்த போதும் கலைஞர் வீ.கே.இரத்தினம், நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களும் இணைந்து நடித்த இசை நாடகங்களுக்கே மக்களிடையே பெருவரவேற்பிருந்தது.

அறுபதுகளில் உச்ச நிலையில் அரங்கேறிக் கொண்டிருந்த இவ்விசை நாடகங்கள் பல நிதி சேகரிப்புக்களுக்காக பல இடங்களில் மேடையேறி வந்தது. வசாவிளான் மத்திய மகா வித்தியாலய நிதி சேகரிப்புக்காக வி.என்.செல்வராசா அவர்களின் கோவலன் கண்ணகி என்னும் இசை நாடகமும், நடிகமணி வீ.வீ.வைரமுத்துவின் வசந்தகான நாடக சபாவின் வழங்கிய அரிச்சந்திரா மயானகாண்டம் நாடகமும் மேடையேறின. இந்த நாடக விழாவே கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்த நாடகங்கள் மேடையேறிய தினத்தன்று மேற்படி வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபரினால் (அதிபரின் பெயர் தெரியவில்லை) கலைஞர் வீ.கே.இரத்தினம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டு சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் என்ற பட்டமும் அவருக்கு வழங்கப்பட்டது.

அன்றிலிருந்தே கலைஞர் வீ.கே.இரத்தினம் சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் வீ.கே.இரத்தினம் என அழைக்கப்படலானார்.

பட்டங்கள் பலருக்கும் வழங்கப்படுகின்றன. இருந்தாலும் அந்தப் பட்டங்கள் நாளடைவில் தெரியாமலே போய் விடுகின்றன. ஒரு சிலரின் பட்டங்கள் நிலையாகி விடுகின்றன. அவ்வாறு நிலையான பட்டத்தினால் அழைக்கப்பட்ட கலைஞர்களில் வி.கே.இரத்தினம் அவர்களும் சேர்க்கப்பட்டார். சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டமையினால் நிலையானது. இவ்விழாவின் பின்னர் எங்கு நாடகங்கள் ஒழுங்கு செய்யப்பட்டாலும் நடிகமணி வி.வி வைரமுத்துவும், சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் வி.கே.இரத்தினமும் தோன்றி நடிக்கும் இசை நாடகமென்றே பிரசுரங்களிலும் அறிவிப்புக்களிலும் தெரியப் படுத்தப்பட்டு வந்தன.

## மலர் மணம் 12

## கூவிலில் நாடகமும், புதிய கலைஞரின் வருகையும்

அழியாத நாடகக் கலையை வளர்க்கும் கலைஞர்கள் பலர் தோன்றிய வரலாறுகள் மக்கள் முன் கொண்டுவரப்பட வேண்டும். நாடகமே உலகம். நாடகமே உயிர் மூச்சு என்று வாழ்ந்த அவர்களின் வரலாறு வளர்ந்த வரும் புதிய சமுதாயத்திடம் எழுத்துருவில் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் வரலாறுகள் பாதுகாக்கப்படும். இந்த வகையிலே யாழப்பாண பல்கலைக்கழகம் ஆற்றி வரும் பங்கு அளப்பரியது. காலத்தால் அழிக்க முடியாத கலைஞர்கள் பற்றி அவர்கள் மேற்கொண்டுவரும் ஆய்வின் மூலம் இலை மறை காயாக வாழ்நது வரும் கலைஞர்களின் கலையுலக வரலாறுகள் சரித்திரமாக்கப்பட்டு வருகின்றன. அவ்விதம் வரலாறாக்கப்படுகின்ற பதிவுகள் யாவும் பல்கலைக்கழக அலுமாரிகளில் முடக்கப்படாமல் சமுதாயத்தின் கண்களுக்க வெளிச்சமாக்கப்பட வேண்டும்.

கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களின் வரலாறு பற்றிக் கூறவந்த நான் அவருடைய ஆய்வுகளோடு நின்றுவிடாமல் மேற்கூறிய கருத்துக்களை முன் வைத்த காரணம் பண வசதி அற்ற கலைஞர்கள் இந்த மண்ணிலே வாழ்ந்து பத்தோடு பதினொன்றாக கருதப்பட்டு யாருக்குமே தெரியாதவர்களாக போயிருக்கின்றார்கள். நடந்த முடிந்த யாழ்ப்பாண இடம் பெயர்வினால் தாம் சேகரித்து வைத்த தகவல், ஆவணங்களை

இழந்து போயிருக்கிறார்கள். இன்னும் சில கலைஞர்கள் புதிய கலைஞர்களை உருவாக்கி அவர்களை முன்னேற்றப் பாதையில் உலவவிட்டு முன்னனியில் நிற்கும் அவர்களால் புறக்கணிக்கப்பட்டும் இருக்கிறார்கள். காலத்தால் அழிக்க முடியாத அக்கலைஞர்கள் இறந்தாலும் கலையின் பெயரால் அவர்கள் இந்த மண்ணிலே நிலைக்க வேண்டும். கலைஞர் வி.கே.இரத்தினம் அவாகள் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் இவர் தான் பயின்ற இசை நாடக கலையினை மற்றவர்களும் கற்று முன்னுக்க வர வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர். அதன் காரணமாக இளைய தலைமுறைக் கலைஞர் ஒருவரை மேடையேற்ற ஆசைப்பட்டார். தனது உறிவனரான திரு.வடிவேலு செல்வரட்ணம் என்னும் இளைஞனை முதல் முறையாக மேடையேற்றுவித்தார்.

காலம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகருமான மான்புமிகு எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் காங்கேசன்துறை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப் பட்டமையை முன்னிட்டு அவரை பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக கீரிமலை கூவில் வாழ் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக காங்கேசன்துறை வசந்தகான நாடக சபாவின் சார்பில் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும் சோகச்சோபித சொர்ணக் கவிக்குயில் வி.கெ.இரத்தினமும் சத்தியவானாகவும், சாவித்திரியாகவும் நடித்த "சத்தியவான் சாவித்திரி" என்னும் இசை நாடகம் மேடையேறியது. இந்த நாடகத்தில் சாவித்திரியின் தோழியாக திரு.வ.செல்வரத்தினம் நடித்தார். நாடக உலகத்துக்கு புதியவரான இவர் மிக கூச்ச சுபாவம் உடையவராக இருந்தார் என கலைஞர் வி.கே.இரத்தினம் என்னிடம் பலமுறை கூறியுள்ளார். பெண் நடிகருக்கான வேடப்பொருத்தம் நன்றாக இருந்தமையாலும் கணீரென்ற குரலோசை இந்த இளம் நடிகரிடம் காணப்பட்டமையாலும் இவரை நல்ல நடிகராக்க முடியும் என முடிவு செய்து தான் செயற்பட்டதாகவும் கலைஞர் தன் செவ்வியின்போது என்னிடம் கூறினார். கலைஞர் இரத்தினம் அவர்களின் நட்டுவாங்கத்தில் வளர்ந்த முதல் கலைஞர். இந்த வடிவேலு செல்வரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது

இக்கலைஞரை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்கள் காலம் சென்ற கவிஞர் கே.வி. ஐயாத்துரையும், கலைஞர் வி.கே. இரத்தினம் அவர்களும் என்றால் அதனை யாரும் மறுக்கவோ, மறுக்கவோ முடியாது. அரியாலை கலைமகள் நாடக சபாவின் முன்னோடிகளான இவர்கள் பல நாடக மேடைகளில் தோன்றிய போதும் இவர்களால் வழிநடத்தப்பட்ட நாடகக் கலைஞர்கள் இனறும் மேடைகளில் புகழ்என்றும் உச்சியில் திகழ்கின்றார்கள் என்றால் அப்பெருமையும் அவர்களையே சாரும். கலைஞர் சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் வி.கே. இரத்தினம் அவர்கள் வயோதிப நிலையை அடைந்துள்ள போதும், இன்றும் கணீரென்ற குரலோடு பாடி நடிக்கக் கூடியவராகவே இருந்து வாழ்கின்றார்.

1994 ம் ஆண்டு புற்று நோயினால்பீடிக்கப்பட்டு கொழும்பு மகரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். (இதுபற்றி பின்பு ஓர் அத்தியாயத்தில் விபரிக்கின்றேன்) அவ்விதம் நோயுற்று சுகமான இவர் எதிர்பார்த்தது போல எனி வரும்காலங்களில் பாடமுடியாமற் போகவில்லை. இன்றும் அவரால் பாடல்களை நல்ல முறையில் பாடமுடியும். அதற்குக் காரணம் அவர் இல்லத்திற்குப் பக்கத்தில் கோவில் கெண்டுள்ள சரஸ்வதி அம்பாளின் கிருபையே என அடிக்கடி கூறுவார்.

## மலர் மணம் 13
## களியாட்ட விழாக்களில் இசை நாடகங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐம்பது, அறுபதுகளில் முன்னணி வகித்த பொழுது போக்காக இருந்தது களியாட்டவிழாக்களேயாகும் இந்தக் கழியாட்டு விழாவினை கார்ணிவெல் (Carnival) என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இக்களியர்ட்ட வழாக்களில் மெரிக்கோ றவுண்ட்(Merigoround) ,பாதாளக் கிணற்றில் மோட்டாச் சைக்கிள் ஓடுதல், மல்யுத்தம், சதிர் என அழைக்கப்படும் குழு நடனங்கள், மறைமுக சூதாட்டங்கள், நாடகங்கள் இடம் பெறுவதுண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லாப் பிரிவுகளிலும் இடம்பெறும் இன் நிகழ்வை இடத்துக்கிடம் நிகழ்த்தும் இரு பெரிய வர்த்தகர்கள் இருந்தார்கள். அவர்கள் அரியாலையைச் சேர்ந்த சந்திரபோஸ் மற்றவர் ஆரியகுளத்தைச் சேர்ந்த பழனி .இவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக தென்னிந்திய திரைப்பட நடிகர்களையும் இக்களியாட்ட விழாக்களுக்கு அழைத்து வந்ததுண்டு.

இவ்வாறு சிறந்த பொழுது போக்கு நிகழ்வாக இடம்பெற்ற களியாட்டு விழாக்களில் நடத்துனர்களுக்கு நட்டம் ஏற்படுவதுண்டு. ஒரு மாதம் இரண்டு மாதங்கள நடைபெறும் இக்களியாட்டு விழாவினைக்காண மக்களை அழைக்க வேண்டும் எனறால் நல்ல நிகழ்ச்சிகளை நாளாந்தம் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுதெல்லாம் நல்ல நாடகங்களை மேடையேற்றினாலே களியாட்டு விழாக்களில் நல்ல வசூலினை எதிர்பார்க்கலாம். அதனைக் கருத்தரில் கொண்டு களியாட்டு விழா அமைப்பார்கள் செயற்பட்டு வந்தார்கள். அரியாலையைச் சேர்ந்த சந்திரபோஸ்

அவர்கள் மிகவும் ஆற்றல் படைத்த களியாட்டு விழா அமைப்பாளர் இவர் ஒருமுறை யாழ்ப்பாணம் பாசையூரில் களியாட்டு விழா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார். இக்களியாட்டு விழா நிகழ்வின் ஆரம்ப நாட்களில் இவர் எதிர்பார்த்த வருமானத்தை எட்டமுடியவில்லை. பலகோணங்களில் இடம்பெறும் சூதாட்ட நிகழ்ச்சியால் அதிகவருமானம் இவருக்குக் கிடைக்கவில்லை. அதனால் மனமுடைந்து போன சந்திரபோஸ் அவர்கள் அமைதியில்லாது தவித்தார். நாளாந்தம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோருக்கு பணம் கொடுக்கமுடியாமல் கஷ்டப்பட்டார். அப்பொழுதுதான் அவர் உள்ளத்தில் தனது ஊரைச்சேர்ந்த இசைநாடகக் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களின் ஞாபகம் வந்தது.

கரையோரக்கிராமமான பாசையூர், கரையூர் மக்கள் இசைநாடகத்தில் ஆர்வம் கொண்டவர்கள். அவர்களைக் களியாட்ட விழாவிற்கு வருகைதர வைக்கவேண்டுமென்றால் நாடகத்தையும் களியாட்ட விழாவில் ஒரு நிகழ்ச்சியாகக் கொள்ளல் வேண்டும். அக்காலம் இலங்கையின் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் இந்தியக்கலைஞர்கள், மல்யுத்த வீரர்கள் எவரையும் இலங்கைக்குள் வர அனுமதி வழங்காதகாலமாகும். சந்திரபோஸ் அவர்கள் கலைஞர் இரத்தினம் வீடுதேடிவந்தார். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் இசைநாடகங்களை நடித்து வந்தபோதும் சிறந்த கட்டட ஒப்பந்தக்காரராகவும் இருந்து செயற்பட்டு வந்தவர். அவர் அச்சமயத்தில் மூதூரில் கட்டடங்கள் ஒப்பந்த அடிப்படையில் கட்டுவதற்காகச் சென்றிருந்தார். சந்திரபோஸ் அவர்கள் கலைஞர் இரத்தினத்தின் மூதூர் விலாசத்தை அவர் மனைவியிடமிருந்து பெற்று உடனே வரும்படி கலைஞர் இரத்தினம் அவர்களுக்கு மூதூர் விலாசத்திற்கு தந்தி கொடுத்தார்.


தந்தியைக் கண்டதும் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் தனது உதவியாளரிடம் வேலைகளைப் பாரம் கொடுத்துவிட்டு உடனடியாகவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவரின் வருகையால் பூரித்துப்போன சந்திரபோஸ் அவர்கள் தன் நிலைமையை விளக்கி கலைஞர் வி.கே.இரத்தினத்தின் உதவியையும், களியாட்ட விழாவில் நாடகங்கள் நிகழ்த்த வேண்டிய அவசியத்தையும் எடுத்துக்கூறினார். தன்புன்சிரிப்பால் அவரை நோக்கிய கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் "எதற்கும் கலங்காதீர்கள் என் உதவி தங்களுக்குக் கிட்டும்'' என்றார். அப்பொழுது கலைஞர் வி.கே.இரத்தினம் அவாகள் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடகசபாவின் உறுப்பினராக இருந்தபோதும், காங்கேசன்துறை வி.வி.வைரமுத்து அவர்களின் வசந்தகான நாடகச்பாவில் பெண்பாத்திரமேற்று பலநாடகங்களை பலமுறை மேடையேற்றி வந்தகாலமாகும். எனவே வி.வி.வைரமுத்து அவர்களோடு இணைந்து நாடகங்களை மேடையேற்றி உதவுவதாக

கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் சந்திரபோஸ் அவர்களுக்குச் சொன்னார்.

இதன்பிரகாரம் வி.வி.வைரமுத்து அவர்களும் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களும் இணைந்து நடிக்கும் இசைநாடகங்களான அரிச்சந்திர மயானகாண்டம், கோவலன் கண்ணகி, சாரங்கதரன், அல்லி அருச்சுனா, பூதத்தம்பி, ஏழுபிள்ளை நல்லதங்காள், ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, ஞானசௌந்தரி, பாமா விஜயம், அசோக்குமார் போன்ற நாடகங்கள் மேடையேற்றப்படுவதாக ஒப்பந்தமாகின. மூன்று தினங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் நாடகங்கள் பாசையூர்க் களியாட்டு விழாவில் மேடையேற்றப்பட்டன. இந்நாடகங்களின் நிகழ்வினால் பாசையூர்க் களியாட்டு விழா களைகட்டியது. சந்திரபோஸ் அவர்கள் எதிர்பார்த்த வசூலுக்குமதிகமாக பணம் வந்து குவிந்தது. கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களும், நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களும் இணைந்து நடித்த ஞானசௌந்தரி என்னும் நாடகம் ஒரு சிறீஸ்தவக் கதையாகும். சிற்றன்னையின் கொடுமையால் துன்பப்படும் பெண்பாத்திரமான ஞானஸௌந்தரி வேடத்தில் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் நடித்து, பார்ப்போரைக் கண்ணீர் சிந்த வைத்தார். இந்த நாடகம் இக்களியாட்ட விழாவில் நான்கு முறை மேடையேற்றப்பட்டதாக கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் என்னிடம் கூறியிருந்தார்.

இக்களியாட்ட விழாவில் தான் எதிர்பார்த்திராத வசூல் கிடைக்கப்பெற்றமையினால் திரு சந்திரபோஸ் அவர்கள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கும், நடிகமணி வைரமுத்து அவர்களுக்கும் ஒவ்வொரு பவுண் நிறைகொண்ட சங்கிலிகளை களியாட்ட விழாவின் இறுதிநாளன்று வழங்கிக் கௌரவித்தார்.

களியாட்ட விழாக்களில் மட்டுமல்ல யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெறும் எந்த விழாக்களிலும் நாடகத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தது. அவ்வாறு வேறு விழாக்களிலும் இடம்பெற்ற நாடக நிகழ்வில் கலைஞர் வி.கே.இரத்தினத்திற்கு ஏற்பட்ட சுவையான சம்பவம் ஒன்றைப் பற்றி அடுத்துவரும் அத்தியாயத்தில் நோக்குவோம்.



## "சாவகச்சேரி (பா.உ) நவரத்தினத்துடன் சிரித்துப் பேசிய பெண்"

யாழ்ப்பாண மாவட்டத்தில் எங்காவது ஒரு விழா ஏற்பாடு செய்யப்படுமானால் அங்கெல்லாம் விழாவின் இறுதி நிகழ்வாக இடம் பெறும் நிகழ்ச்சி நாடகங்களாகவே இருக்கும். அவ்வளவு தூரம் மக்கள் நாடகத்தின்மீது விருப்புடையவர்களாக இருந்தார்கள். நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்கள் அடிக்கடி கூறுவார். தென்னிந்திய திரைப்படங்கள் எவ்வளவு நல்ல படங்கள் வந்த போதும் யாழ்ப்பாணத்தில் நாடகக் கலாசரனை அழிந்து போகவில்லை. மக்கள் நாடகங்களையே வரும்பி ரசித்தார்கள். கிராமப்புறங்களில் நாடகக்கலையை விரும்பியோர்கள் பலர் இருந்தமையே நாடகக் கலை உயர்வடையக் காரணம். இதனால் எம்போன்ற கலைஞர் வாழ்வதற்கும் ஏதுவாக இருந்தது என்பார். அது உண்மையான கருத்தே.

மட்டுவிலில் புதிய சனசமூக நிலையம் ஒன்று அப்பகுதியின் பாரளுமன்ற உறுப்பினராக இருந்த திரு நவரத்தினம் அவர்களால் திறந்து வைக்க ஏற்பாடாகி இருந்தது. இத் திறப்பு விழா நிகழ்வில் "சத்தியவான் சாவித்திரி" என்னும் நாடகம் இறுதி நிகழ்வாக இடம்பெற ஏற்பாடாகி இருந்தது. இந் நாடகம் வி.வி.வைரமுத்து குழுவினருடையது. கலைஞர் இரத்தினம் இனந்நாடகத்தில் சாவித்திரியாக நடிக்க ஏற்பாடாகி இருந்தது. நடிகமணி வி.வி.வைரமுத்து குழுவினர் காங்கேசன் துறையிலிருந்து நேராக மட்டுவிலிக்கு வருவதாகவும், கலைஞர் வி.கே.இரத்தினம் தமது ஊரான அரியாலையிலிருந்து நேரடியாக மட்டுவிலுக்கு வருவதாகவும் ஊற்பாடாகி இருந்தது.அதன்பிரகாரம் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள்அரியாலையில் இருந்து புறப்பட்டு நுணாவில் சந்தியிலிறங்கி மட்டுவில் நோக்கிச் செல்லும் வீதியில் பஸசிற்கா காத்திருந்தார். சற்று நேரத்திற்கு எல்லாம் மோட்டார் கார் ஒன்று அருகில் வந்து நின்றது. அக்காரில் சாவகச்சேரி பாரளுமன்ற உறுப்பினர் திரு நவரத்தினம் அவர்களும், மனைவி மகள் இருந்தனர். இவர்கள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கு ஏற்கனவே பழக்கப்பட்டவர்கள். கட்டட ஒப்பந்தக் காரரான கலைஞர் திரு நவரத்தினம் அவர்களின் வீடுகட்டிய ஒப்பந்தக் காரர் ஆவார்.

கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களும் தான் செல்லும்விழாவிற்கே செல்லுகிறார் என்பதைத் தெரிந்து கெண்ட திரு நவரத்தினம் அவர்கள் கலைஞரைத் தனது காரில்வரும்படி அழைத்தார். அவரின் அழைப்பினை தட்ட முடியாத கலைஞர் அக்காரில் ஏறிச்சென்றார். விழா ஆரம்பிக்கப்படவில்லை,கலைஞர் வி.கே.இரத்தினத்திம் அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்த நடிகமணி விரைந்து ஒப்பனை செய்யுமாறு கலைஞரிடம் கூறினார். சாவகச்சேரி பாரளுமன்ற உறுப்பினர் திரு.வி.என்.நவரத்தினம் அவர்கள் விழா ஏற்பாட்டாளர்களால் வேறு இடத்தில் அமர்த்தப்பட்டார்

இடத்தில் அமர்த்தப்பட்டார். அவரைக்கண்ட மட்டுவில் வாழ் மக்கள் தங்கள் பகுதியில் செய்விக்கப்பட வேண்டிய அபிவிருத்திகள் பறிறி விவாதித்துக் கொண்டிருந்தனர். மேடையின் அருகே ஒப்பனை செய்து கொண்டிருந்த கலைஞர் ஒப்பனை செய்து முடிவுற்று அங்கு நின்றவர்களோடு அளவளாவிக் கொண்டிருந்தனர்.

அந்நேரம் தன்தொகுதி மக்களோடு விவாதித்து முடித்த திரு.வி.என்.நவரத்தினம் அவர்கள் ஒப்பனை நடந்து கொண்டிருக்கும் இடத்திற்கு தனியே வந்தார். அங்கே பெண் ஒப்பனை செய்து முடித்த கலைஞர் வி.கே. இரத்தனம் அவர்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு உண்மைப் பெண்ணாகவே மாறிநிற்கும் அவரோடு சிரித்துப் பேசி, பகிடிகள்விட்டு கதைத்துக் கொண்டிருந்தார்.கனவன் போய்க் கனநோரமாகியும் வராதது கண்ட மனைவி தன் மகளைப்பார்த்து அப்பா எங்கே என்று பார்த்து வருமாறு கூறினார். தாயின் பணிப்புக்கிணங்க தந்தையைத் தேடிச்சென்ற மகள் தகப்பனார் பெண் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு விட்டு தாயிடம் சென்று "அப்பா அங்கே ஒரு பெண்ணோடு சிரித்து போசிக்கொண்டிருக்கிறார்"என்று கூறினார் தன்னை விட்டு வேறு பெண்களுடன் கதைப்பதை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள்.திரு நவரத்தினம் அவர்களின் மனைவி அதற்கென்ன விதிவிலக்கானவரா? கோபம் அவரை ஆக்கிரமித்து கணவரைத் தேடி மகளோடு போனார். அப்பெழுதும் அவர் கதைத்து முடிக்கவில்லை. அருகே வந்து திரு நவரட்ணம் அவர்களின் மனைவி கணவனைப்பார்த்து யாரப்பா அந்தப் பெண் சொல்லுங்கள் என்றார்.

மனைவியின் கடுகடுப்பை புரிந்துகொணட எம்.பி.நவரத்தினம் அவர்கள் ''இப்பெண்ணை உனக்குத் தெரியவில்லையா? வடிவாகப் பார் தெரியும் என்றார்'' மனைவியால் அவரை அடையாளம் காண முடியவில்லை. முன்பு எப்போதும் அப்பெண்ணை அவர் காணவில்லை. அதனால் எதுவும் போசாமல் அப் பெண்ணையே வைத்தவிழி வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்.எம.பி.நவரத்தினம் அவர்கள் மீண்டும் மனைவியைப் பார்த்து கேட்டார் "இவரைத் தெரியவில்லையா? மகளையும் அதே கேள்வியைக் கேட்டார்" மகளும் தாயும் இல்லைஎன்று பதில் கூறினார்கள். சிரித்துக்கெண்டே இவர் எம்மோடு காரில் வந்த கலைஞர் இரத்தினம் தான் அது எனக் கூறிய போது அவர்கள் இருவரும் நம்பமுடியாமல் அதிசயித்தார்கள் அப் பொழுது கலைஞர் இரத்தினம் அவர்கள் "அது நான் தானம்மா? இரத்தினம் என்றார் குரலைக் கேட்டபின்பு தான் கலைஞரை அந்த இருவராலும் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர்கள் ஆச்சரியம் மேலிட கலைஞரின் ஒப்பனையை மெச்சினார்கள்.

கணவனின் நிகழ்ச்சி முடிந்த போதும் அவர்கள் அவ்விடத்தை விட்டுச் செல்லவில்லை. கலைஞர் அவர்கள் பங்குபற்றிய நாடகமான "சத்திவான் சாவித்திரியை" அவர்கள் முழுமையாகப் பார்த்துச் சென்றன்றார்கள் செல்லுமுன் கலைஞரையும். நடிகமணியையும் அவர்கள் வாழ்த்திச் சென்றார்கள். அவ்வளவு பாத்திரப் பெருத்தம் கலைஞரிடம் காணப்பட்டது.

அவரின் பாத்திரப் பொருத்தமான நிகழ்வின் காரணமாக நடைபெற்ற இன்னொரு சம்பவத்தை அடுத்து வரும் அத்தியாயத்தில் கண்டு கொள்வோம்.

## மலர் மணம் 15

## தென்னிந்திய சிரிப்பு நடிகர் மல்லியம் இராசகோபாலின் ஏமாற்றம்.

தென்னிந்திய திரைப்படக் கலைஞர்கள் இலங்கை வந்து கலை நிகழ்ச்சிகள் நடாத்தியும், கலை நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்துச் சென்ற காலம் அது. அவ்வாறு பல முன்னணிச் சினிமாக் கலைஞர்கள் வருகை தந்து யாழ்ப்பாண மக்கள் மனதைக் கவர்ந்து சென்றிருக்கிறார்கள். யாழ்ப்பாண மக்களின் இரசிகத் தன்மையைக் கண்டு அவர்கள் மெய்சிலிர்த்த நிகழ்வுகளும் நிறைய உண்டு.

இவ்வாறு இலங்கை மண்ணுக்குத் தன் கலைபயணத்தை மேற்கொண்டு வந்தவர் தான். தென்னிந்திய திரைப்பட சிரிப்பு நடிகர் மல்லியம் இராசகோபால். அக்காலத்து சிரிப்பு நடிகராக விளங்கிய இவர் 'குலதெய்வம்' சினிமாப்படத்தின் மூலம் பிரபல்யம் அடைந்தவர். அதனால் 'குலதெய்வம் இராஜகோபால்' எனவும் அழைக்கப்பட்டவர். இவரது நாடகக் குழுவினருடனேயே இவர் யாழ்ப்பாணம் வருகை தந்தார். இவரது நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது. இவரின் நாடகங்களைக் கண்டு களிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்தும் பலர் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

இந்த மல்லியம் இராஜகோபாலின் தலைமையின் கீழ் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும், கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களும் இணைந்து நடிக்கும் 'அரிச்சந்திர மயானகாண்டம்' நாடகம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நாடகம் யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் இடம் பெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நாடக நிகழ்வினை முன்வரிசையிலிருந்து மல்லியம் இராசகோபாலும் அவர் குழுவினரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மிகவும் சோகம் நிறைந்த இந்நாடகத்தை அவர்கள் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் கண்கள் பனிக்கத் தவறவில்லை.

நாடகம் முடிவுற்று தலைமையுரை நிகழ்த்தும் போது 'இந்நாடகம் தென்னிந்திய நாடகங்களுக்கு இணையானது. இந்நாடகத்தில் சந்திரமதி பாத்திரமேற்று நடித்த பெண்ணை என்னால் மறக்க முடியவில்லை என்றார். அப்போது மேடையில் சலசலப்பு ஏற்பட்டது. 'சந்திரமதியாக நடித்தவர் பெண்ணல்ல. ஆண் நடிகர் ' என்ற குரல் கேட்டது. மல்லியம் இராஜகோபால் திகைத்தே போனார். அவர் ஆணா? என்னால் நம்பமுடியவில்லை என ஆச்சரியம்பட்டார். அரிச்சந்திரனாக நடித்த நடிகமணி வீ.வீ.வைரமுத்துவையும், சந்திரமதியாக நடித்த கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களையும் மேடைக்கு அழைப்பித்து தன் இரு பக்கங்களிலும் நிறுத்தி தோள் மீது கைகள் போட்டு வாழ்த்தினார். தென்னக சினிமா நடிகை தென்னக சினிமா நடிகை கண்ணாம்பாளின் நடிப்புக்கிணையாக உங்கள் நடிப்பு இருக்கின்றது. 'நீங்கள் ஈழத்துக் கண்ணாம்பாள்' என்றே நான் சொல்வேன் என கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களைப் பார்த்துக் கூறினார். 'நல்ல இசை வளமும், நடிப்பு ஆற்றலும் இயற்கையாகவே உங்களுக்கு அமைந்திருக்கிறது. நீங்கள் தென்னிந்தியாவில் இருப்பீர்களானால் சிறந்த சினிமா நட்சத்திரங்களாக திகழ்ந்திருப்பீர்கள். உங்கள் ஆற்றலை நான் மனந்திறந்து பாரடாட்டுகிறேன். 'எனப் பாராட்டினார்.

ஒப்பனைப் பொருத்தம், நல்ல இசைவளம், குரல்வளம், நடிக்கும் போது அப்பாத்திரத்திற்கேற்ப மாறி நடிக்கும் பேராற்றல் நிறையப் பெற்றமையினால் கலைஞர் வி.கே. இரத்தினமும், நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும் மக்கள் மனதில் என்றும் நிறைந்தவர்களாக நிலைத்து நிற்கின்றார்கள் என்று கூறினால் அது சாலவே பொருந்தும்.

## மலர் மணம் - 16

# "இரத்தினம் கத்தியால் குத்திப் போட்டான்"

நாடகக் கலைஞர்கள் தம் நாடக அனுபவத்தில் பல தரப்பட்ட மனிதர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நிறையப் பெற்றிருக்கிறார்கள். அவ்விதமான சந்தர்ப்ப நிகழ்வுகள் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களுக்கும் ஏற்பட்டதுண்டு நான் பலமுறை அவர்களோடு அவர் அனுபவங்களைப் பற்றிக் கேட்கும் போதெல்லாம் நிறைய அவர் கூறிய கதைகளைக் கேட்டிருக்கிறேன். மிகவும் பயந்த சுபாவம் கொண்டவர். யாராவது பயமுறுத்தினால் ஓடி ஒழியும் சுபாவங் கொண்டவர். சலை வாழ்வே கண்ணாகக் கொண்ட இவர் தனது இல்லத்துக்கு அருகாமையிலுள்ள அன்னை சரஸ்வதியைத் துதி செய்தே எக்காரியத்தையும் செய்வார். அவரின்

நாடக வாழ்வின் அனுபவத்தில் அவருக்கு ஏற்பட்ட இரு சம்பவங்களை அடிக்கடி கூறுவார். அதில் ஒரு நிகழ்வை நட்டுவாங்கம் பற்றிய பகுதியில் குறிப்பிடுகிறேன்.

இளவாலையில் நடிகமணி வீ.வீ.வைரமுத்து குழுவினரின் 'ஏழுபிள்ளை நல்லதங்காள்' நாடகம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதில் நல்லதங்காளாக கலைஞர் இரத்தினம் அவர்கள் நடிப்பதாக ஏற்பாடாகியிருந்தது. இந்நாடகத்தை நடாத்துவதற்காகச் சென்ற நடிகமணி வைரமுத்து குழுவினர் மேடைக்கு அருகே அமைக்கப்பட்ட ஒப்பனை அறையில் ஒப்பனை செய்து கொண்டிருந்தார்கள். கலைஞர் இரத்தினம் அவர்கள் தமக்கான ஒப்பனையை முடித்து சேலை கட்டிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒப்பனை அறைக்குள் இருவர் வாக்குவாதப்பட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தனர். அவர்கள் வாக்குவாதம் அதிகரித்துக் கொண்டே போனது. அதனைக் கண்ட கலைஞர் இரத்தினம் அவர்கள் ஒரு மூலையில் போய் ஒதுங்கிக் கொண்டார். அந்த இருவருக்கிடையேயும் வாக்குவாதம் கூடிக்கொண்டு கட்டுக்கடங்காமல் போனபோது 'இரத்தினம் குத்திப்போட்டான்' என்ற சத்தம் எழுந்தது. அத்திசையை நோக்கிய கலைஞர் இரத்தினம் அவர்கள் ஒருவரின் நெஞ்சிலிருந்து பீறிட்டுப் பாயும் குருதியைக் கண்டார். மற்றவரைக் காணவில்லை. இரத்தினம் குத்திப்போட்டான் என்ற செய்தி காதில் எட்டியதும், குருதி நெஞ்சப் பகுதியிலிருந்து பாய்வதையும் கண்ட கலைஞர் மயக்கம் போட்டுக் கீழே வீழ்ந்து விட்டார். மயக்கம் தீர்ந்து எழுந்த போது கண்களை மெல்லத் திறந்து அருகில் நின்ற நடிகமணியை நடந்தது என்ன என்று வினாவினார்.

'ஒருவர் கத்திக்குத்துக்குப் பலியாகி விட்டார். அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று விட்டார்கள் என்றும் குத்தியவன் பெயர் இரத்தினம் நீ எதற்கும் பயப்படாதே வானில் சென்று ஏறு 'என நடிகமணி கூறி அங்கிருந்து புறப்படுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு புறப்பட்டு நடிகமணி வைரமுத்துவின் வீடு இருக்குமிடமான காங்கேசன் துறை வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்து சேர்ந்த பொழுதும் கலைஞர் இரத்தினம் அவர்களுக்கு மனதில் ஏற்பட்ட பயம் மறையவில்லை. தனது பெயர் இரத்தினம் என்பதாலும் கத்தியால் குத்திய நபரின் பெயரும் இரத்தினம் என்பதாலும் அவர் அஞ்ச வேண்டியிருந்தது.

நாடகம் நடைபெற இருந்த இடம் காங்கேசன்துறைப் பொலீஸ் பிரிவாக இருந்தமையால் நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்கள் முறைப்பாடு செய்வதற்காக காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையம் சென்றார். அங்கே ஏற்கனவே நாடகம் ஒழுங்கு செய்த குழுவினர் நடந்த நிகழ்வை முறைப்பாடு செய்ய வந்திருந்தமையாலும் அவர்கள் நாடகக் குழுவினரை இந்நிகழ்வுள்

சம்மந்தப் படுத்தாமையினாலும் நடிகமணிக்கு முறைப்பாடு செய்யும் தேவை இருக்கவில்லை. நடிகமணி வீடு வந்து தன் நாடகக் குழுவினரிடம் இதனைத் தெரிவித்தபோது எல்லோர் முகத்திலும் பிரகாசம் தோன்றியது. கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது' எனக் கூறி மனம் தேறினார். மறுநாள் விடியும்வரை நடிகமணி வீட்டிலேயே சகலரும் தங்கித் தத்தம் வீடுகளுக்குச் சென்றார்கள்.

## மலர் மணம் 17

## அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நாடக விழா.

அரியாலையில் வருடா வருடம் தமிழ் வருடப்பிறப்பு தினத்தில் விளையாட்டுக்களும், இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வருவது வழமையான நிகழ்வாகும். ஒருகால கட்டத்தில் இச்சுதேசிய விழா இருபிரிவுகளாக அரியாலை கிழக்கிலும், மேற்கிலும் கொண்டாடப்பட்டு வந்தன. பிரிவு ஏற்பட்டதனால் போட்டியான செயற்பாடுகளுடன் விழா கொண்டாடப்பட்டு வந்தது. இந்த விழாவில் இலங்கை வானொலிக் கலைஞர்கள், வெவ்வேறு இடங்களிலிருந்து வரவழைக்கப்படும் கலை நிகழ்ச்சிகள், உள்ளூர் நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன ஒருமுறை 'திருவிளையாடல்' நாடகம் மேடையேற்றப்படுவதாக முடிவாயிற்று. இரு பிரிவினரும் 'திருவிளையாடல்' நாடகத்தையே நடத்துவதென முடிவு செய்தனர்.

கிழக்கு பிரிவினரின் திருவிளையாடல் நாடகத்தில் திரு சிவசுந்தரம் ஆசிரியர் சிவனாகவும், மேற்கில் வாழும் பிரிவினர் திரு.ஈ.கே.குமரையா அவர்களை சிவனாகவும் நடிக்க வைப்பதற்கு முடிவு செய்தனர். ஒளவையாராக நடிப்பது யார் என்ற நிலை வந்தபோது இரு பிரிவினரும் கலைஞர் வீ.கே. இரத்தினம் அவர்களையே தெரிவு செய்தனர். இரு பிரிவினரும் கலைஞர் இரத்தினத்திடம் வந்து எங்கள் நாடகத்தில்த்தான் நீங்கள் நடிக்க வேண்டும். என வேண்டினர். கலைஞர் வீ.கே.இரத்தினம் செய்வதறியாது திகைத்தார்.யாரையும் வெறுத்து ஒதுக்கும் பண்பற்ற கலைஞரல்ல இரத்தினம் அவர்கள். இரு பக்கத்தார் நாடகங்களிலும் நடிப்பதாக ஒப்புக் கொண்டார். அதன் பிரகாரம் நாடக ஒத்திகைக்கு இரண்டு பக்கமும் அவர் செல்லத்தவறவில்லை. ஒரேநாளில் இரண்டு இடங்களுக்கும் அவர் ஒத்திகைக்காகச் சென்றார். ஒரே நாளில் எவ்வாறு இரண்டு பக்கமும் நீங்கள் நடிக்கலாம் என்று

சிலர் வினாவினார்கள்.

நாடக ஒத்திகையின் போது இருபக்கத்தினருக்கும் அவர் சொல்லி வைத்தது இரண்டு இடத்திலும் நான் நடிப்பேன் நாடகம் இரண்டு இடத்திலும் ஒரே நேரமாக ஆரம்பிக்காமல் ஒரு மணித்தியால இடைவெளியில் ஆரம்பித்தால் எனக்கு இலகுவாக இருக்கும் என்பதுதான். அவரின் வேண்டுகோளின்படியே நாடகங்கள் மேடையேறின. வைத்திய கலாநிதி. சிற்றம்பலம் அவர்கள் தனது மோட்டார் காரில் இரண்டு இடங்களுக்கும் அவர் நடிக்கும் காட்சிக் கேற்ப மாறிமாறி ஏற்றிச் சென்று இறக்கி உதவினார்.

இதன் காரணமாகவே பலமுறை கலைஞர் வீ.கெ.இரத்தினம் அவர்கள் அரியாலை மக்களால் பராட்டிக் கௌரவிக்கப்பட்டார். ஒரு சில வருடங்கள் பிரிந்து செயற்பட்ட இரு பகுதி மக்களும் தமது தவறுகளை உணர்ந்து பாரம்பரிய பண்பாட்டின் முக்கியத்துவம் அறிந்தும் ஒன்றுசேர்ந்த இவ் விழாவினை கொண்டாடி வருகின்றார்கள்.நாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வுகளின் காரணமாகவும் இராணுவம் அரியாலைக் கிராமத்தில் நிலை கொண்டிருப்பதாலும் இச்சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 1995ம் ஆண்டிற்கு பின் பெரிதாகக் கொண்டாடப்படவில்லை.

## மலர் மணம் 18

# "சந்தர்ப்பத்தில்' உதவிய நடிகர்

நாடகத் துறையில் சில வேளைகளில் சிக்கலான பிரச்சனைகள் உருவாகுவதுண்டு. இவ்வாறான பிரச்சனைகள் தொழில் ரீதியாக நாடகங்களை நடத்தவோருக்கு பல கோணங்களில் ஏற்படுவது வழக்கம். இதனால் நாடகங்கள் சிலவேளைகளில் நடைபெறாமல் போவதுண்டு. சில நடிகர்கள் நான் இல்லாவிட்டால் இந்த நாடகத்தை நடத்த முடியுமா? என்று எண்ணுவதாலும் திறமையுள்ள கலைஞனான எனக்கு கூடுதலான பணம் தந்தாலென்ன? எனச் சில நடிகர்கள் நினைப்பதாலும் நாடகத்தில் தோன்றும் பாத்திரங்கள் வெளிப்படுத்த வேண்டிய அருவருக்கத்தக்க நடிப்புகளால் எனது திறமை பாதிக்கப்படும் எனக் கருதுவோர்களாலும் இவ்விதமான சிக்கல்கள் எழுவது இயல்பு அவ்வாறே ஏற்படும் சிக்கல்களுக்கு மத்தியிலேயே சில

நாடக சபாவின் இயக்குநர்கள் நாடகங்களை நடத்தி வந்துள்ளார்கள். இதுபோன்ற சிக்கல்கள் நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களுக்கு பலமுறை ஏற்பட்டதுண்டு. அப்படியான இக்கட்டான கால கட்டங்களில் தனக்குத் தெரிந்த தன்னோடு பழக்கமான நடிகர்களை ஏற்பாடு செய்து அவருக்கு பல வழிகளில் உறுதுணையாக கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் செயல்ப்பட்டு வந்துள்ளார். உடற்பருமன் காரணமாக நடிப்புத்துறையை விட்டு ஒதுங்கியிருந்த காலங்களிலும் கலைஞர் இவ்வாறு செயற்பட்டுள்ளார். அவ்வாறு உதவிய சந்தர்ப்பங்களில் ஒன்றினை அவர் தனது செவ்வியின்போது என்னிடம் கூறியுள்ளார்.

தென்மராட்சி, நுணாவில் மக்களால் நிதித்தேவை ஒன்றிற்காக நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களின் 'ஏழுபிள்ளை நல்லதங்காள்' நாடகம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நாடகத்தில் வரும் கதாபாத்திரமான மூளி அலங்காரி கடைசிக்கட்டத்தில் தலைமொட்டை அடிக்கப்பட்டு செம்புள்ளி கரும்புள்ளி முகமெல்லாம் குத்தி அசிங்கமான முறையில் வர வேண்டும். அவளுடைய வில்லத்தனமான நடிப்பின் தன்மையைக் கண்டு உணர்ச்சி வசப்படும் ரசிகர்கள் செம்புள்ளி கரும்புள்ளி குத்தும்போது தம்மையே மறந்து விசிலடித்து குரலிடுவது வழக்கம். அந்தக் காட்சியில் நடிக்க ஒழுங்கு செய்யப்பட்ட நடிகர் நாடகத் தினத்தன்று அவரை அழைத்தச் செல்ல வரும் வேளை அவர் வீட்டில் இருக்கவில்லை. அவரை எங்கெல்லாம் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்கள் என்ன செய்வது என்று தோன்றாமல் கலைஞர் வீ.கே. இரத்தினம் அவர்கள் வீட்டிற்கு வந்தார். 'மச்சான் அவன் எங்கு சென்றான் எனத் தெரியவில்லை' மூளி அலங்காரிக்கு யாரைப் போடுவது? எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. என்ன செய்வதென்றே புரியவில்லை. நாடகம் இரவு எட்டு மணிக்கு ஆரம்பித்தே ஆக வேண்டும்? நீதான் இதற்து உதவ வேண்டும். என கலைஞரைப் பார்த்துச் சொன்னார்.

பெண் பாத்திரத்தில் ஒரு சில கலைஞர்களே முன்னணியில் திகழ்ந்த காலம் அது. யாரைப் போடலாம் போட்டாலும் பாத்திரத்தை உணர்ந்து நடிக்க அந்நடிகரால் முடியுமா? என்பதையும் யோசிக்க வேண்டும்.குழப்பமான நிலையில் தான் கலைஞரும் இருந்தார். அப்பொழுது நடிகமணி அவர்களின் நெஞ்சில் ஒருவர் ஞாபகத்திற்கு வந்தார். உடனே கலைஞர் வீ.கெ.இரத்தினம் அவர்களைப் பார்த்து 'மச்சான்' அடங்காப் பிடாரியாக "அடங்காப்பிடாரி" நாடகத்தில் நடிக்கும் பொடியன் உன் பெறாமகன் தானே. அவனை ஒழுங்கு செய்தால் என்ன? அந்தப் பொடியன் மூளி அலங்காரி பாத்திரத்திற்கு மிகவும் பொருத்தமானவன். அந்த பொடியனின் 'அடங்காப்பிடாரி' நாடகத்தை நான் பலமுறை பார்த்திருக்கின்றேன். அந்தப் பொடியனை ஒழுங்கு செய்வோம். உன்னால் முடியுமா? எனக் கேட்டார். நல்ல யோசனை

தான் ஆனால் அவனுக்கு நேரம் கிடைக்குமா? அவர்களின் நாடகமும் நாளாந்தம் ஒவ்வொரு இடங்களிலும் நடைபெறுகிறதே? அவனைப் பிடிப்பது கஷ்டம் தான். எதற்கும் ஒருமுறை போய்ப் பார்ப்போம். எனக் கலைஞர் சொன்னார். இருவரும் சேர்ந்து அடங்காப்பிடாரி கலைஞர் திரு.சி.சிவநேசன் அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். அவர்களின் நல்ல நேரம் திரு.சி.சிவநேசனுக்கு அன்று நாடகம் எதுவும் இருக்கவில்லை.

நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களும் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களும் தன் வீட்டிற்கு வருவதைக் கண்ட சிவநேசன் உறவினரான அவர்கள் தன் தந்தையிடம் தான் வந்திருப்பார்கள் என எண்ணி தனது தந்தையாரைக் கூப்பிட்டார். நாங்கள் அப்பாவிடம் வரவில்லை. உன்னிடம் தான வந்தோம். உன்னால் ஒரு காரியம் நிறைவேற வேண்டும். இன்று எனது நாடகத்தில் நீ நடிக்க வேண்டும். மறுப்புச் சொல்லக் கூடாது என நடிகமணி சொன்னார். உங்கள் நாடகத்தில் நான் நடிப்பதா? உங்கள் நாடகமோ இசை நாடகம் இசைக்கும் எனக்கும் ஒத்து வராது. எப்படி என்னால் முடியும்? நீங்கள் சொல்லுங்கள் எனச் சொன்னார் சிவநேசன். பாடலைப் பற்றி பறவாயில்லை. ஒவ்வொரு காட்சியின் போதும் என்ன செய்ய வேண்டுமென்பதை நான் சொல்லித் தருகிறேன் அதன் படி செய்தாலே போதும் 'ஏழுபிள்ளை நல்லதங்காள்' நாடகம் பார்த்திருப்பீர் அதில் வரும் மூளி அலங்காரியாக நீர் நடிக்க வேண்டும். உம்மால் முடியும். எங்களோடு உடனே புறப்படு நேரமாகிறது போவோம் எனக் கூறி நின்றார். நடிகமணி வீ.வீ.வைரமுத்து.

மறுப்பின்றி சிறப்பு நடிகரான சிவநேசன் அவர்களோடு புறப்பட்டுச் சென்றார். நெஞ்சில் பயமிருந்த போதும், துணிவும், தரமான கலைஞன் ஒருவனின் அழைப்பும் சிவநேசனை அப்பாத்திரத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டியது. நாடக மேடையில் குறிப்பிட்ட பாத்திரத்தை மிகக் கனகச்சிதமாக செய்து சபையோரின் ஏகோபித்த பாராட்டுதலை பெற்றுக் கொண்டிருந்தார். நடிகர் சிவநேசன் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்கள் நல்லதங்காளாக பாத்திரமேற்று நடித்தார். அண்ணிக்காரியான மூளி அலங்காரியின் வீட்டிற்கு பஞ்சத்தின் காரணமாக வரும் நல்லதங்காளை கொடுமைப் படுத்தும் மூளியலங்காரியாக நடித்த நடிகர் சிவநேசனைப் பார்த்து மக்கள் (ரசிகர்) கூட்டத்திலிருந்த ஒருவர் பலத்த சத்தத்தோடு 'எடி மூளி அலங்காரி ஒரு பாட்டுப் பாடடி' எனக் கேட்டுக் கொண்டார். அப்பொழுது மேடையின் வாத்தியக்காரர் பக்கம் நின்ற நடிகமணி நடிகர் சிவநேசனுக்குத் தான்பாடுவதாகக் கைச்சைகை மூலம் தெரியப்படுத்தி' அங்கொருத்தி வருகின்றாள் என் குடிக்குச் சனிபோல' என வரும் பாடலைப் பாடினார். அதற்கேற்றவாறு நடிகர் சிவநேசன் சமயோசிதமாக நடித்தார். அவரதும், கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களினதும் நடிப்பு பாராட்டுக்குரிய

நிகழ்வானது நடிகமனி வீ.வீ வைரமுத்து நடிகமனி சிவனேசனைப் பார்த்து 'தம்பி நீர் என்னோடு வாரும் உம்மையும் இசைநாடகக் கலைஞன் ஆக்குகின்றேன்.பாடத்தெரிந்தால் இசைக் கருவிகளின் துணையோடு நீரும் பாடலாம். பயம் இல்லாது இருந்தால் அதுவே போதுமானது. உம்முடைய ஒத்துழைப்பை என் வாழ் நாள் முழுவதும் மறவேன்' எனக் கூறினார். இருந்த போதும் தொடர்ந்தும் நடிக்கக்கூடிய வாய்ப்பு நடிகர் சிவநேசனுக்குக் கிடைக்கவில்லை. அவரது அடங்காப்பிடாரி நாடகம் எங்கும் தொடர்ந்து கொண்டிருந்தமையே அதற்குக் காரணம் ஆகும்.

## மலர் மணம் - 19

# கலைஞர் வி.கே.இரத்தினமும் அவர் மேடையேறிய அரங்குகளும்

தனது சிறு வயதிலே இசைநாடகத்துறைக்கு அறிமுகமானவர் கலைஞர் வி.கெ.இரத்தினம் அவர்கள் என்பதை முன்னுள்ள அத்தியாயங்கள் மூலம் தெளிவுபடுத்தியிருந்தேன். அந்த வகையிலே ஈழத்து நாடக உலகில் இசைநாடகத்துறையிலும், இயல் நாடகத்துறையிலும் பல முன்னணிக் கலைஞர்களோடு மேடையில் தோன்றி பெண் பாத்திரமேற்று சிறப்பின் சிகரத்தில் திகழ்ந்தவர் இந்தக் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் என்றால் மிகையாகாது.

மூவாயிரம் மேடைகளுக்கு அதிகமாக மேடையேறி அந்த அரங்கங்களையெல்லாம் சிறப்புறச் செய்தவர் கலைஞர்.வி.கே.இரத்தினம் ஈழத்தின் தலைசிறந்த பேராசிரியர்களான திரு வித்தியானந்தன், திரு.கைலாசபதி, திரு.சிவத்தம்பி போன்றவர்களால் பாராட்டப் பெற்றவர் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் எல்லா மட்டத்து மக்களாலும் கலைஞர்கள் மதிக்கப்படும்போதுதான் அவர்களின் கலைச் சிறப்பை உலகம் புரிந்து கொள்கின்றது. அதே போல கலைஞனும் பல மேடைகளில் தன் கலைத்திறனைத் தடம்பதிக்கும் பொழுது தான் அவனுக்குத் தன் கலைத்திறனின் பெருமைபுரிகின்றது.

பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவுமொன்று எனக் கணக்கிட்டு வாழும் காலத்தில் தனக்கும் தான் வாழ்ந்த சமூகத்திற்கும், தன் இனத்திற்கும், தான் பிறந்த மண்ணிற்கும் பெருமை தேடித் தரும் கலைஞர்கள் அவர்கள் அழிந்து போனாலும், யாரோ ஒருவரால் எப்பொழுதும் நினைக்கப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

பல்லாயிரக்கணக்கான நாடக அரங்குகளில் தோன்றி நடித்தபோதும் கலைஞர் வி.கெ.இரத்தினம் அவர்கள் கொழும்பு கதிரேசன் மண்டபம், லும்பிணிமண்டபம் ஆகியவற்றிலும், கண்டி பல்கலைக்கழகம், பதுளை ஆகிய இடங்களில் மேடையேறிய போது தமிழ் நாடகங்களுக்கு அங்கு கிடைத்த வரவேற்புக்களையும், அங்குள்ள பெரியார்களின் ரசனைகளையும் இன்றுவரை மறக்காமல் கூறிக்கொண்டேயிருப்பார்.

எந்தக் கிராமமாக இருந்தாலும், நகர்ப்புறமாக இருந்தாலும் தமது இசைநாடகங்களை விரும்பி தத்தம் இடங்களில் மேடையேற்றும் போது அவர்களின் உள்ளங்களில் காணும் களிப்பையும், அவர்கள் காட்டிய ஆதரவுகளையும் என்றும் மறக்க முடியாத நினைவுகளாகவே கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் கொண்டுள்ளார்.

இதுவரை கலைஞரின் நாடக அனுபவங்களைக் கூறிய நான் அவரின் மறுபக்கமான நட்டுவாங்கத்துறை பற்றியும் குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது. இசைநாடகத்துறையில் நட்டுவாங்கம் செய்வது மிகக் கஷ்டமானதொன்றே. அவ்விதமான துறையில் தன் பிற்காலத்தை நடத்தி வரும் கலைஞரின் செயற்பாடுகளை விரிவாகக் கூறுவது மிகவும் பொருத்தமானதே.

## மலர் மணம் 20

## "நட்டுவாங்கத்தின் ஆரம்பம்"

திரைப்படங்களானாலும் சரி; நாடகங்களானாலும் சரி வேறு எந்தக் கலைநிகழ்வுகளானாலும் சரி பின்புலம் சரியாக இயங்கினாலே அதன் வெற்றியைக்காண முடியும். பின்புலம் என்பது என்ன? முக்கியமாக நெறியாள்கையையே குறிப்பிடலாம் பின்னணியாக வழங்கப்படும் இசை, சேர்ந்து இயங்கும் சகலவற்றையும் உள்ளடக்கி நிற்பதே பின்புலம் எனப்படும்.

இசை நாடகங்களைப் பொறுத்தவரை நல்ல நட்டுவாங்கம் அமைந்தாலே அந்நாடகத்தில் வெற்றியைக் காணமுடியும் முக்கிய நாடக பாத்திரங்களை நல்ல முறையில் அமைத்தல், தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்தல், இசையில் நல்ல பயிற்சி வழங்குதல், வெண்பாக்கள், விருத்தங்கள், பாடல்கள் இவை எப்படி மேடையில் எடுத்தாளப்பட வேண்டும் என்பதை வகைப்படுத்தி செயற்படுத்தல் நட்டுவாங்கத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இந்த அடிப்படையில் பலரைப் பயிற்றுவித்து மேடைகளில் ஏற்றுவித்த பெருமைக்குரிய கலைஞரே வி.கே.இரத்தினம் அவர்கள் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் உறுப்பினராகவும், நடிகராகவுமிருந்து இசை நாடகத்துறையில் முன்னணி வகித்த தரமான கலைஞர்களோடு மேடையில் தோன்றி நடித்த கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் மேடை அனுபவம் மிக்கவராக விளங்கியமையினால் நட்டுவாங்கத்துறையில் நல்ல அனுபவம் மிக்க கலைஞராக விளங்கினார். உடல் பருமனான காரணத்தினால் பெண் பாத்திரத்தில்தான் நடிப்பதைவிட்டு ஒதுங்கிய போதும் ஆண் பாத்திரங்களில் நடித்து வந்தார். அவசியமேற்படும் பொழுது தான் நட்டுவாங்கம் செய்யும் நாடகங்களில் நடிக்கத் தவறவில்லை.

அரியாலையில் ஸ்ரீகலைமகள் நாடக சபா, கலைமகள் சனசமூக நிலையம், ஸ்ரீகலைமகள் ஆலயம் ஆகியன இணைந்து வருடாவருடம் சிவராத்திரி தினத்தன்று நித்திரை விழிப்பதற்காக நாடகங்கள் மேடையேற்றி வந்தன. பெரும்பாலும் அவ்விழாவில் இறுதி நாடகமாக இசை நாடகமே இடம்பெறுவதுண்டு. அவ்விசை நாடகத்தை பயிற்றுவிக்கும் பொறுப்பை கலைஞர்.வி.கே.இரத்தினம் பொறுப்பேற்று நடத்தி வந்தார். அவருக்குத் துணையாக அவரின் மைத்துணரும் கவிஞருமாகிய அரியாலையூர் வே.ஐயாத்துரை அவர்கள் இயங்கி வந்தார். இவர்கள் இருவரின் பயிற்சிப்பட்டறையில் வளர்ந்தவர்கள் தான் கலாபூசணம் வி.கே.பாலசிங்கம் இன்று இசை நாடகத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் வி.செல்வரத்தினம் ஆகியோராவர். இவர்களின் பயிற்சிப்பாசறையில் பலகலைஞர்கள் வளர்நது கலையுலகில் கலந்தபோதும் முன்னணிக் கலைஞர்கள் இவ்விருவருமென்பது மறுக்க முடியாத உண்மை.

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவிற்காக கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் நட்டுவாங்கம் செய்த நாடகங்களில் சிறந்தவையெனக் கணிக்கப்பட்டதும், பலமேடைகள் கண்டதுமான நாடகங்களை இங்கு ஆய்வுக்காக தேர்ந்து அவை பற்றிக் குறிப்பிடுகிறேன் இசை நாடகத்துறையில் தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்தி வந்த இக்கலைஞர் தனக்கு நாடக உலகில் புகழ்தேடித்தந்த 'அரிச்சந்திரா மயானகாண்டம்' என்னும் நாடகத்தை முதன் முதலில் நட்டுவாங்கம் செய்தார். இந்த நாடகத்தில் நடிகமணி வீ.வீ.வைரமுத்துவிடம் ஆர்மோனியத்தை முறைப்படி கற்றவரும், ஆர்மோனியச் சக்கரவர்த்தி என பலராலும் போற்றப்பட்டவரும், ரூபவாஹினி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவருமான திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் அரிச்சந்திரனாகவும் திரு. வடிவேலு செல்வரத்தினம் சந்திரமதியாகவும் முன்னணிக் கலைஞர்களாகக் கலந்து கொண்டார்கள். இந்நாடகத்திற்கு நடிகமணி வீ.வீ.வைரமுத்துவும் அவரது சகோதரர் திரு.வீ.வீ.காசிநாதர் அவர்களும் பின்னணி இசைத்தார்கள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களின்

முதலாவது இசைநாடக நட்டுவாங்கம் சிவராத்திரி தினத்தில் முதன் முதலாக அரியாலையில் மேடையேறியது. உடல் பருமன் காரணமாகப் பெண்பாத்திர நடிப்பைக் கைவிட்ட கலைஞர் இரத்தினத்திற்குப் பிறகு நடிகமணியுடன் பெண் பாத்திரத்தில் நடித்து வந்தவர் சுன்னாகம் திரு.தையிரியநாதன் அவர்கள் ஆவார். திருஇவி.செல்வரத்தினம் அவர்கள் சந்திரமதி பாத்திரத்தில் காட்டிய நடிப்பாற்றலைக் கண்ணுற்ற நடிகமணி அவருக்குத தன நாடகக் குழுவில் பெண் பாத்திரத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் அளித்தார். இதுவே திரு.வி.செல்வரத்தினம் என்னும் இக் கலைஞர் இசை நாடகத்துறையில் முன்னுக்கு வர வழி வகுத்தது.

தொடர்ந்து கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் 'சத்திய சாவித்திரி' என்னும் இசை நாடகத்தை நட்டுவாங்கம் செய்தார். இந்நாடக கலைஞருடன் திரு.கனகரத்தினம் திரு.வி.செல்வரத்தினம், திரு.மு.திருநாவு திரு.வி.கே.செல்லத்தம்பி, திரு.செ.இராசரத்தினம், திரு.ச.சிவபஞ்சா ஆகியோர் பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். இந்நாடகத்துடன் சுண்க்குளி நாடகக் கலா மன்றத்தினாழன் நாடகம் மேடையேறியது திரு.வி.கே.இரத் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக அரியாலை கலைமகள் மக்களால் ஒ செய்யப்பட்டது. நுழைவுக்கட்டணம் பெறப்பட்டு மேடையேற்ற இந்நாடகத்தின் அன்றைய வருவ் ரூபா நான்காயிரம் வரை கிடை இவ்வருமானத்தைக் கொண்டு அரியாலை ஸ்ரீகலைமகள் நாடகசபா மேலும் நாடகங்களை மேடையேற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து கலைஞரால் நட்டுவாங்கம் செய்யப்பட்டு மேடையேறிய நாடகம் 'ஸ்ரீவள்ளி' இசைநாடகமாகும். இந்நாடகத்தில் முருகனாக அரியாலையூர் கவிஞர் கே.வி.ஜயாத்துரை அவர்களும், வள்ளியாக வி.செல்வரத்தினம் அவர்களும், வேடனாக கலாபூசணம் வி..கே. பாலசிங்கம் அவர்களும், விருத்தனாக கலைஞரும், குட்டி அண்ணாவாக வி.கே.செல்லத்தம்பி அவர்களும் நடித்தார்கள். இசைநாடக நட்டுவாங்கத்துறையில் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கு பெருமை தேடித் தந்ததும், பலமுறை அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவினரால் மேடையேற்றப்பட்டதும் இந்நாடகமேயாகும். இந்நாடகத்தில் நடித்த சகலரும் எல்லோராலும் பாராட்டப் பெற்றார்கள்.

முற்றிலும் பெண்களைக் கொண்டு 'ஞானசௌந்தரி' என்னும் நாடகத்தைக் கலைஞர் அவர்கள் பயிற்றுவித்தார். ஒரு சிலரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பயிற்றப்பட்ட இந்நாடகம் அரியாலையின் புகழ்பூத்த நாடகக் கலைஞரும், விளையாட்டு வீரருமான திரு.ஈ.கே.குமாரையா அவர்களைக் கௌரவிக்கும் முகமாக மேடையேற்றப்பட்டது. இவ்விழாவினையும் அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவே முன்னின்று நடத்தியது. இந்நாடகத்தில் கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்களின் மகளான இரஞ்சினிதேவி, பெறாமக்களான கலாவதி, கலாமாலினி ஆகியோரும், செல்வராணி, உருத்திரா, கனகேஸ்வரி, ரஞ்சனாதேவி, சாந்தினி ஆகியோரும்

இணைந்து நடித்தார்கள். இசைநாடகங்களைப் பெண்களைக் கொண்டும் மேடையேற்றலாம் என்பதற்கு இதுவொரு எடுத்துக் காட்டாக விளங்கியது.

இந்நாடகத்தின் வெற்றியைக் கண்ணுற்ற கலைஞர் அவர்க பெண்களைக் கொண்டு இன்னமொரு நாடகத்தை மேடையேற்றினாலென்ன? என்ற முடிவுக்கு வந்தபோது தன கலையுலக வாழ்விற்குக் காரணமாக அமைந்த 'அரிச்சந்திர மயானகாண்டம்' என்னும் இசை நாடகத்தைப் பயிற்றுவிக்க மு வந்தார். அரிச்சந்திரனும் சந்திரமதியும் தோன்றும் காட்சிகளை மட்டும் உள்ளடக்கி இந்நாடகத்தை பயிற்றுவித்தார். இந்நாட நடிகர்களாக கலைஞரின் மகள் மாரான இறஞ்சினிதேவி இராகினிதேவி, மற்றும் செல்வராணி ஆகியோர் பயிற்சியை பெற்று வந்தனர். இந் நாடகம் அரியாலை கலைமகள் சனசமூகநிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டி நாடகத்தில் மேடையேற ஆயத்தமாக இருந்தது. அரிச்சந்திரனாக பயிற்றப்பட்ட செல்வராணி அவர்களுக்கு நாடகத்தினத்தில் ஏற்றபட்ட சுகவீனம் காரணமாக மேடையேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. நாடகம் நடக்காது போய் விடுமோ? என பலரும் நினைத்தனர். போட்டி நாடகமான படியால் எப்படியும் மேடையேற வேண்டும் என்ற முடிவுக்கு வந்த கலைஞர் தானே அரிச்சந்திரனாக நடிக்க முன் வந்தார். இதுவரை காலமும் மேடைகளில் சந்திரமதியாக நடித்தவர் அரிச்சந்திரனாக நடிப்பாரா? மிகக் கஷ்டமாகவே இருக்கும் என எதிர்பார்த்தவர்கள் அவரின் அபார நடிப்பைக் கண்டு பிரமித்துப் போனார்கள். அரிச்சந்திரன் பாத்திரத்தில் அவர் மிகவும் திறமையாகவே நடித்தார். நட்டுவாங்க துறையில் சகல பாத்திரங்களையும் பயிற்றுவிக்கும் திறன் ஏற்படும் பொழுது எந்தப் பாத்திரத்திலும் நட்டுவாங்கம் செய்பவனால் சொபிக்க முடியும். என்பதற்கு இந்நாடகம் கலைஞருக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

மேலும் பெண்களைக் கொண்டு 'பக்தநந்தனார்' நாடகத்தை பயிற்றுவித்தார். இதில் நா.சசிதா சு.கலாமாலினி க.வதனி ஆகியோர் நடித்தனர். அதைத் தொடர்ந்து 'நல்லதங்காள்' என்னும் இசை நாடகத்தை பயிற்றுவித்தார் இந்நாடகத்திலும் பெண்களே நடித்தார்கள். இந் நாடகத்தில் கலாமாலினி,இராகினி, செல்வராணி, ரஞ்சினிதேவி,ரஞ்சனா ஆகியோர்கள் பங்குகொண்டு சிறப்பித்தார்கள் இந்நாடகத்தின் சிறப்பினை கண்ணுற்ற பலர் மேலும் பெண்களைக் கொண்டு இசைநாடகங்களை மேடையேற்றுமாறு கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள் அதற்கிணங்க கலாவதி, கலாமாலினி, சாந்தினி, ரஞ்சினிதேவி ஆகியோரைக் கொண்டு 'ஸ்ரீவள்ளி' இசைநாடகத்தையும் நா.சசிதா ப.அனுசா, சு.கலாமாலினி ஆகியோரைக் கொண்டு 'பக்தபிரகலாதா' என்னும் பூரண நாடகத்தினையும் பயிற்றுவித்து அரங்கேற்றினார்.

இவ்வாறு தன் நட்டுவாங்கத்தினை ஆரம்பித்த கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் அயல் கிராமங்களுக்கும் மிகக் கிட்டிய கிராமங்களுக்கும் சென்று பல நாடகங்களை நெறிப்படுத்தி நட்டுவாங்கம் செய்து வரலானார்.

## மலர் மணம் 21

## கைதடியில் சூழ்ச்சிவலை நாடகப் பயிற்றுவிப்பு

கைதடிவாழ் இளைஞர்கள் நாடகக் கலை மீது அக்கறை கொண்டு நாடகங்களை மேடையேற்றி வந்த காலம் நல்ல நாடகங்களை மேடையேற்ற விரும்பி கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களை நாடி வந்தார்கள்.நல்ல சரித்திர நாடகமொன்றை மேடையேற்ற விரும்புவதாகவும் அந்நாடகத்தினை நட்டுவாங்கம் செய்து தருமாறும் வேண்டினார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட கலைஞர் 'சூழ்ச்சிவலை' என்னும் கற்பனைச் சரித்திர நாடகத்தின் கதையை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார். கதை நன்றாக இருக்கவே அந்நாடகத்தை வந்தவர்கள் தெரிவு செய்தார்கள். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் கிழமையில் மூன்று தினங்கள் கைதடிக்குச் சென்று நாடகத்தை பயிற்றுவித்து வந்தார். தன்னோடு உதவியாளராக தன் ஒன்றுவிட்ட சகோதரன் வி.கே.செல்லத்தம்பியை கலைஞர் அழைத்துச் செல்வார். பிற்பகலில் அரியாலையிலிருந்து செல்லும் இவர்கள் மறுநாட் காலையிலே திரும்புவார்கள்.

தென்னிந்திய திரைப்பட மோகத்தால் ஈழத்து மேடைநாடகங்களில் சண்டைக் காட்சிகளை, காதல் காட்சிகளை மக்கள் கூடுதலாக எதிர் பார்த்தார்கள். இதன் காரணமாக மேடை நாடகங்களில் வாள்ச் சண்டை, கத்திச் சண்டை, மல்யுத்தம் போன்றவை புகுத்தப்பட்டு வந்தன. கிராமப்புற மக்களிடையே இவ்வாறு காட்சிகள் அமைக்கப்பட்ட நாடகங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்து வந்தது. 'சூழ்ச்சிவலை' என்னும் நாடகம் கற்பனைச சரித்திர நாடகமாதலால் அந்நாடகத்திலும் சில சண்டைக் காட்சிகளை புகுத்த நாடகம் நடிப்பவர்கள் விரும்பினார்கள். இதன் பிரகாரம கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் சில சண்டைக் காட்சிகளை புகுத்தினார். அந்நாடகப் பயிற்சி ஒரு மாத காலமாக நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நாடகம் மேடையேறும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

முன்னைய நாட்களில் நாடகப் பயிற்சியில் நல்ல பயிற்சி கிடைக்கப்பட்டதும் 'வெள்ளோட்டம்' வைப்பது வழக்கம் மேடையில்

நடிக்கப் போவதை நாடக ஒப்பனை இல்லாமல் தொடராக காட்சிகளை நடித்துப் பார்ப்பதே வெள்ளோட்டம் என்று சொல்லப்படும். சூழ்ச்சி வலை நாடகத்தையும் வெள்ளோட்ட ஒத்திகை பார்க்க திகதி குறிக்கப்பட்டது. சகல காட்சிகளும் நட்டுவாங்கம் செய்பவர் முன்னால் நடித்து காண்பித்து அவர் மேடையேற்றலாம் என்று அதிகாரம் வழங்கினாலே நாடகம் மேடையேறுவது வழக்கமாயிருந்தது. அன்றைய தினம் நட்டுவாங்கம் செய்பவர் நாடக நடிகர்களால் கௌரவிக்கப்படுவார்.

வெள்ளோட்ட நாள் வந்தது. காட்சி ஒழுங்கின் படி நாடகம் நடந்து கொண்டிருந்தது. கத்திச்சண்டைக் காட்சி கையில் போலியாக தயாரிக்கப்பட்ட கத்திகளைக் கையில் வைத்துக் கொண்டு கதாநாயகனும், வில்லனும் சண்டை செய்யும் காட்சி நடந்து கொண்டிருந்தது. கதாநாயகனாக நடிக்கும் அப்பாக்குட்டியும் வில்லனாக நடிக்கும் சின்னப்பொடியும் கட்டிப் புரண்டு சண்டை செய்வார்கள். வில்லன் சண்டையில் தோல்வி அடைவதாகவே காட்சி இருவரும் நல்ல முறையில் பயிற்றப்பட்டதன் பிரகாரம் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். கலைஞர் அதனைப் பார்த்து மனதிருப்தி அடைந்தவராக நின்றார். சண்டை செய்பவர்களிடையே சண்டை ஓயவில்லை தொடர்ந்து இடம்பெற்றது. காட்சியின் ஒழுங்கையும் மீறி சண்டை நடைபெறுவதைப் பார்த்ததும் கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் பயந்து போனார். உண்மையாகவே அவர்கள் சண்டை செய்கிறார்கள் என்பதை புரிந்து கொண்ட கலைஞர் இருவரையும் பிடித்து பிரிக்குமாறு நின்றவர்களிடம் சொன்னார். அவர்களை சமாதான வழிக்கு கொண்டு வர மிகுந்த நேரம் எடுத்தது. கலைஞர் அவர்களின் நிலை கண்டு என்ன செய்வது என்று அறியாமல் பதறிப் போனார்.

அன்று இரவிரவாக அவ்வூர்ப் பெரியவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி இணைந்து செயலாற்ற வைக்க மிகவும் கஷ்டப்பட்டார்கள். நாடகம் மேடையேற்றப்படும்வரையாவது ஒற்றுமையாக செயல்படுமாறு வேண்டினார்கள். இறுதியாக கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் இருவரையும அழைத்து நீங்கள் இருவரும் சேர்ந்தே இந்நாடகத்தை மேடையேற்ற வேண்டும் என்பதற்காக பாடுபட்டீர்கள் தவறுகளை இருவரும் மறந்து நாடகம் மேடையேற ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லாது போனால் எக்காரணம் கொண்டும் இங்கு நான் வரமாட்டேன் எனக்கூறி மறுநாட் காலை தன் வீட்டிற்கு வந்துவிட்டார். இரண்டு நாட்கள் கழிந்த போது கலைஞர் வீட்டின் முன்னால் காரில் சிலர் வந்தார்கள். அவர்கள் வேறு யாருமல்ல. அப்பாக்குட்டியும் கந்தப்பொடியும், அவர்களுடன் சேர்ந்தவர்களுமேயாவர்.

அவர்கள் சேர்ந்து வந்தமை கண்டு உள்ளம் பூரித்து போன கலைஞர் அவர்களை வாழ்த்தி நல்லமுறையில் மேடையேற்றும்படி

கேட்டுக்கொண்டார். நாடகமும் நல்ல முறையில் மேடையேற்றப்பட்டது. இளவாலைப் பகுதியில் 'நல்லதங்காள்' நாடகம் மேடையேற்றச் சென்றபோது ஏற்பட்ட சம்பவம் போல் இதுவும் ஆகிவிடுமோ? என்று வெள்ளோட்ட நாளன்று ஏங்கிய கலைஞருக்கு இச்சம்பவம் நாடகவரலாற்றில் மறக்க முடியாத சம்பவமாகவே அமைந்து விட்டது.



மலர் மணம் - 22

# 'ஒரு நாடகக் கலைஞனின் வேண்டுகோள்'

யாழ்ப்பாண மாவட்டத்தல் புராண, கற்பனைச் சரித்திர, சமூக நாடகங்கள் வளர்ச்சியடைந்த காலத்தில் மேடையேற்றப்பட்டு வந்தன. இந்நாடகங்கள் வசன அமைப்பு முறையினாவானது. இந்நாடகங்களில் நடிக்கும் நடிகர்கள் பாடல்களைப் பாடமுடியாதவர்களாகக் காணப்பட்டால் பின்னனி முறையில் பாடல்கள் பாடப்பட்டு வந்தன. ஆனால் மரபுவழி இசைநாடகங்களில் நடிக்கும் நடிகர்கள் தமது சொந்தக் குரலிலேயே பாடியும். வசனம் பேசியும் நடித்து வந்தார்கள். அதனால் இசைநாடகங்களுக்கு தனிப்பட்ட மதிப்பு மக்களிடையே வளர்ந்து வந்தது. அதனால் இசைநாடகங்களை முறையாகப் பழகி தாமும் பாடி நடிக்க நடிகர்கள் பலரும் விரும்பினார்கள். அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கத்தில் மேடையேற்றப்பட்ட 'கர்ணன்' நாடகத்தில் நடித்து பலராலும் பராட்டப்பட்ட திரு.பி.சண்முகலிங்கம் என்பவர் இசைநாடகத்திலும் தான பங்குபற்றி நடிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டார்.

அவ்வாறு ஆவல் உந்தப் பெற்ற அவர் கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்களைக் கண்டு தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார். மற்றவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே நல்ல கலைஞனின் செயலாகும். ஆர்வம் கொண்டு நிற்பவர்கள் தாம் எத்துறையில் ஆர்வம் கொண்டு நிற்கிறார்களோ அது நன்றே நிறைவேறும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருப்பார்கள். என்பதை நன்கு புரிந்த கொண்ட கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் திரு.பி.சண்முகலிங்கம் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முன்வந்தார். எனினும் கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்கள் சண்முகலிங்கத்தைப் பார்த்து ' நீங்கள் அரிச்சந்திர மயான காண்ட நாடகத்தை நடிக்க விரும்புவதாகக் கூறுகின்றீர்கள் அரிச்சந்திரனாக நீங்கள் நடித்தால் சந்திரமதியாக நடிக்க யாரை நியமித்துள்ளீர்கள்' எனக் கேட்டார். சந்திரமதியாக நடிக்கக் கூடிய நடிகர் ஒருவரை திரு.பி.சண்முகலிங்கம் அவர்களால் கொண்டுவர முடியவில்லை. திரு.வி.செல்வரத்தினம் அவர்களை நடிக்க வைக்கலாம் என்றால் அதுவும் முடியவில்லை. காரணம் அவர் அப்பொழுது நடிகமணி வி.வி.வைரமுத்து குழுவினருடன் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஓய்வு கிடைப்பது அரிதாக இருந்தது. எங்கு தேடியும் தனக்கு ஜோடியாக நடிக்கக் கூடியவரை கொண்டு வர திரு.பி.சண்முகலிங்கம் அவர்களால் முடியவில்லை. அவர் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார். அந்த முடிவின்படி அந்த முடிவினைக் கேட்டு நடிக்க வைப்பது அவரால் முடியாத

காரியமாகவே இருந்தது. அரிச்சந்திரனுக்குரிய பாடல்களை அவர் கலைஞரிடமிருந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். இருந்தாலும் நாடகத்தை மேடையேற்ற சந்திரமதிக்கு ஒருவர் நடித்தேயாக வேண்டும். யார் அந்த ஒருவர் அவரை எப்படிப் பெறுவது? இதுவே திரு.பி.சண்முகலிங்கத்தின் மனதில் பெரும் கேள்விக்குறியாக இருந்தது.

திரு.பி. சண்முகலிங்கம் ஒரு முடிவுக்கு வந்தவராய் தயக்கம் இருந்தபோதும் தன் விருப்பத்தை கலைஞரிடம் கூறினார். கலைஞருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பழம்பெரும் நடிகனாகவும், உடல் நிலை பருமனானதால் நடிப்புத்துறையை விட்டு விலகி வாழ்ந்த வருமான கலைஞருக்கு திரு.பி.சண்முகலிங்கத்தின் இந்த வேண்டுகோளை நிறைவேற்ற மனம் எழவில்லையானாலும், மனதின் ஓர் மூலையில் நடித்தாலென்ன? என்ற எண்ணமும் உதயமாகத்தவறவில்லை. திரு.பி.சண்முகலிங்கம் பெண் நடிகரொருவரைப் பெற முடியாது தவித்திருந்த நிலை, நாடகம் எவ்வாறேனும் நிறைவேற வேண்டுமென்ற ஆதங்கம் இவையிரண்டையும் கருத்தில்க் கொண்டு திரு.பி.சண்முகலிங்கத்தின் வேண்டுகோளை நிறைவேற்றச் சம்மதம் தெரிவித்தார்.

இசை நாடகத் துறையில் கொடிகட்டிப் பறந்த நடிகர், புகழ்என்னும் உச்சியில் பலராலும் பல மேடைகளிலும் போற்றப்பட்ட கலைஞர் சாதாரண நடிகனான இசை நாடகத்துறையில் கற்றுக் குட்டியான தன்னுடன் நடிக்க விருப்பம் தெரிவித்து அவரை மெய்சிலிர்க்க வைத்தது. ஆனந்த மிகுதியால் கலைஞரை கட்டித் தழுவி முத்தமிட்டு மகிழ்ந்தார். அவரின் ஏற்பாட்டின் பிரகாரம் நெறியாள்கை செய்வதோடு, சந்திரமதியாகக் கலைஞர் வி.கெ.இரத்தினமும், அரிச்சந்திரனாகத் தானும் நடிக்க மற்றும் நடிகர்களை தெரிவு செய்ய ஆரம்பித்தனர். அதன் பிரகாரம் கால கண்டேயராகச் சின்னத்துரை அவர்களும், சத்தியகீர்த்தியாக கணேச சுந்தரம் ஐயா அவர்களும், நட்சத்திலஐயராக வி.கே.செல்லத்தம்பியும், லோகதாசனாகக் கலாமாலினியும், விஸ்வாமித்திரமுனிவராக ஆறுமுகம் அவர்களும் நடிக்க மேலும் உதவி நடிகர்களாக வெள்ளைதனபால், ஐயாத்துரை ஜீவதாசன் பச்சடி யோகராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு நாடகம் 'மயானத்தில் மன்னன்' என்ற பெயரோடு மேடையேறியது. இதுவரை காலமும் சரித்திர புராண சமூக நாடகங்களில் வசனம் பேசி, பின்னணிப் பாடலுடன் மேடையேறி நடித்த வந்த திரு.பி.சண்முகலிங்கம் மரபுவழி இசைநாடகங்களில் நடிக்கும் ஆற்றலைப் பெற்றார். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் திரு.பி.சண்மகலிங்கத்தின் முன்னேற்றத்திற்காக இடையறாது நடத்தி வந்த நட்டுவாங்கமே இதற்கு காரணமாக அமைந்தது.



"மயானத்தில் மன்னன்" நாடகத்தில் அரிச்சந்திரனாக பி.சண்முகலிங்கம், சந்திரமதியாக கலைஞர், வி.கே.இரத்தினம் தேவதாசனாக கலாமாலினி சிவானந்தன் ஆகியோர்.

ஒரே மேடையில் ஒரே நாடகத்தை வெவ்வேறு குழுவினர் மேடையேற்றியமையைப் பார்த்த கலாரசிகர்கள் அல்வாய்க கிராமத்திலும், அரியாலைக் கிராமத்திலும் இருந்தவர்களேயென முன்னொரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதில் அல்வாயில் நடந்தேறிய நாடகம் பற்றியும், பங்கு கொண்ட கலைஞர்கள் பற்றியும் தெரியப்படுத்தியிருந்தேன். அதேபோல ஒரே நாடகத்தை இருவேறு குழுக்கள் நடித்தமையை அரியாலை வாழ் கலாரசிகர்கள் பார்த்த வரலாற்றினை இங்கு குறிப்பிடுகிறேன். நட்டுவாங்கத்துறையில் கலைஞர் வி.கெ.இரத்தினம் அவர்கள் ஈடுபட்டிருந்த காலத்தில் ஒரு நாள் திரு.பி.சண்மகலிங்கம் அவர்கள் கலைஞரைக் சந்திக்க வந்திருந்தார். அரச திணைக்களம் ஒன்றில் வெளிமாவட்டத்தில் கடமையாற்றி வந்த திரு.பி.சண்முகலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் கலைஞரை வந்து சந்திக்காமல் சென்றதில்லை. அவ்வாறு சந்திப்பிற்காக திரு.பி.சண்முகலிங்கம் வந்துள்ளார். எனக் கலைஞர் நினைத்தார். வந்தவுடன் சுகநலன் விசாரித்த திரு.பி.சண்முகலிங்கம் கலைஞரைப் பார்த்து 'அரியாலையில் ஒரு நாடக விழா செய்யப்போகிறோம். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய திறந்தவெளி அரங்கிலேயே அந்நாடகத்தை மேடையேற்றவுள்ளோம். நீங்களும் நடிக்க வெண்டும் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களையும் நடிக்க வைக்க வேண்டும் . அந்த ஒழுங்கினை நீங்களே செய்துதர வேண்டும்' எனக்கூறி நிறுத்தினார்.

'என்ன மீண்டும் நானும் நடிக்க வேண்டுமா?' எனக் கலைஞர் கேட்டார். நிச்சயமாக எனப் பதிலளித்தார். சண்முகலிங்கம் 'அப்படியானால் என்னென்ன நாடகம் போடுவதாக உத்தேசம்' என கலைஞர் கேட்க 'ஒரே நாடகம் தான் ஆனால் இரண்டு வெவ்வேறு மன்றங்கள் நடிக்கப் போகின்றன. அதற்காகவே நான் உங்களிடம் வந்துள்ளேன். 'நடிகமணி வைரமுத்துவும், செல்வமும் நீங்களும் நானும் அரிச்சந்திரன். சந்திரமதியாக 'மயானகாண்டம்' நாடகத்தையே மேடையேற்ற வேண்டும்.' எனச் சண்முகலிங்கம் சொன்னார். கலைஞருக்கு என்ன பதில் சொல்வதென்றே தோன்றவில்லை. நடிப்புத்துறையை விட்டு நெறியாள்கை செய்வதையே முற்றுமுழுதாக நான் கொண்டிருப்பதாலும், தனது உடல்நிலை பெண் பாத்திரத்திற்குப் பொருந்துமா? என்பதாலும், நடிகமணி வைரமுத்த இதற்குச் சம்மதிப்பாரா? என்பதாலும் அவர் மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அவர் பலமான சிந்தனையில் ஆழ்ந்து போனார்.

'என்ன யோசிக்கிறீர்கள்' என சண்முகலிங்கம் கேட்டபோதே கலைஞர் 'யோசிக்காமல் என்ன செய்ய முடியும். நடிகமணியின் சம்மதம் கிடைக்குமா? என்பதே காரணம்' என்றார். சண்முகலிங்கமோ விடுவதாக இல்லை. 'நடிகமணியிடம் நேரடியாகச் சென்று கேட்போம். அவர் சம்மதிப்பாரானால் எனக்கும் சம்மதமே'

எனக் கலைஞர் கூறினார். அதன் பிரகாரம் நடிகமணியிடம் சென்று சம்மதம் பெறப்பட்டது. ஒரு கலைஞனின் வேண்டுகோளை நடிகமணி அவர்களால் தட்டிக்கழிக்க முடியவில்லை. நடிகமணி வி.வி.வைரமுத்து திரு.பி.சண்முகலிங்கத்தைப் பார்த்து 'முன்பு ஒருமுறை அல்வாயூரில் இவ்வாறு நாடகம் நடித்தோம். அதுபோல அரியாலையிலும் அவ்வாறு நடிக்கப்போவது மகிழ்ச்சியைத் தந்தாலும் நாடகம் நடிப்பதில் போட்டி இருக்கலாம். ஆனால் பொறாமை இருக்கக் கூடாது நட்பின் அடிப்படையில் நடந்து கொள்வோம். எனக்கூறினார். அதனைக் கேட்ட சண்முகலிங்கம் அவர்கள் 'இது அரியாலை மக்களின் அன்பான வேண்டுகோளாகும் இதில் போட்டியென்ற சொல்லுக்கே இடமில்லை' என்று கூறினார். நாடகத்திற்கான திகதி குறிப்பிடப்பட்டது. அரியாலை பி.சண்மகலிங்கம் குழுவினர் கலைஞர் வி.கே.இரத்தினத்தின் கீழ் நல்ல பயிற்சி பெற்றார்கள்.

இந்நாடகங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய திறந்த வெளியரங்கில் மேடையேற்றப்பட்ட பொழுது பெருந்திரளான மக்கள் கூடினார்கள். அரியாலையின் அயற்கிராமங்களிலிருந்தும் பலர் இந்நாடகங்களைப் பார்ப்பதற்கு வருகை தந்தார்கள். எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காமல் மக்களைக் கவரக்கூடிய 'அரிச்சந்திர மயான காண்டம்' என்னும் இந்நாடகம் இரு குழுக்களாலும் நன்றே நடிக்கப்பட்டன. கலைஞரின் நட்டுவாங்கத்திற்கு இது நல்ல எடுத்துக் காட்டாகவே அமைந்தது.

## மலர் மணம் - 23

## 'வெள்ளி விழாவில் பாமாவிஜயம்'

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் ஆகக் கூடுதலான சனசமூக நிலையங்களைக் கொண்ட கிராமமாகத் திகழ்வது அரியாலைக் கிராமமாகும். இந்த சனசமூக நிலையங்கள் தமிழர்களின் அளப்பரிய கலை, கலாச்சார, பண்பாடுகளைக் பேணிக் காக்கும். அதிமுக்கிய கடமையை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாறு இயங்கி வரும் சனசமூக நிலையங்களில் அதிக கூடுதலான அங்கத்தவர்களைக் தன்னகத்தே கொண்டு இயங்குவது அரியாலை சனசமூக நிலையமாகும். அரியாலையின் மேற்குப் புறமாக அமைந்துள்ள இந்நிலையம் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு கிழக்காக மிக அண்மையில் அமைந்துள்ளது. விளையாட்டு மைதானம், திறந்த வெளி கலை அரங்கு, படிப்பகம், சிறுவர் பூங்கா, உள்ளக விளையாட்டு மண்டபம், போன்ற ெல்லா வசதிகளையும் கொண்டது. இந்நிலையம்.

இந்நிலையத்தின் 25 ஆண்டு நிறைவினை வெள்ளி விழாவாகக் கொண்டாடினார்கள். இந்த நிறைவினை வெள்ளி

விழாவாகக் கொண்டாடினார்கள். இந்த விழாவில் அரியாலையின் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றன. அதற்கான முழுப்பொறுப்புக்களையும் அந்தத் துறையில் ஆற்றல் படைத்த கலைஞர்களிடமே நிர்வாகம் கையளித்தது. கவியரங்கம் நடடத்தும் பொறுப்பு கவிஞர் வி.ஜயாத்துரை அவர்களிடமும். இயல் விவாத அரங்கு திரு.சொக்கலிங்கம் அவர்களிடமும், இசை அரங்கு அரியாலை இரட்டையகளென அழைக்கப்படும். திரு.பாலசிங்கம், திரு.வி. பரமசாமி ஆகியோரிடமும், நாடக அரங்கு (இசை) கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டன.

கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் நல்ல ஒரு இசை நாடகத்தை மேடையேற்ற வேண்டும் என்ற ஆவலில் மும்மரமாக ஈடுபட்டார். வெள்ளிவிழாவில் மேடையேற்றப் 'பாமா விசயம்' என்னும் இசை நாடகத்தை தெரிவு செய்தார். இந்நாடகத்தில் இரு பெண் பாத்திர நடிகைகள் தேவை. பாமா, ருக்குமணி பாத்திரங்களே இவையாகும். பெண் பாத்திரத்திற்கு நடிகைகளை மற்றைய நாடக மன்றங்களுக்கு வழங்கிய நாடக மன்றம் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களால் வழி நடத்தப்படும். அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபா அல்லவா? பெண் பாத்திரத்தை ஏற்று நடிப்பவர்களை பெறுவது அவர்களுக்கு சிரமமாக இருக்கவில்லை. ஈழத்து திரைப்படங்களில் நடித்த பெருமைக்குரிய கலைஞர்கள் இருவர் பெண் பாத்திரமேற்று நடித்தார்கள். அவர்கள் யார்? வேறு யாருமல்ல கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்டு நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுடன் இசை நாடகங்களில் நடித்து வந்தவரும் 'நிர்மலா' திரைப்படத்தில் நடித்தவருமான வி.செல்வரத்தினம் அவர்களும் சுண்டக்குளி யாழ் நாடக கலா மன்றத்ததின் 'அடங்காப்பிடாரி' என்னும் நகைச்சுவை நாடகம் மூலம் புகழ்பெற்றவரும், 'வெண்சங்கு.' திரைப்படத்தில் நடித்தவரும், கலைமகள் சமூகத்தை சேர்ந்தவரும் சிறப்பு நடிகரெனப் பாராட்டுப் பெற்றவருமான திரு.சி.சிவநேசன் அவர்களுமே யாவார்.

இவர்களில் திரு.வி.செல்வரத்தினம் அவர்கள ருக்குமணியாகவும், திரு.சி.சிவநேசன் அவர்கள் பாமாவாகவும், சி. ஜெயரத்தினம் அவர்கள் இந்திரனாகவும் அசுர வேந்தனாக மாஸ்டர் சி.ஜெயராசாவும். நாரதராக கலைஞரும் நடித்தார்கள். மிக குறுகிய கால இடைவெளிக்கு கலைஞரின் நாட்டுவாங்கத்தில் உருவாக்கப்பட்ட இந்த நாடகம் கலா ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலை பெற்றது. சங்கரதாஸ் சுவாமிகளின் பாடல்களைக் கொண்டுள்ள இந்நாடகத்திற்கு, கவிஞர் கே.வி.ஜயாத்துரை அவர்களும் சில பாடல்களை எழுதி கலைஞர்களுக்கு பக்கபலமாக செயற்பட்டார். எந்த பாடல்களானாலும் மேடைக்கேற்ப இசைக்கக்கூடிய முறையில் பயின்றுவிக்கும் ஆற்றலும், நவரச பாவங்களை வெளிப்படுத்தக் கூடிய நெறியாள்கையும் நிறையப் பெற்றமையால் கலைஞர்

வி.கே.இரத்தினம் அவர்கள் நாட்டுவாங்கத்துறையில் திறமைமிக்க கலைஞராகக் திகழுந்தார்.

## மலர் மணம் 24

## 'காந்தி சனசமூக நிலைய கலைஞர்களுக்கு நாடக பயிற்றுவிப்பு'

நாட்டுக் கூத்து எனப்படும் நாடகப்பணியை காலம் காலமாக மேடையேற்றி வந்தவர்கள் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையமக்கள் இவர்கள் அக்காலத்தில் கோவலன் கூத்து, சீகன் கூத்த, லவகுவசன் கூத்து கண்டியரசன் கூத்து, பவளக்கொடிகூத்து , சாவித்திரிக் கூத்து போன்ற தரமான கூத்துக்களை மேடையேற்றி வந்தார்கள். இந்நாடகங்களை மேடையேற்ற மூலகாரணமாக இருந்தவர்கள் திரு.மார்க்கண்டு, திரு.தம்பு, ஆர்மோனிய சின்னத்துரை, திரு.கதிர்ராமு ஆகியோராவர். இவர்கள் ஆடிய நாட்டுக்கூத்து நாடகங்கள் விடியவிடிய அல்லது இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறுவதுண்டு இவர்களுக்குப் பின்னால் வந்த இளைஞர்கள் நாடகத்தின் புதிய வடிவங்களை க்ண்டு மையல் கொண்டு அவற்றினை மேடையேற்ற தலைப்பட்டார்கள். அதன் காரணமாக அவர்கள் அந்தத் துறையில் ஆர்வம் மிக்கவர்களை நாடிச் சென்றார்கள்.

இசை நாடகத்திற்கு யாழ்ப்பாணம் எங்கும் வரவேற்பிருந்த அக்கால கட்டத்தில். இசை நாடகத்தை முறைப்படி பயின்று மேடையேற்றும் பொருட்டு தமது அயலில் வசிப்பவரும் இசை நாடகத் துறையில் அனுபவ முதுமை பெற்றவரான கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களை நாடிச் சென்றார்கள். யாருக்கும் எந் நேரத்திலும் தான் கற்ற கலையைப் பயிற்றுவிக்கும் கலையார்வம் மிகக் கொண்ட கலைஞர் அவர்களின் வேண்டுகோளை நிராகரிக்கவில்லை. எக்கலை வடிவமானாலும் சிறந்த பயிற்சி பெற்றால் எவரும் அதனை நிறைவேற்றும் வல்லமை கொண்டிருப்பார்கள். என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். கலைஞர் அவர்கள் இசைஞானமே இசைநாடகத்திற்கு முக்கியமான குரல்வளம் ஓரளவு இருந்தால் பின்னணி வாத்திய இசையோடு பாடல்களை பாட முடியும். நல்ல நடிப்பும் சேருமானால் நாடக மேடையேற்றத்திற்கு அவை போதுமானது. ஆனால் ஆரம்ப காலத்தில் இசை நாடகம் மேடையேற வேண்டுமானால் குரல் வளமே மிக முக்கியமாகத் தேவைப்பட்டது. காரணம் ஒலி பெருக்கி

ஆனால் இடைப்பட்ட காலத்திலிருந்து ஒலிபெருக்கி வந்ததன் பின் குரல் வளம் முக்கியமானதாகக் கருதப்படவில்லை. ஓரளவு குரல் வளம் பாடும் திறமை பொருத்தமான உடல் அமைப்பு ஒப்பனைப் பொருத்தம் இவையிருந்தால் இசை நாடகங்களில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதனையே கலைஞர் தான் நட்டுவாங்கம் செய்யும் நாடகங்களில் கவனித்து வந்தார். அவ்வாறு செயற்பட்ட தானாலையே அவர் பயிற்றுவித்த நாடகங்கள் வெற்றி கண்டன. இதன் அடிப்படையில்தான் காந்தி சனசமூக இளைஞர்களுக்கு 'அரிச்சந்திரமயான காண்டம்' நாடகத்தினை கலைஞர் பயிற்றுவித்து வந்தார். சுமார் இரண்டு மாதகாலமாக நடத்தப்பெற்ற பயிற்சியின் பின் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது. அரிச்சந்திரனாக காலம் சென்ற திரு.யோகராசா அவர்களும் சந்திரமதியாக திரு.தில்லையம்பலம் அவர்களும் நடித்தார்கள். இந்த நாடக அரங்கேற்றத்தின் போது கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களை கௌரவிக்க ஏற்பாடாகியிருந்த பொழுதும் அக்கௌரவிப்பானது இடம்பெறவில்லை.

இந்நாடக நிகழ்வு நடைபெற்று ஒரு வருட கால்த்தின் பின் இதே சனசமூகநிலைய இளைஞர்கள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களிடம் 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகத்தை இயக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். இந்நாடகம் பயிற்றுவிக்கப்பட்டு மேடையேறிய தினத்தில் கலைஞர் மேடையில் வைத்து நாடகக் கலைஞர்களால் கௌரவிக்கப்பட்டார். இவ்விரு நாடக அரங்கேற்றங்களுமே இசை நாடகத்துறையில் காந்தி சனசமூகநிலையத்தவர்கள் காலடி எடுத்து வைக்க திறவுகோளாக அமைந்தது. மிக அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்திய நாடகப் போட்டியில் கலந்து கொள்வதற்காக 'பக்த நந்தனார்' இசை நாடகத்தினையும் பயிற்றுவித்து ஊக்குவிப்பு அளித்தவரும் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களே தான் கற்றுக் கொண்டவற்றை மற்றவர்களையும் அறிய வைத்து பயிற்றுவிப்பதே சிறந்த பயிற்றுனர்களின் செயற்பாடாகும் அவ்வாறு பல நாடகங்களை தனது முதுமைக் காலத்தில் பயிற்றுவித்த கலைஞரின் கலைச் சேவை பற்றி மேலும் தொடர்ந்த வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

## மலர் மணம் 25

## 'கல்லூரிகளில் தனியார் கல்வி நிலையங்களில் நாடகப் பயிற்றுவிப்பு'

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தில் கல்வித் தேவைக்கான ஒப்படை காரணமாக உயர்தர வகுப்பு மாணவிகள் இசை நாடகப் பயிற்சி ஒன்றை பெறுவதற்காக கலைஞரிடம் வந்தார்கள். அவர்கள் தங்களுக்கு 'அரிச்சந்திர மயானகாண்டம்' நாடகத்தை பயிற்றுவிக்கும்படி கேட்டக் கொண்டார்கள். அதற்கிணங்க கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் தனது தொழிலையும் பாராது இக் கல்லூரி மாணவிகளின் வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டு நாளாந்தம் பிற்பகலில் மேற்படி கல்லூரிக்குச் சென்று பயிற்சியளித்து வந்தார். இக்கல்லூரி மாணவிகள் பயிற்சியை மிகக் கனகச்சிதமாக முடித்து நாடகத்தை அரங்கேற்றினார்கள். எனக் கலைஞர் சொன்னார்.

அடுத்து கோப்பாய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியை ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க அக்கல்லூரி மாணவிகளுக்கு 'ஸ்ரீவள்ளி நாட்டிய நாடகத்தை பயிற்றுவித்தார். மூன்று கிழமைகள் பயிற்றுவிப்பு நடைபெற்றது. இப்பயிற்றுவிப்பு பற்றி

கலைஞர் கூறும்பொழுது பாடசாலை மாணவிகளுக்கு மனனம் செய்யும் தன்மை வேகமுடையது எனவும் பயிற்சியை மிக உன்னிப்பாக கவனித்து நிறைவேற்றுவதில் அவர்கள் திறமை படைத்தவர்களே எனவும் சொன்னார். ஒரு நாள் பயிற்சியின் போதே அவர்கள் அவதானம் சிறப்பாக விளங்கிக் கொள்ளப் பட்டதால் நாட்டிய நாடகத்தை அவர்கள் பழகுவதற்கு சிரமம் இருக்கவில்லை எனச் சொன்னர். இந்த நாட்டிய நாடகத்திற்கு பின்னணி இசை வழங்கியது தனது மகளின் கணவரும் தேசிய சேமிப்பு வங்கி ஊழியருமான திரு.பி.வரதராசா எனவும் சொன்னர். இக்கல்லூரி அதிபர் இந் நாட்டிய நாடகத்தைப் பார்த்து விட்டு நாட்டியம் ஆடுபவர்கள் தான் நாட்டிய நாடகத்தை பயிற்றுவிக்க வேண்டும் என்ற கட்டாயம் இன்றிலிருந்து தேவையற்றது என நான் கருதுகிறேன. என்றார். நாடகக் கலைஞரால் ஆடல் பாடலை மிகத் திறமையாகப் பயிற்றுவிக்க முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தது.

அரியாலையில் ஆசிரியர் எம்.விஸ்வநாதன் 'ரூபா அக்கடமி' என்ற பெயரில் தனியார் கல்வி நிறுவனமொன்றை நடத்தி வந்தார். வருடா வருடம் இந்நிறுவனத்தின் நவராத்திரி விழா நடைபெற்று வருவது வழக்கம் அங்கு கல்வி கற்கும் மாணவ மாணவிகள் இறுதி நாள் நிகழ்வில் 'நாடகம்' ஒன்றினை மேடையேற்றுவது வழக்கமாக நடைபெற்று வந்தது. ஒருமுறை நவராத்திரி விழாவில் மாணவிகள் நடிக்கும் இசை நாடகம் ஒன்றை மேடையேற்ற 'ரூபா அக்கடமி' நிருவாகத்தினர் விரும்பினார்கள். அதனை மேடையேற்றும் நட்டுவாங்கப் பொறுப்பை கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களிடம் கையளித்தார்கள். கலைஞர் 'ஸ்ரீவள்ளி இசைநாடகத்தை கல்வி நிறுவன மாணவிகளுக்கு நல்லமுறையில் பயிற்றுவித்தார்.

நல்ல குரல் வளமும், நடிப்புத்திறனும், ஒப்பனை அழகும் இந்நாடகத்தில் பங்கு கொண்ட மாணவிகளுக்கு அமைந்தமையின் காரணமாக நாடகம் அரங்கேற்றிய பொழுது பலரின் பாராட்டுதலையும் பெற்றது. கலைஞர் சகலராலும் பாராட்டப்பட்டார். தனது முதுமைக் காலத்தில் ஓய்வாக இருக்கவில்லை. எப்பொழுதும் ஏதாவதொரு நிகழ்ச்சிக்காக அவர் செயற்பட்டுக் கொண்டிருந்தார். தீட்டத் தீட்டவே கத்தி கூராகும் நாடக மேடையில் ஆடுவதை விட தன்னால் பயிற்றப்பட்டவர்கள் நிகழ்ச்சிகளைச் செய்யும் போது ஏற்படும் இன்பம் அலாதியானது என கலைஞர் வி.கே.இரத்தினம அடிக்கடி சொல்வார்.

# மலர் மணம் - 26

## " அரிச்சந்திரனாக புதிய பாடகர் ஒருவர் "

யாழ்ப்பாண மாவட்டத்தில் எண்பதுக்குப் பின் கலை கலாச்சார நிகழ்வுகள் மந்தமடைந்து வந்தன. அக் காலகட்டத்தில் ஏற்பட்ட குழப்பநிலைகளின் பின் இந் நிலை ஏற்பட்டது பொருளாதாரக் கஷ்டங்கள் மக்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியது. மின்சாரப் பாவனை இல்லாது போயிற்று பலர் வெளிநாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் சென்றனர் இவ்வாறான சூழ்நிலையில் கலை கலாச்சார பண்பாடுகள் சீரளியும் நிலைக்குத் தள்ளப்பட்டன. இது தமிழ் மக்களைப் பாதித்து வருங்கால சமுதாயத்திற்கு மேலும் இடர்களைக் கொண்டுவரலாம் என்பதைக் கருத்தில் கொண்டவர்கள் மண்ணின் சிந்தனையுள்ளவர்கள் பல மாற்றங்களை ஏற்படுத்தத் தலைப்பட்டார்கள்.

ஓய்வுநிலை அடைந்திருந்த கலைஞர்கள் ஊக்குவிப்பின் மூலம் தட்டி எழுப்பினார்கள் புதுமையான கலையுணர்வுகளை மக்களிடையே பரவும் வகை செய்தார்கள் இதன் காரணமாக கலைகள் புதுவடிவம் பெற்றன் பழமையான கலைவடிவங்களும் புத்துயிர் பெற்றன அப்பொழுது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துள் பிரவேசித்த புதிய பாடகர் ஒருவர் இசைப்பாடல்களால் மக்கள் மனதை மதிமயங்க வைத்தார் அவருடைய இசைப்பாடல்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம ஒலிக்கத தொடங்கியது. பக்திப்பாடல்களானாலும் சரி, உணர்ச்சிப்பாடல்களானாலும் சரி, தத்துவப்படல்களானாலும் சரி, அவர் பாடலானால் சனக்கூட்டம் எங்கும் காணப்பட்டது.

சாந்தன் இசைக்குழு " என்றால் போதும் கோவில் நிகழ்ச்சிகள், பொதுநிகழ்ச்சிகழ் எல்லாவற்றிற்கும் இக் குழுவினரை மக்கள்நாடிச் செல்லத் தலைப்பட்டார்கள் இவ் இசைக்குழுவின் முக்கியமானவர் சாந்தன். இவர் அரியாலை மண்ணிலிருந்து இயங்கிய பின்னணி இசைக்கலைஞர்களின் உதவியோடு தனது இசைக் கச்சேரியை நடத்திவந்தார் இதன் காரணமாக இவருக்கு கலைஞர் வி.கே. இரத்தினம் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இசை நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றவரும் இசை நாடகத்துறையை வளர்க்க வேண்டுமென்ற பேரவாவில் வாழ்ந்து வந்தவரான கலைஞரைக் கண்டது திரு சாந்தனுக்கு அவர்களுக்கு ஒரு முக்கிய சந்திப்பாகவே இருந்தது.

சாந்தன் அவர்கள் இசை நாடகத்தில் தானும் நடித்தாலென்ன? என்னும் எண்ணம் உந்தப்பெற்றவராகக் கலைஞரிடம் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினார். சாந்தன் அவர்களின் கணீரென்ற குரல் அழகான தோற்றம் இவை நாடகமணியின் தோற்றத்தை கலைஞரின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தியது " நான் உயிருடன் இருக்கும் வரைக்கும் இசை நாடகத்தில் விருப்பம் கொண்டோருக்கு பயிற்சி அளிப்பதே என் தலையாய கடமையாக இருக்கும்" எனகலைஞர் வி.கே. இரத்தினம் அவர்கள் சாந்தனிடம் கூறினார். சாந்தன் அவர்கள் நல்ல நாளொன்றில் கலைஞரிடம் இசை நாடகத்தை பயிலுவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டார்.

" அரிச்சந்திர மயான காண்டம் " நாடகமே பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டது. இந் நாடகத்தில் அரிச்சந்திரனாக சாந்தனும் சந்திரமதியாக நடிகக்கலாமணி வி. செல்வரத்தினம் அவர்களும் சத்திய கீர்த்தியாக ந. இராமநாதன் (இராமண்ணா) அவர்களும் மற்றும் உதவி நடிகர்களான வெள்ளை தனபால், பச்சடி யோகராசா,

ஐ ஜீவதாசன், செ. பார்த்தீபன் ஆகியோரும் நடித்தார்கள் கலைஞர் வி.கே. இரத்தினம் அவர்கள் மிகமிக அக்கறையெடுத்து நட்டுவாங்கம் செய்த இந் நாடகம் முதன் முதலில் அரியாலையில் மேடையேறியது.சாந்தன் அவர்களின் தளர்வில்லாத நடிப்பும், நடிக கலாமணி வி. செல்வரத்தினத்தின் அனுபவ நடிப்பும், மற்றுங் கலைஞர்களின் சிறப்பான நடிப்பும் இந் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு நாடகம் பலராலும் பாராட்டப்பட்டு மேலும் பல மேடைகள் ஏற கால்கோளாகவிருந்தது நடிகமணி வி.வி. வைரமுத்து மறைந்த பின் இசை நாடகங்களில் மேடையேறுவது அங்கொன்றும் இங்கொன்றுமாக மேடையேற்றப்பட்டு வந்த காலத்தில் சாந்தன் குழுவினரின் இந்த நாடகம் பெரு வரவேற்பைப் பெற்று யாழ்ப்பாண மாவட்ட மெங்கும் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் திரையரங்குகள் இயங்காமையினால் சினிமாப் பாடங்களைப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்காது போனதன் காரணமாக மேடையேற்றப்படும் கலை நிகழ்ச்சிகளை மக்கள் தேடிச்சென்று பார்க்கும் நிலமை இருந்தது சாந்தன் அவர்கள் இசைக்குழுவும் இசைநாடகமும் கலாரசிகர்களின் மனதைக் கவர்ந்திழுக்க ஏதுவாக இருந்தது. இந் நாடகம் மேடையேற்றப்படும் இடங்களுக்கெல்லாம் கலைஞர் வி.கே. இரத்தினம் அவர்களையும் அழைத்துச் செல்ல தவறவில்லை இருந்தும் எல்லா இடங்களுக்கும் செல்லக்கூடிய நிலையில் அவரது வயோதிப நிலை இடந்தரவில்லை. இதனால் அவர் தொடர்ந்து செல்வதை நிறுத்திக் கொண்டார்.

மலர்மணம் 27

## """பண்டார வன்னியன் கதை இசை நாடகமாகியது""

மரபுவழி இசை நாடகமானால் அவை சங்கரதாஸ் சுவாமிகளால் எழுதப்பட்ட நாடகப் பாடலையே மூலமாகக் கொண்டு மேடையேற்றப்பட்டு வந்தது சிலவேளைகளில் காலத்திற்கேற்ப தென்னிந்திய சினிமாப்படப் பாடல்களும் இந் நாடகங்களில் புகுத்தப்பட்டு வந்தன நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களும் பெரும்பாலும் சங்கரதாஸ் சுவாமிகளின் கதை பாடல்களைப் பின்பற்றியே இசை நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

ஆனால் இவற்றிற்கு மாறாக அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவினர் இயங்கிவந்துள்ளார்கள். பாடல்கள் நாடகசபாவினர் இயங்கி வந்துள்ளார்கள். பாடல்கள் விருத்தங்கள் சுயமாக அவர்களால் எழுதப்பட்டு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாடல்களோடு எல்லா நாடகங்களையும் மேடையேற்றிவந்தார்கள். இதற்கு கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களின் உறவினர்களான திரு நீலன் செல்லக்கண்டு அவர்களும் அரியாலையூர் கே. வி. ஐயாத்துரை அவர்களும் துணை நின்றுள்ளார்கள். இவ்விதமாக அரியாலையூர் கே. வி. ஐயாத்துரை அவர்கள் விருத்தம், வெண்பா, பாடல்கள் ஆகியவை மூலம் "பொலிடோல் மகாராஜா" என்னும் நகைச்சுவை நாடகத்தை எழுதினார், பூச்சி புழுக்களின் தொல்லையால் கிராமப்புறக் குடும்பம் ஒன்று விவசாயம் செய்வதில் பாதிப்படைகின்றது என்ன செய்யலாம் என்று தெரியாமல் அவதிப்படும் அவர்களுக்கு நகர்ப்புற நண்பன் ஒருவனால் பூச்சி புழுக்களை ஒழிக்கும் பொலிடோல் நச்சுத்திரவகம் பற்றி விளக்கமளிக்கப்படுகின்றது மிகக் குறைந்த செலவில் பூச்சி புழுக்களை ஒழிக்கும் இத் திராவகம் கொண்டு விவசாயக் குடும்பம் பயன்பெறுகிறது.

பூச்சி புழுக்கள் இத்திராவகம் கண்டு வேதனைபடுவதாகவும் ஒரு காட்சி அமைக்கப்பட்டது. இதன் பின்னர் சகல நாடகங்களிலும் நாடகத்தோடு சேர்ந்து வருவதாக நகைச்சுவைப் பகுதிகளுக்கான பாடல்கள், விருத்தங்கள், வெண்பாக்கள் இவர்களால் எழுதப்பட்டன. இவற்றை இசையமைத்து கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் நாடகங்களில் புகுத்திவந்தார். அவ்வாறு அமைக்கப்பட்ட காட்சிகள் கலாரசிகர்களைப் பெரிதும் கவர்ந்து வந்தன. அண்மைக்காலத்தில் கம்பன் கழக விழாவில் இராமாயணத்தில் வரும் அயோத்திய காண்டத்தில் கைகேகி

தசரதனிடம் வரம் கோரும் காட்சி ஓரங்க நாடகமாக்கப்பட்டு இசைநாடகமாக நடிக்கக் கூடியவகையில் கவிஞர் வி. கே. ஐயாத்துரை அவர்களால் வழங்கப்பட்டது. இந் நாடகத்தை திரு வி. என். செல்வராசா அவர்களும் திரு வி. செல்வரத்தினம் அவர்களும் மேடையேறி நடித்தார்கள்.

கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களிடம் அரியாலை சுதேச திருநாட் கொண்டாட்டக் கலைக்குழுவினர் ஈழத்து வரலாற்றில் வரும் தமிழ் அரசர்களின் வரலாற்றினை இசை நாடகமாக்கி நடிக்க வேண்டும் அதற்காக நல்ல சரித்திர நிகழ்வொன்றை தெரிவுசெய்து இசைநாடகமாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டார்கள். கலைஞர் தனது மைத்துணரான கவிஞர் வி. கே. ஐயாத்துரை அவர்களிடம் கலந்தாலோசனை செய்தார். அப்பொழுது இடது காலும் இடதுகையும் பாரீசவாத நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் மைத்துணரான கலைஞரின் வேண்டுகோளை நிறைவேற்றித் தருவதாக கவிஞர் சொன்னார். இதன் பிரகாரம் பண்டாரவன்னியன் நாடகக்கதையை இசைநாடக வடிவில் மேடைக்கேற்றவாறு மாற்றியமைக்க கலைஞரும் கவிஞரும் முற்பட்டனர். திரு முல்லைமணி அவர்களால் எழுதப்பட்ட நாடகம் மூலக் கருவாகக் கொள்ளப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்கு ஏற்றவாறு இசைநாடகம் ஆக்கப்பட்டது நாளாந்தம் ஒவ்வொரு காட்சிகளாக பாடல்கள் எழுதப்பட்டு பதினைந்து நாட்களுக்குள் நாடகம் உருவாக்கப்பட்டது இந்த நாடகத்தை பிரதியாக்கம் செய்து கொடுக்கும் பணி திரு சி. சிவதாசனாகிய என்னிடம் ஒப்படைக்கப்பட்டது இரண்டு நாட்களில் இந் நாடகத்தைப் பிரதியாக்கம் செய்து உரியவர்களிடம் நான் ஒப்படைத்தேன்.

இந் நாடகத்தில் நடிப்பதற்காக அரியாலையின் சகல பகுதிகளிலிருந்தும் நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் பண்டாரவன்னியனாக திரு கற்கண்டு அவர்களும் பண்டார வன்னியனின் சகோதரியாகிய திரு வி. செல்வரத்தினம் அவர்களும் காக்கைவன்னியனாக திரு ந. இராமநாதன் அவர்களும் வெள்ளைக்காரத் துரையாக திரு சிவலிங்கம் அவர்களும் மந்திரியாக திரு சி. சிவகுமார் அவர்களும் புலவராக திரு கனகரத்தினம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். மிகக் குறுகிய காலத்துள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுமதெரிவுசெய்யப்பட்டார்கள் மிகக் குறுகிய காலத்துள் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களால் மேடையேற்றுவதற்காக பயிற்றப்பட்ட இந்நாடகம் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தின் போது மேடையேற்றப்பட்டது இந் நாடக மேடையேற்ற விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களால் கலைஞர் வி. கே. இரத்தினம் பாராட்டப்பெற்று பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுக்கு நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களையும் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களையும் நன்கு தெரியும் இசை நாடகத்துறையின் இரு கண்மணி போன்றவர்கள் இவர்களென முன்பு ஒருமுறை விழாவொன்றில் கூறியதாக கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் கூறியிருந்தார் இப் பண்டாரவன்னியன் நாடக மூலம் இசைநாடகத்தை தயாரிக்க முடியுமென்பதை கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களும் காலம் சென்ற கவிஞர் கே. வி. ஐயாத்துரை அவர்களும் நிருபித்துக் காட்டியுள்ளார்கள்.

## மலர்மணம்-28

### "" சாரங்கதரன் நாடக மேடையேற்றம் ""

கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்து மிலேனியம் எனக் கூறப்படும் இருபத்தோராம் நூற்றாண்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞன் காலம் சென்ற நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் வசந்தகான நாடகசபாவில் இணைந்து ஆரம்பகாலத்தில் நடித்த முதுபெரும் கலைஞர்களுள் இன்றுவரை உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞரும் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களேயாகும் புற்று நோயால் பாதிக்கப்பட்டு கொழும்பு மகரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நோய் குணப்பட்டு முதுமை நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் நடிக்க முடியாவிட்டாலும் நெறியாள்க்கை செய்து இசை நாடகத்துறையை வளர்க்க வேண்டும் என்ற ஆவல் உந்தப்பெற்றவராக வாழ்ந்து வருகின்றார்.

சங்கரதாஸ் சுவாமிகளால் எழுதப்பட்ட இசை நாடகங்களையே தாம்பொரும்பாலும் நடித்து வந்ததாகக் குறிப்பிடும் இவர் இவ் இசை நாடக வரிசையில் தன் மனதைப் பெருதும் கவர்ந்த நாடகம் " சாரங்கதரன் " என்றே கூறகிறார் மிகக் கூடுதலான மேடைகளில் " அரிச்சந்திரா மயான காண்டத்தில் " சந்திரமதி வேடத்தில் தோன்றி எல்லோரையும் கலங்க வைத்து புகழ் பெற்ற தாங்கள் ஏன் " சாரங்கதரன் " நாடகத்தை விரும்புகிறீர்கள் என்று கேட்ட பொழுது அவர் பின்வருமாறு கூறினார் நாடகம் என்றால் நவரசத் தன்மைகள் நிறைந்ததாக இருக்க வேண்டும் .அரிச்சந்திரா நல்லதங்காள் பக்தநந்தனார். பூதத்தம்பி போன்ற நாடகங்களில் சோகரசமே கூடுதலாக ஆட்சி செய்கின்றன. ஸ்ரீ வள்ளி நாடகத்தில் காதல் ரசமே கூடுதலாக ஆட்சி செய்கின்றது ஆனால் என்னைப் பொறுத்தவரை

நவரசத்தன்மைகளை நாடகத்தில் பரவலாகக் காண்பிக்க முடியாவிட்டாலும் பொழுது போக்கான முறையில் கலாரசிகர்கள் நாடகத்தை பார்த்துக் களிக்க வேண்டும் அவ்வாறு அமைக்கப்பட்ட நாடகமே " சாரங்கதரன் " நாடகமாகும் இந்த நாடகம் மகன் விரும்பும் பெண்ணைத் தந்தையும் விரும்புகிறார் நாயகனாக வரும் சாரங்கதரனுக்காக நல்ல நண்பன் ஒருவன் இருந்தான் நல்லவை தீயவை பற்றி அவன் எடுத்துக் கூறியும் கேட்காமல் தீயதை நாடிச் செல்லும் நாயகன் இறப்பதாக அமையும் இந்த நாடகத்தில் வெளிப்படுத்தப்படும் ரசங்கள் அளவானதாக அமைக்கப்பட்டுள்ளன அத்தோடு நல்ல பாடல்களும் இந்த நாடகத்தில் நிறைய இருக்கின்றன. இதுவே என் விருப்பத்துக்கான காரணம் எனச்சொன்னார்.

அதன் காரணமாக அந்த நாடகத்தை மிலேனியம் ஆண்டில் நெறியாள்கை செய்ய விரும்பினார். பெண்களைக் கொண்டே இந்நாடகத்தை இயக்கவும் முடிவு செய்தார். இவரின் விருப்பத்தை நிறைவேற்ற அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையம் முன்வந்தது மிலேனிய ஆண்டின் சிவராத்திரி விழாவில் இறுதி நிகழ்வாக இந் நாடகத்தை மேடையேற்ற அனுமதி வழங்கியது அனுமதி வழங்கப்பட்டபோது சிவராத்திரி தினத்துக்கு இரண்டு கிழமைகளே இருந்தன. அக் குறுகிய நாட்களுள் பின்வருவோரை நடிகர்களாக தெரிவுசெய்தார். சாரங்கதரனாக செல்வி தர்சா சிவானந்தன் அவர்களும், சித்திராங்கியாக செல்வி தேனுகா வரதராசா அவர்களும், நரேந்திர மன்னனாக செல்வி சுகந்தா செல்வராசா அவர்களும், நண்பன் சுமத்திரனாக செல்வி வராகினி சிவதாசன் அவர்களும், மதிமந்திரியாக செல்வி சஜிதா வைகுந்தவாசன் அவர்களும், கல்யாணத்தரகராக செல்வி உஷந்தினி சிவபஞ்சாச்சரம் அவர்களும், சித்திராங்கியின் தோழியாக செல்வி ஜனனி செல்வசிங்கம் அவர்களும், கொலைகாரனாக செல்வன் வ. சுவர்ணகீதன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

மிகக்குறுகிய நாட்களுள் அதிதீவிர பயிற்சி வழங்கி பல தடவை பின்னணி வாத்தியங்களோடு கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களால் நெறியாள்க்கை செய்யப்பட்டு இந்நாடகம் மேடையேற்றப்பட்டது இளம் வயதினரான பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகள் இந்நாடகத்தில் நடித்தமையினால் நாடகம் கலாரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது இந் நாடகத்தை பல இடங்களில் மேடையேற்றும்படி கலைஞரிடம் பலர் முன்னறிவிப்புக் கொடுத்தபோதும் தென்மாராட்சியில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக அரியாலையில் வாழ்ந்த அனைவரும் அனைவரும் இடம்பெயர்ந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமையால் இவ் விசைநாடகத்தை மேடையேற்றும் வாய்ப்புக்கள் கிடைக்காமற் போய் விட்டது.

மரபுவழி இசைநாடக வரலாற்றில் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் சிறந்த கலைஞனாகக் கணிக்கப்பட வேண்டும் ஈழத்து நாடகக் கலைஞர்களில் இவர் தனித்துவமானவரென்றே கொள்ளப்பட வேண்டும் தான் கற்ற கலையை மற்றவர்களும் அறிய வேண்டும் இசைநாடகக்கலை அழியாது காக்கப்பட வேண்டும் என்பதற்காக நடிப்புத்துறையோடு நின்று விடாமல் நட்டுவாங்கத்துறையிலும் ஆர்வம் காட்டி வரும் கலைஞரின் கைவண்ணத்தில் இசைப்பள்ளியில் கற்றுத் தேறியவர்கள் அவரைப்பின்பற்றி எங்கள் பாரம்பரிய இசைநாடக வடிவத்தை வளர்க்க முன்வரவேண்டும்.

## மலர்மணம்-29

### "" தீர்க்கசுமங்கலி ""

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடகங்களை மக்கள் விரும்பிப்பார்த்த காலத்தில் சில நாடகங்களுக்கு மக்களின் பேராதரவு நிறைய இருந்தது அவ்வாறான நாடகங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமல்லாது வன்னி மாவட்டம் மட்டக்களப்பு திருகோணமலை கொழும்பு கண்டி போன்ற இடங்களிலும் மேடையேற்றப்பட்டு வந்தது நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் இசைநாடகங்களில் "அரிச்சந்திர மயான காண்டம்" சுண்டுக்குளி யாழ் நாடகக் கலா மன்றத்தில் நகைச்சுவை நாடகமான " அடங்காப்பிடாரி " அரியாலை திமிர் நாடக மன்றத்தின் "வெளிக்கிடடி விஸ்வமடுவிற்கு" கோண்டாவில் வளர்மதி நாடகமன்றத்தின் "வடக்கும் தெற்கும்" பாஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தின் "கண்டியரசன்" அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் "ஸ்ரீ வள்ளி" அல்வாய் நாடக மன்றத்தின் "பூதத்தம்பி" ஆகியநாடகங்களை இவ்வரிசையில் குறிப்பிட்டுக் கூறலாம்.

பாஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தின் "கண்டியரசன்" நாடகக்குழுவில் நடித்தவர்கள் இசைநாடகம் ஒன்றினையும் மேடையேற்ற ஆசைப்பட்டார்கள். கண்டியரசன் நாடகம் இசை நாடகமாக இருந்தாலும் நாட்டுக்கூத்துப்பாணி நடிப்பும் கலந்திருந்தது " சத்தியவான சாவித்திரி " இசை நாடகத்தினை இவர்கள் நடிக்க ஆவல் கொண்டபோது அதற்கான ஆலோசனையைப் பெறுவதற்காக வி. கே. இரத்தினம் அவர்களை நாடிவந்தார்கள் அந்த நாடகக்குழுவின் முக்கிய நடிகரான அ. பாலதாஸ் சிறந்த ஆர்மோனிய வித்துவானாகத் திகழ்ந்தவர் நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் மரபுவழி இசை நாடகங்களைப் பார்த்து தாமும் அவ்வாறு இசை நாடகங்களை மேடையேற்றினாலென்ன? என எண்ணங் கொண்டே இசை நாடகங்களை மேடையேற்றத் துணிவு கொண்டார். நல்ல நாடகக் கூத்து அண்ணாவியரான இவருக்கு இசை நாடகத்துறையில் அவ்வளவு ஈடுபாடு ஆரம்ப நாட்களில் இருக்கவில்லை அதனால் கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்களின் உதவியை நாடினார்.

" சத்தியவான் சாவித்திரி " இசை நாடகம் " தீர்க்கசுமங்கலி " என்னும் பெயரோடு கலைஞர் அவர்களின் ஆலோசனையை பெற்று அவர்களால் மேடையேற்றப்பட்டது அந்த இசை நாடகமும் பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தினருக்கு ஒரு வெற்றி நாடகமாகவே அமைந்தது அந்த நாடகமும் பல மேடைகள் ஏறியது கலைஞர் வி. கே. இரத்தினம் அவர்கள் இது போன்று இன்னும் பல நாடகங்களுக்கு ஆலோசனை வழங்கியும் வந்துள்ளார் எலலாவற்றையும் குறிப்பிடப் போனால் பெரும் வரலாற்று நூலாக இதனைக் கொண்டுவரும் நிலை ஏற்படலாம்.

கலைஞர் விகே இரத்தினம அவர்கள் நட்டுவாங்கம் செய்து நடிக்க இழுந்த நாடக மொன்று இன்றுவரை மேடையேறாம் போனதுபற்றி குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது கூடுதலாகப் பெண் வேடத்திலையே நடித்து வந்த கலைஞர் நாரதராகவும் ஸ்ரீ வள்ளி நாடகத்தில் விருத்தகனாகவும் சத்தியகீர்த்தி நாடகத்தில் அரிச்சந்திரன் வேடங்களிலும் நடித்துள்ளார் பக்தநந்தனார் வேடத்திலும் நடிக்கக் கலைஞர் ஆவல் கொண்டார் இந்நாடகத்தில் முக்கிய பாத்திரங்கள் இரண்டாகும் நந்தனார்க்கலைஞர் நடிக்க ஐயர் வேடத்தில் திரு ஏ. வீரசிங்கம் அவர்களும் நடிக்க முடிவுசெய்யப்பட்டது.

இந் நாடகம் ஒரு மாத காலமாக ஒத்திகை பார்க்கப்பட்டது நாடகம் மேடையேற்றப்பட இருந்த நாளில் பலத்த மழை பெய்த தன் காரணமாக நாடகம் மேடையேற்ற முடியாமல் போனது அந் நாடகத்தைப் அந்த நாடக மேடையேற்ற முனைந்த போதும் முடியவில்லை அந்த நாடக மேடையேற்ற முயற்சியின் பின்பே கலைஞர் புற்று நோயினால் பாதிக்கப்பட்டார்.

## மலர் மணம் 30

# 'கலைஞரைப் பெரிதும் வாட்டிய புற்று நோய்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றனர் ஆன்றோர். நோயின் கொடுமையால் உலகில் பலரும் படும் கஷ்டங்கள் எண்ணில் அடங்கா கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கு புற்றுநோய் என்னும கொடியநோய் பீடித்தது. 1994ம் ஆண்டின் நடுப்பகுதியில் தொண்டையில் ஏற்பட்ட சளிக்கு வைத்தியம் செய்யும் பொருட்டு போதனா வைத்தியசாலைக்கு கலைஞர் விஇகே.இரத்தினம் அவர்கள் சென்றார். அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் புற்றுநோயின் அறிகுறிகள் இருப்பதைக் கண்டு உடனடியாக கொழும்பு மகரகம வைத்தியசாலைக்கு செல்லுமாறு ஆலோசனை வழங்கினார்கள்.

வைத்தியர்களின் ஆலோசனையைக் கேட்ட வி.கெ.இரத்தனம் அவர்கள் செய்வதறியாது துன்பத்திலாழ்ந்தார் நல்ல இசைநாடகக் கலைஞனுக்கு ஏற்பட்ட இந்நிலையைக் கண்டு குடும்பத்தோர், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் அவருக்காக வருந்தினார்கள். புற்றுநோய் என்றால் அது மனிதனுக்கு ஏற்படும் இறுதி நோயாகவே மக்கள் கருதி வருகின்றார்கள். அதற்குக் காரணம் இந்நோயின் பிடியிலிருந்த தப்புவது என்பது மிக அரிதாக இருந்தமையே ஆகும். கலைஞர் நோய்வாய்ப்பட்ட காலத்தில் யாழப்பாண மாவட்டம் போர்ச் சூழலில் சிக்கியிருந்தது. கொழும்பு செல்வதானால் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் உதவியையே நோயாளர்கள் எதிர்பார்த்து இருப்பார்கள். செஞ்சிலுவைக் கப்பல் சிலவேளைகளில் ஓடாது போனால் கிளாலியூடாக வன்னி சென்றே கொழும்ப செல்ல வேண்டிய அவல நிலை இருந்து வந்தது. யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையின் அனுமதி செஞ்சிலுவைக் கப்பலுக்கு கிடைத்த போதும் கப்பல் ஓடாத காரணத்தினால் கொழும்பு செல்வதற்கு முடியாமல் கிளாலி நீரேரிப் பாதையூடாக பிரயாணம் செய்து வன்னியூடாக வவுனியா வந்து கொழும்பு செல்ல ஆயத்தமானார்கள்.

கொழும்பில் மகரகம சென்று வரச்சிங்களம் தெரிந்த ஒருவர் தேவையென்பதால், சிங்களம் தெரிந்த ஒருவரும், கலைஞரும், அவரது மூத்த மகன் வைகுந்த வாசனும் பிரயாணத்தை மேற்கொண்டு வவுனியா வந்தடைந்தார்கள். அப்பொழுது வவுனியா வர்த்தகத் திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் நான் கடமை செய்து கொண்டிருந்தேன். எனது விடுதியில் வந்து தங்கிய இவர்களைக் கொழும்பு கூட்டிச் சென்று வெள்ளவத்தை சீவம்ஸ் லொட்ஜில் தங்கும் வசதி செய்து கொடுத்தேன். மகரகம புற்றுநோய் மருந்துவமனைக்குச் செல்லு முன் அவ்வைத்தியசாலையின் தலைமை வைத்திய அதிகாரி ஆர்.எஸ்.ஜயதிலகா அவர்களிடம் ஆலோசனை பெற்று மகரகம வைத்தியசாலைக்குச் சென்றோம். அங்கு வைத்திய அனுமதி பெறும் பொருட்டு வெளிநோயாளர் பிரிவில் காத்திருந்தோம். அங்கு புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படட்ட நோயாளர்களைக் கண்டதும் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் பயந்து போனார். தனக்கும் இப்படி நடக்குமோ? என எண்ணி வேதனைப்பட்டார்.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல கலைஞரின் அருகே இருந்த தமிழ் நோயாளி 'ஜயோ' கடைசிக்குத்தானே நாம் இங்கு வந்தோம் என்றார்.' கலைஞர் முளிபிதுங்க என்னைப் பார்த்தார். நான் அவரைப் பார்த்து 'வைத்தியம் செய்ய வந்த நீங்கள் பயப்படக் கூடாது. தைரியமாக இருங்கள்'. எனக்கூறி அவரை மனம் தேற வைத்தேன். 'யாழ்ப்பாணம் போவோமடா தம்பி' என்னால் இங்கிருந்து வைத்தியம் செய்வது இயலாத காரியம்' என அழாக்குறையாகக் கூறினார். கலைஞர். நான் அவரை மேலும் ஆறுதல் படுத்தி கரண்ட் பிடிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து கரண்ட் பிடிக்கும் இடத்திற்கு கூட்டிச் சென்றேன். அங்கு கடமையிலுள்ள அதிகாரி கரண்ட் பிடிப்பதானால் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் பிடிக்க வேண்டும். 'வருகிற கிழமை தேர்தல் காலமாதலால் தேர்தலுக்குப் பின் திகதி போட்டுத் தருகிறேன். நீங்கள் அப்பொழுது வாருங்கள் எனக் கூறினார். தேர்தல் காலமாதலால் கொழும்பில் தங்கி நிற்பது நல்லதல்ல என்ற காரணத்தால் கலைஞர் வி.கே. இரத்தினமும் கூடச்சென்ற நாமும் வவுனியா திரும்பினோம். வவுனியாவில் எனது திணைக்கள விடுதியில் தங்கினோம். எல்லோரும் நின்றால் செலவு அதிகரித்து விடும் என்ற காரணத்தால் எனது ஆலோசனைப்படி மகன் வைகுந்தனையும் கூடவந்தவரையும் யாழ்ப்பாணம் அனுப்பினோம்.

கலைஞர் என்னோடு தங்கினார். அவரை மீண்டும் கொழும்பு கொண்டு செல்லும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் என்னோடு தங்கிய நாட்கள் பொன்னான நாட்களென்றே கூறுவேண்டும். கலைஞரிடம் நாடக வரலாறு, அனுபவங்கள் பற்றிய இந்த நூலை எழுதுவதற்கு அதுவே கால்கோளாக அமைந்தது.

இந்நாட்களில் அவருடைய நாடகப் புதுமுகம் பற்றியும், நடிகமணி வீ.வீ.வைரமுத்துவுடன் மேடைகளில் தோன்றி நடித்தமை பற்றியும், இசை நாடக மேடைகளில் ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியும்,, விரிவாகவும், தெளிவாகவும் அறிந்து கொண்டேன். வீ.வீ.வைரமுத்து அவர்களுடன் இணைந்து நடித்து நாடக உலகில் புகழினைத் தேடிக்கொண்ட போதும், நடிகமணி வீ.வீ.வைரமுத்துவிற்கு முன்பே தான் நாடகம் நடிக்க ஆரம்பித்துவிட்ட உண்மையைக் கலைஞர் கூறினார். தொடர்ந்து கொழும்பில் கரண்ட் பிடிப்பதற்காக விடுதியில் தங்கியிருந்த நாட்களிலும் கலைஞர் வீ.கே.இரத்தினம் அவர்களிடமிருந்து மேலும் பல தகவல்களைச் சேகரித்தேன். ஆரம்ப காலத்தில் வீட்டு வளாவில் மேடைபோட்டு சேலையைத் திரையாகப் பாவித்து தானும் நண்பர்களும் நடித்ததாகவும், தான் பெண் வேடத்தில் சினிமாப்பாடல்களுக்கு நடனமாடியதாகவும் கூறினார். இந்த நிகழ்வுகளைப் பார்த்தே தனது மாமனார் திரு.நீலன் செல்லக்கண்டு அவர்கள் நாடகக் கதைகளை எழுதி, பாடல்களையும் இயற்றி நாடகங்களை இயக்கி தமக்கு ஆர்வமூட்டினார் என்றும் குறிப்பிட்டார். தமது ஸ்ரீகலைமகள் நாடக சபாவில் நடித்தவர்கள் ஒலிபெருக்கியில்லாத காலத்தில் தமது குரலின்வன்மையால் நாடகக் கலா ரசிகர்களை கவர்ந்தவர் என்றும் குறிப்பிட்டார். கதாநாயகன் பாத்திரத்தில் தோன்றித் தன்னோடு நடித்த மைத்துனர் கவிஞர் வே.ஐயாத்துரை பற்றிக் குறிப்பிடுகையில் அவரின் சாரீரவளம் மிகவும் அபரிதமானது என்றும், அதுபோலவே தன் ஒன்றுவிட்ட சகோதரன் கலாபூசணம் வீ.கே.பாலசிங்கம் அவர்களும் குரல் வளம் மிக்க நடிகரென்றும், இவர் நாடகங்களில் அதிகமாக வில்லன் பாத்திரமேற்று நடித்த போதும், இசையில் வல்லவரான இவருக்காக பாடல்கள் எழுதிப் பாடவைப்பதில் திரு.நீலன் செல்லக்கண்டு அவர்களும், கவிஞர் கே.வி.ஐயாத்துரை அவர்களும் முன்னின்று செயற்பட்டதாகவும் கூறினார்.

புற்று நோய்க்காக கரண்ட் பிடிக்கும் நாட்களில் கலைஞர் வாய்பேசமுடியாத நிலைக்காளானார். உணவு உட்கொள்வதும் முடியாத நிலையாகவே இருந்தது. அப்போதெல்லாம் அவர் தாங்கொண்ணாத் துயருக்கு ஆளானார். வாய் பேசாத நிலையில் கைச்சைகைகளினாலும் கடதாசியில் எழுதியும் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். நோய் ஆரம்பித்தபோது இவரின் கடைசி மகளுக்கு திருமணப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நோய் கூடுதலாகிச் செல்லும் வேளையில் அதனை யெண்ணியெண்ணிக் கவலைக்குள்ளானார். பல தடவை நான் கொழும்பில் சாக வேண்டியேற்பட்டால் தன் சுற்றங்கள் தன்னுடலைக் காணும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே என்பதை எண்ணிக் கவலை கொள்வார். நான் பல தடவைகள் அவருக்கு ஆறுதல் கூறி ஆசுவாசப்படுத்துவேன். சிலவேளைகளில் நகைச்சுவையான கதைகள் கூறித் தேற்றுவேன். பயம் அதிகரிக்கும் போதெல்லாம் வைத்தியரின் ஆலோசனையைப் பெறவேண்டுமென அடம் பிடிப்பார். அவரின் வேண்டுதலை எப்போதும் நிறைவேற்ற நான் தயங்கவில்லை. வெளிநாட்டில் இருக்கும் அவரின் மகன் அடிக்கடி தொலைபேசி மூலம் என்னோடு தொடர்பு கொண்டு தேவையான அளவு பண உதவி செய்து கொண்டிருந்தார். மேலும் வெளிநாடுகளில் இருக்கும் உறவினர்கள் அடிக்கடி அவரின் சுகம் பற்றி விசாரிப்பார்கள். கொழும்பில் இருக்கும் அவருக்குத் தெரிந்தோர் நேரடியாக வந்து அவரைப் பார்த்துச் செல்வார்கள். மரணத்தின் வாயிலில் துடித்துக் கொண்டிருந்த அவரை அன்னை கலைவாணி கைவிடவில்லை. ஆச்சி 'ஆச்சி'' என்று அவர் வணங்கும் தெய்வமல்லவா? அவள் கம்பனுக்காக கொட்டிக் கிழங்கு விற்றவள் அல்லவா? அவள் பட்டருக்காக கம்மலைக் களட்டி வானில் வீசியவளல்லவா? அவள். வாய்பேச முடியாத ஊமையைப் பாடவைத்தவள் அல்லவா? அவள் அந்த அன்னை கலைவாணியின் பேரருளால் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டார். அதற்குப் பின் தன் பிள்ளைகளான வசந்தவாசன், வதனவாசன், இராகினி ஆகிய மூவருக்கும் திருமணம் செய்து வைத்து இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

கலையின் தேவைக்காக, இசைநாடகத்துறை பற்றிய ஆலோசனைகளை மற்றவர்களுக்குப் போதிக்க இறைவன் அவரை வாழ வைத்தள்ளான். கலைஞர் வி.கே. இரத்தினம் அவர்களின் நாடக அனுபவங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் அவரால் மறக்க முடியாத சம்பவமெனக் கூறும் நிகழ்வுகளில் இரண்டு நிகழ்வுகள் பற்றி அடுத்து வரும் அத்தியாயாத்தில் பார்ப்போம்.

## மலர் மணம் 31
## ''மறக்க முடியாத நிகழ்வுகள்''

மனிதனின் வாழ்வில் சில மற்கக முடியாத சம்பவங்கள் இடம்பெறுவதுண்டு. அவ்வாறான மறக்கமுடியாத சம்பவங்கள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கும் ஏற்பட்டதுண்டு. அவர்கள் கூறிய இரண்டு சம்பவங்களை இங்கு குறிப்பிடுகிறேன். புற்றுநோய் வைத்தியத்திற்கான கரண்ட் பிடித்தல், ஊசிமருந்தேற்றுதல் முடிவடைந்து வீடு திரும்பிய கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் மீளவும் இருமுறை வைத்திய ஆலோசனை பெறுவதற்காக கொழும்பிற்கு வரும் போதெல்லாம்

எனது வவுனியாவிலுள்ள திணைக்களக விடுதியில் பல நாட்கள் தங்கிச் செல்வது வழக்கம். எனது விடுதியில் தங்கும் நாட்களில் என்னிடம் வரும் எனது நண்பர்களுக்கு தனது நாடக அனுபவங்கள் பற்றி எடுத்துரைப்பார். அவர்களும் பொழுதுபோக்காக கேட்டு மகிழ்வார்கள். தனது இசை நாடகப் பாடல்களை பாடிக் காட்டுவார். அவர் இருக்கும் நாட்களில் எனது நண்பர்களும் தேடிவந்து அவரோடு அளவளாவி. இசைநாடகப் பாடல்களை கேட்டு இன்புற்று மெய்மறந்து போவார்கள்.

அவ்விதம் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களோடு அளவுக்கதிகமான அன்பு செலுத்தி வந்தவர்கள். வவுனியா புகையிரத திணைக்களகத்தில் கடமை புரிந்த திரு.க.யோகேந்திரா, கட்டடப் பொருள் கூட்டுத்தாபனத்தில் சேவை புரிந்த திரு.பாலேந்திரா, உணவுத் திணைக்களகத்தில் கடமை புரிந்த திரு.புஸ்பரத்தினம், நீர் வழங்கல் வடிகால் அமைப்பு திணைக்களகத்தில் சேவை செய்த திரு.புலேந்திரன் வர்த்தகரான திரு.கமலாகரன், திரு.செந்தூரன் ஆகியோர் ஆவார். அதிலும் வவுனியா புகையிரதப் பகுதியில் வேலை செய்த திரு.க.யோகேந்திரா அவர்கள் கலைஞரோடு அளவளாவுவதில் அளவு கடந்த ஆசை உடையவராகத் திகழ்ந்தார். அவர் ஒருமுறை கலைஞரோடு அளவளாவிக் கொண்டிரக்கையில் அவரைப் பார்த்து ஐயா! உங்கள் நாடக அனுபவங்களில் மறக்க முடியாத நிகழ்வுகள் நடந்திருக்குமல்லவா? அந்நிகழ்வுகள் பற்றிக் கூற முடியுமா? என்று கேட்டார். அச்சமயம் நானும் உடனிருந்தேன். எதற்கும் மறுப்புச் சொல்லாமல் சம்பவங்களை அழகாக வர்ணித்துச் சொல்வதில் வல்லவரானார். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் மறக்க முடியாத இரு சம்பவங்களைக் கூறினார்.

முதலாவது சம்பவம்:

நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களின் காங்கேசன்துறை வசந்தகான நாடக சபாவினருடன் நாடகம் நடித்த காலத்தில், "அரிச்சந்திர மயான காண்டம்" இசை நாடகம் அமோகமாக மேடையேற்றிக் கொண்டிருந்த காலத்தில் மூன்று நாள் நாடகச் சுற்றுலாவை மேற்கொண்டு வவுனியா சென்றிருந்த போது இறுதி நாள் நாடக நிகழ்வன்று தந்தியொன்று யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது. அந்தத் தந்தியில் "நாளை எனது மகனின் பிறந்த நாள் உங்கள் நாடகம் ஒன்று மேடையேற்றப்பட வேண்டும் காத்திருப்பேன்" என்று எழுதப்பட்டிருந்தது. அந்தத் தந்தியை அனுப்பியவர் இலங்கை வானொலி புகழ் மிருதங்க வித்துவான் திரு.தம்பாப்பிள்ளையின் மகன் இரத்தினம் அவர்கள். மூன்று நாட்கள் நித்திரை விழிப்போடு நாடகமாடிய நடிகமணியின் நாடகக் குழுவினருக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. மறுப்புக் கூறவும் முடியாது. மிக வேண்டிய ஒருவர் கட்டாயம் நாடகம் மேடையேற்றியே ஆக வேண்டும். மறுநாள் நண்பகல் 12 மணிக்கு

பின்பே வவுனியாவில் இருந்து வாகனம் புறப்பட்டது. வாகனம் மாங்குளத்தை அண்மித்தபோது பிழையேற்பட்டது. வாகனத்தை திருத்தி முடிக்க நேரம் மூன்று மணியாகியது. அதன் பின் புறபட்ட வாகனம் திரு. இரத்தினம் அவர்களின் யாழ்ப்பாணம் நாவாந்துறை வீட்டை சென்றடைய இரவு ஏழு மணியாகியது. நாடகக் குழுவினர் எப்படியும் வருவார்கள் என்ற நம்பிக்கையில் காத்திருந்த திரு. தம்பாப்பிள்ளை இரத்தினம் அவர்கள் மகிழ்ச்சியால் பூரித்துப் போனார்.

அவர் வீட்டிற்கு முன்பாக வீதியை மறித்து இரண்டு ரக்டர் பெட்டிகள் இணைக்கப்பட்டு மேடை போடப்பட்டிருந்தது. ஆனால் சீன்கள் எதுவும் கட்டப்படவில்லை. அந்த மேடையில் நடிப்பது என்பது முடியாத காரியம். நல்ல வேளையாக வவுனியாவிற்கு கொண்டு சென்ற சீன்கள், தட்டிச் சீன்கள் வாகனத்தில் இருந்தமையினால் பிரச்சனை இல்லாது போய்விட்டது. சீன்கள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் போதே நடிகமணி வீ.வீ.வைரமுத்துவின் நாடகம் நடக்கப் போவதை அறிந்த சனக்கூட்டம் வரத்தொடங்கி விட்டது. என்ன நாடகம் மேடையேற்றப் போகின்றதென்பது சனங்களுக்கு தெரியாது. அதுமட்டுமல்லாது நடிக்கப் போகும் நடிகர்களுக்குத் தெரியாது. சீன்கள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. அப்போதுதான் தம்பாப்பிள்ளை இரத்தினம் ஓடிவந்து "என்ன நாடகம் நடிப்பதாக உத்தேசம் " என நடிகமணியிடம் கேட்டார். " யோசிப்போம்" நல்ல நாடகம் ஒன்றை மேடையேற்றுவோம் ஆனால் இப்பொழுது பிரயாணக் களைப்போடு வந்திருக்கும் எமக்கு பசியாய் இருக்கிறது. அதனை முதலில் தீருங்கள் "என நடிகமணி கூறினார். அப்படியானால் எல்லோரும் இப்பொழுதே வாருங்கள் சாப்பிடுவோம். எனத் தம்பாப்பிள்ளை இரத்தினம் அவர்கள் கூறினார்.

எல்லோரும் சாப்பாட்டு மேசைக்குச் சென்றார்கள். அங்கு சாப்பிட்டுக் கொண்டே "என்ன நாடகம் நடத்தலாம் என" நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்கள் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களைப் பார்த்துக் கேட்டார். "நடக்கும் நிகழ்ச்சி பிறந்தநாள் நிகழ்ச்சி எனவே சந்தோசத்தை வெளிப்படுத்தும் நாடகமாகவே போடுவோம்" என்றார். கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள். நடிகமணி எல்லோரையும் பார்த்து "ஸ்ரீவள்ளி" நாடகத்தை மேடையேற்றுவோம் என்றார். சாப்பாடு முடிந்ததும் திரு.தம்பாப்பிள்ளை இரத்தினத்திற்கு என்ன நாடகம் எனக் கூறிவிட்டு ஒப்பனை செய்யுமிடத்துக்கு அனைவரும் சென்று தத்தமது ஒப்பனைகளை தாம் தாமே செய்த முடித்தனர். பொறுமை இழந்த சனக்கூட்டம் கூக்குரல், விசில் சத்தமிட ஆரம்பித்தனர். சனங்களுக்கு என்ன நாடகம் நடக்கப் போகிறது என்பது தெரியாதே. சத்தம் இட முக்கிய காரணமாக இரருந்தது சனங்களின் சத்தத்தை அடக்கும் பொருட்டு ஒலிபெருக்கியில் ஸ்ரீவள்ளி நாடகம் இடம்பெறும் எனவும் இன்னும் சொற்ப வேளையில் நாடகம் ஆரம்பித்து விடும் எனவும்

அறிவிக்கப்பட்டது. சனங்களின் சத்தம் அடங்கியது. ஒப்பனை முடிந்த மேடைக்கு அனைவரும் வந்தனர். ஆர்மோனியம், மிருதங்கம், பின்னணி இசை வழங்கிக் கொண்டிருக்க மேடையின் திரை விலக கலைஞர் வி.கே.இரத்தினம் மேடையில் ''ஆ...ஆ...ஆலோலம்'' என பாட்டிசைக்க சனங்கள் ஆரவாரத்தோடு கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய நாடகம் ஆரம்பமானது. பெண்களுக்கேற்ற நளினத்தோடு பாடல்களை இசைத்து நடித்த கலைஞரை திரும்பவும் ''வன்ஸ்மோர்'' கூறிப் பாடும்படி சனங்களின் நடுவே இருந்து குரல்கள் எழுந்தன. இசை நாடக ஆரம்ப காலங்களில் ''வன்ஸ்மோர்'' சொன்னால் திரும்பவும் அதே காட்சி நடித்து காண்பித்தேயாக வேண்டும். இந்நாடகம் மேடையேறிய காலத்தில் அப்படியான நிலை இருக்கவில்லை. கலைஞர் ''வன்ஸ்மோர்'' பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு முறை கரையூர் பக்கிரி சின்னத்துரையுடன் நாடகம் ஒன்றில் நடித்துக் கொண்டிருக்கும்போது ''வன்ஸ்மோர்'' பலமுறை சொல்லப்பட்டும் திரும்பவும் செய்யாமை கண்டு மேடையை நோக்கி சனங்களால் கல்லெறி வீசப்பட்ட நிகழ்வையும் கலைஞர் சொன்னார். எதுவித ஆயத்தமும் முன்னேற்பாடும் இல்லாமல் மேடையேறிய இந்நாடகம் வெற்றியாக அமைந்தமை தன் வாழ் நாளில் மறக்க முடியாத சம்பவமே. எனக் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் குறிப்பிட்டார்.

இரண்டாவது சம்பவம்

வன்னி மாவட்டத்தில் நடந்த இந்தச் சம்பவம் மிக சுவார்ஸயமானது நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபராக இலங்கையர்கோன் இருந்த காலம் அப்பொழுது இப்பதவி டி.ஆர்.ஓ.என அழைக்கப்பட்டு வந்தது. பொலிஸார் இல்லாத பிரிவுகளில் இவர்களே பொலிஸாரின் கடமைகளையும் செய்து வந்தனர். குற்றமிழைக்கும் நபர்களை கைதுசெய்து விலங்கிட்டு கைதிக்கூட்டில் அடைத்து வைத்திருந்து அருகிலுள்ள நகரத்து பொலிஸாரிடம் ஒப்படைப்பது இவர்களின் கீழிருந்தது.

நெடுங்கேணியில் அவ்வுயர் அதிகாரியாக இருந்த இலங்கையர்கோனின் அழைப்பின் பெயரில் நெடுங்கேணியில் கலைஞர் வி.கே.இரத்தினம், நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் இணைந்து நடித்த ''அரிச்சந்திர மயானகாண்டம்'' நாடகம் மேடையேற ஒப்பந்தமானது. சகலதர மக்களாலும் நன்கு மதிக்கப்படும் ''இலங்கையர்கோன் நல்ல விமர்சகர் நடிகமணி வீ.வீ.வைரமுத்து குழுவினரின் இசை நாடகம் என்றால் மிகவும் விரும்பிப் பார்க்கும் ஆவல் நிறையப் பெற்றவர். ஈழத்து கலையுலகம் அவரை ஒருபோதும் மறவாது மறைந்து கிடந்த பாரம்பரிய கலைகளைப் பேணிக்காப்பதில் முன்னின்று உழைத்தவர் நீண்ட காலம் வாழாவிட்டாலும் வாழ்ந்த காலத்தில் செய்ய வேண்டியதெல்லாம் செய்து முடித்த பெருமைக்குரியவர் கலை

வடிவங்களை நிஜஉணர்வோடு ரசித்து விமர்சிக்கும் ஆற்றல் கொண்டவர்.

நெடுங்கேணியில் இவரின் காரியாலயத்தில் அருகிலேயே ''அரிச்சந்திர மயானகாண்டம்'' நடைபெற ஏற்பாடாகி இருந்தது. மேடையில் பின்னணி இசைப்போர் அமர்ந்திருந்த தட்டி சீன் மறைவில் ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்து நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தார். இலங்கையர்கோன் மயானகாண்டம் நாடகத்தில் சந்திரமதி தன் புதல்வனை அனுமதியின்றி மயானத்தில் எரிக்க ஆயத்தமாக இருக்கும் போது அரிச்சந்திரன் கோபத்தோடு வந்து சந்திரமதியின் புதல்வனின் உடலைத் தன் கைக்கோளால் தூரத்தே போகும்படி தள்ளுவான். இந்தக் காட்சியை நடித்துக்கொண்டிருந்த நடிகமணி உணர்ச்சி வசப்பட்டு பிள்ளையை கோலால் தள்ளியபோது பிள்ளை தட்டசீன் அருகே இருந்த இலங்கையர்கோனின் காலடியில் போய் வீழ்ந்தது. நாடகத்தை உணர்வு பூர்வமாக பார்த்துக் கொண்டிருந்த இலங்கையர்கோன் அடோ! பிள்ளையடா! இப்படித்தள்ளலாமா? என்று சத்தம் போட்டு தேம்பித் தேம்பி அழுதார். அவரின் சத்தம் ஒலிபெருக்கியில் கேட்டுவிட்டது. அவரை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்படி செய்தபோது அவர் தன் காரியாலய அறைக்குச் சென்று விட்டார். நாடகம் முடியும் வரை அவர் மேடைப் பக்கமே வரவில்லை. நாடகம் முடிந்ததும் நடிகமணி வீ.வீ.வைரமுத்து அவர்களையும், கலைஞர் சோகச்சோபித சொர்ணக் கவிக்குயில் வீ.கே. இரத்தினம் அவர்களையும் தன்னை வந்து சந்திக்கும் படி பியோன் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். இலங்கையர்கோன் அவர்கள் நாடகம் முடிந்ததும் நடிகமணியும், கலைஞரும், இலங்கையர்கோன் அவர்களின் காரியாலய அறைக்குச் சென்றார்கள். ஆகா! நீங்களா? வாருங்கள் வாருங்கள் என்னை அழ வைத்தீர்களா? உங்களுக்கு நல்ல தண்டனை தரப்போகிறேன் என்று கூறிய இலங்கையர்கோன் அவர்கள் பியோனைப் பார்த்து தம்பி! அந்த விலங்கைக் கொண்டு வா? இவர்கள் இருவரையும் ஒன்றுசேர பிணைத்துவிடு ''என்றார். பியோனும் மறு பேச்சில்லாமல் இருவரையும் விலங்கினால் பிணைத்து விட்டான். ''இருங்கள் வருகிறேன். என்றுவிட்டு இலங்கையர்கோன் அவர்கள் வெளியே சென்று விட்டார். வருவார்? வருவார்? என எதிர் பார்த்த போதும் இலங்கையர்கோன் அவர்கள் வரவில்லை. கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுக்கு கண்கள் கலக்கம் அடைந்து கண்ணீரும் வந்தது. நடிகமணி ஆறுதல் கூறியபோதும் இலங்கையர்கோனின் மீது ஆத்திரம் ஆத்திரமாகவே வந்தது. நேரமும் ஒரு மணித்தியாலத்தை கடந்த போது இலங்கையர்கோன் அவர்கள் ''உங்கள் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டீர்களென'' கூறியவாறு அவர்கள் இருவரோடும் பிணைத்திருந்த

விலங்கினை நீக்கிவிட்டு இருவரையும் ஆரத்தழுவி உங்கள் நடிப்பிற்கு முன்னால் நான் எங்கே உங்கள் குழுவினரையும் கூட்டிக் கொண்டு என் விடுதிக்கு வாருங்கள் "என்று கூறிவிட்டு முன்னோக்கி நடந்தார். குழுவினரோடு நடிகமணியும், கலைஞரும் அவர் பின்னால் சென்றார்கள் விடுதிக்குச் சென்ற அவர் அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களோடு நானும் ஒன்றுசேர அமர்ந்து இரவுப் போசனம் உண்டார்கள். அங்கே அவ்வூர்ப் பெண்கள் உணவு பரிமாறினார்கள். அவர்கள் கலைஞரைப் பார்ப்பதும் வெட்கப்பட்டு தலை குனிவதுமாக இருந்தார்கள். அப்பொழுது அதனைக் கவனித்த இலங்கையர்கோன் அவர்களைப் பார்த்து "அழுவதற்கும் , அழ வைப்பதற்கும் கலைஞர் சோபச்சோபித சொர்ண கவிக்குயில் வி.கே.இரத்தினம் போல் உங்களால் முடியாது" என்றார். அவர்களில் ஒருத்தி அவரைப் பார்த்து ஐயா! குடத்தை இடுப்பில் கொண்டு வரும் அழகையும் இறந்துபோன குழந்தைக்காக மார்பில் தன் கைகளால் அடித்து அழுவதையும் எங்களால் அபிநயிக்க முடியாது. "என்றாள் எப்படி இரத்தினம் உன்னைப் பற்றி அவர்கள் கூறுவதை பார்த்தாயா? உன் பாடு வெற்றிதான்" என்று கூறிச் சிரித்தார்.

மறுநாட் காலை நாடகக் குழுவினரின் வாகனத்தில் தானும் வருவதாகச் சொல்லி யாருடைய பதிலையும் எதிர்பாராமல் முன் சீற்றில் அமர்ந்து கொண்டு நடிகமணி அவர்களையும் கூப்பிட்டார். எல்லோரும் ஏறியபோது கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் இருப்பதற்கு இடம் இருக்கவில்லை. முன்சீற்றில் அமர்ந்திருந்த இலங்கையர்கோன் கலைஞர் வி.கே.இரத்தினத்தை தன் மடியில் இருத்தி பிரயாணத்தை மேற்கொண்டார். யாழ்ப்பாணம் செல்லும் வரை இந்நிலை தொடர்ந்தது.

கையில் விலங்கிட்டதும் தங்களோடு சேர்ந்து உணவு உண்டு மகிழ்ந்ததும் யாழ்ப்பாணம் செல்லும் வரை தன்னை மடிமீது அமரச் செய்து பிரயாணம் செய்ததும் வழியில் இறங்கிய இடமெல்லாம் தன் செலவில் எமக்கு எல்லாம் செய்ததும் உயர் அதிகாரியான இலங்கையர் கோனின் இச்செய்கையானது என் வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாத நிகழ்ச்சியாகும் என கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் சொன்னார்.

## மலர் மணம் 32

# பாரம் பரிய கலைப்பண்பாட்டுக் கழகம்.

இக் கழகமானது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கலை நிகழ்வுகளை ஒன்று திரட்டி பாரம்பரியமாக காப்பாற்றப்பட்டு வரும் இக்கலை வடிவங்களுக்கு புத்துயிர் ஊட்டுவதும் புதிய கலைஞர்கள் எமது மண்ணின் பாரம்பரிய இக்கலைகளை அழிய விடாது பேணிப்பாதுகாத்து வர வேண்டும் என்னும் நோக்கையும் இக்கலை வடிவங்களை மக்கள் முன் செயற்படுத்தி நின்ற சாதனையாளர்களை அவர் தம் செயற்பாடுகளை மக்கள் முன் நிறுத்தி முன்னேற்றப் பாதையில் வளரும் சமுதாயத்தை இட்டுச் செல்வதுமேயாகும்.

இக்கழகத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் திரு.செல்லையா மெற்றாஸ்மெயில் அவர்களின் பெருமுயற்சியே இப் பணியை மேற் கொள்ள உந்து சக்தியாக இருந்தது. கல்வித் திணைக்களகத்தில் கடமை புரியும் இவர் ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞர் 'பாம்பின் கால் பாம் பறியும்'' என்பார்கள். கலைஞர்களின் உள்ளக்கிடக்கையை ஒரு நல்ல கலைஞரால் தான் அளவிட்டுப் பார்க்க முடியும். அந்த வகையிலேயே திரு.செல்லையா மெற்றாஸ்மெயில் அவர்கள் செயற்பட்டுள்ளார். இவர் தனது அரச பணியோடு யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மூலை முடுக்குகளுக்கு எல்லாம் சென்று மரணத்தின் விழும்பிலே வயோதிபத்தின் கடைசி எல்லையிலே வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மண்ணின் கலை வடிவங்களை வெளிக்கொணர்ந்து எதுவும் செய்ய முடியாதிருந்த கலைஞர்களை இன்றைய சமுதாயத்தின் முன்நிறுத்தி அவர்களுக்கு தலையிலே கிரீடம் சூட்டி பொன்னாடை போர்த்தி பண முடிப்பு வழங்கி இந்த உலகம் அறியும் வகை செய்தார்.

அவற்றோடு நின்று விடாமல் அவர்களின் கலைச் சேவையை ஆவனபடுத்தி நூல் வடிவமாக்கி இன்றைய தலைமுறையினரிடம் கையளித்துள்ளார். இன்றும் எம் மத்தியிலே சிலர் இருக்கின்றார்கள். இப்படியெல்லாம் செய்வது அவசியம் தானா? எனக் கேட்பவர்கள் அவர்கள் ஒன்றை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இயல், இசை, நாடகம் தான் எம் தமிழின் வடிவம். எங்கள் இறைவனே ஒரு கூத்தன் அதனால்த் தான் ''நாடகமும் அரங்கியலும்'' இன்று உயர் தர வகுப்பு மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஒரு பாடமாக புகுத்தப்பட்டுள்ளது. கலைப்பிரிவில் படிக்கும் மாணவன் தமிலையோ, அல்லது நாடகமும் அரங்கியல் என்னும் பாடத்தையோ கட்டாயம் கற்க வேண்டும். சுய சிந்தனைக்கு மொழியறிவு மிக முக்கியமானது இதனைக் கருத்தில் கொண்டே திரு செல்லையா மெட்ராஸ் மெயில் போன்றவர்கள் முயற்சித்து செயற்பட்டு வருகிறார்கள். அவரின் இந்த முயற்சியால் கலைஞர்



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடாத்திய மகுடம் சூட்டு விழாவில் வனபிதா பி.எம்.இம்மனுவல் அடிகளார் கலைஞர்.வி.கே.இரத்தினம் அவர்களுக்கு மகுடம் சூட்டுகின்றார்.

வி.கே. இரத்தினம் மட்டுமல்ல எத்தனையோ ஏழைக் கலைஞர்களைக் கூட தமிழுலகம் அறிந்திருக்கிறது.

கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் உயிரோடு இருந்தமையால் பல தகவல்களைப் பெற முடிந்தது. அதனால் இந்த நூலானது பல உண்மைச் சம்பவங்களை எதிர்காலச் சந்ததியினருக்கு சொல்லிக் கொண்டே இருக்கப் போகின்றது. இந்த நூலினை நான் எழுதி முடிந்து ஆசியுரை, வாழ்த்துரை, முகவுரை, அணிந்துரை, பெற முற்பட்டபோது "தம்பி! இந்நூலுக்கு என்னைப் பாராட்டிக் கௌரவித்த திரு.மெட்ராஸ்மெயில் அவர்களிடமும் கட்டாயம் வாழ்த்துரை வாங்கும்படி கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் கூறியதை என்னால் மறக்க முடியவில்லை.

## மலர் மணம் 33

## நிறைவுரை.

சாதாரண மனிதனாகப் பிறப்பவன் உலகில் வாழ்வில் தான் மேற்கொள்ளும் சாதனைகளால் மற்றவர்களால் மதிக்கப்படுகிறான். "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார் வள்ளுவர் பெருந்தகை. கலைஞர் சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் வி.கே.இரத்தினம் அவர்கள் மரபு வழி இசை நாடகத்தின் மூலம் ஈழத்து வரலாற்றில் புகழ் பெற்ற ஒருவராகத் திகழ்கிறார். கல்வியியல் துறையில் இன்று பல மாற்றங்கள் கொண்டுவரப் பட்டன.

முதுபெரும் தமிழ்ப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறுவது போல "தமிழ் நாடகவியல் இன்று கற்கை நெறியாகியுள்ளது. பல்கலைக்கழக புகுமுக வகுப்பு முதல் பட்டப் பின் படிப்புகள் வரை நாடகமும் அரங்கியலும் இன்று ஊன்றிப் படிக்கப்படும் ஆய்வுத்துறையாகியுள்ளது" இந்த வகையில் மருத்தவத் துறையில் படிக்கும் ஒரு மாணவன் உடம்பின் சகல பாகங்களையும் தனித்தனியே பிரித்து ஆய்வு செய்வது போல நாடகக் கலை பற்றியும் ஆய்வினை மேற்கொள்ளும் பொழுது நாடக்க கலையின் தன்மை, நாடக்க கலையின் வரலாறு, ஒப்பனை, இசை, ஆடல், பாடல், வசன அமைப்பு கலைஞனின் அரங்கச் செயற்பாடு, அரங்க அமைப்பு ஆகியன துல்லியமாக ஆராயப்பட வேண்டும்.

சிங்கள நாடகக் கலை சம்பந்தமான பலதரப்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் எங்கள் தமிழ் நாடகக்கலை பற்றி வெளிவரும் நூல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. ஒரு கலைஞரின் மேடைச் செயற்பாடுகளே அவன் சொல்ல வந்த விடயத்தை மக்களின் மனதில் பதிய வைக்கின்றது. இத்தருணத்தில் காலம் சென்ற பிரபல எழுத்தாளர் கே.டானியல் அவர்கள் வெளியிட்ட கருத்தினை இங்கு தெரியத் தருவது நல்லதென நினைக்கிறேன். "நடிகர் வி.கே.இரத்தினம் அவர்கள் பழைய நாடக வடிவத்திற்குள் நின்றே பெண்மையின் மகோன்னத மென் உணர்வு இழைகளை வெளிக்கொண்டு வருவதன் சித்து விளையாட்டினை செய்து காட்டியதன் மூலம் சாதனைகளை நிலை நாட்டியவர். அரிச்சந்திரன் நினைவுக்கு வரும்போது நடிகமணி வைரமுத்து கண்ணுக்கு முன்னே வருவதுபோல சந்திரமதி நினைவுக்கு வரும்போது கலைஞர் வி.கே.இரத்தினம் கண்ணுக்கு முன்னே வருவார்கள்" அரங்கினில் அவர்களால் வெளிப்படுத்தப்பட்ட உணர்வு பூர்வமான செயற்பாடே இவ்விதம் கூறப்பட்டமைக்குக் காரணமாகும்.

எனவே தான் அத்தகைய கலைஞர்களின் நாடக அனுபவ வரலாறுகள் நூல்களாக்கப்பட வேண்டும். இந்த வகையில் "நடிகமணி வீ.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்" என்னும் நூல் மிக அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்டது. இந்நூலைக் காரை.செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் மிக அழகுற வடிவமைத்து வெளியீடு செய்தார். அந்த வகையில் கலைஞர் சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் வீ.கே. இரத்தினம் அவர்கள் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களோடு இணைந்து இரண்டாயிரத்துக்குமதிகமான அரங்குகளில் தோன்றி நடித்து மரபுவழி இசைநாடகத்திற்கு மெருகேற்றியுள்ளோன். ஆண்கள் ஆண் கதாபாத்திரத்தில் நடிப்பது சுலபம். பெண் பாத்திரத்தை ஏற்று நடிப்பதனால் ஒப்பனை அழகு, நளினம், சுபாவம், குரல்வள அமைப்பு, சொற் பிரயோகம் இவையனைத்தும் ஒருங்கே சேரப் பெற வேண்டும். இல்லாது போனால் அரங்கத்தில் ஆவலப்பட வேண்டிய நிலை ஏற்படும். கூக்குரலும், கல்லெறியும் கூடத் தேடி வரலாம்.

பெண் பாத்திரதின் சகல அம்சங்களும் நிறையப் பெற்று ஏற்றுக் கொண்ட பாத்திரத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தி மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற, இன்றும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களின் நாடக, நட்டுவாங்க அனுபவங்களைத் தொகுத்து நூலுருவில் கொண்டுவரும் அளப்பரிய பணி எனக்குக் கிடைத்தமையையிட்டு பெருமிதமும், பெருமகிழ்ச்சியுமடைகிறேன். காலத்தால் அழிக்க முடியாத கலைஞன் சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில் வி.கே.இரத்தினம் அவர்கள் எதிர்காலத்திற்குப் பல இசைநாடகக் கலையை முடக்கிவிடாமல் எதிர்கால சந்ததியினர் இசைநாடக

வடிவத்தை இன்னம் புதிய வடிவத்தில் ஆக்கி மக்கள் முன் சமர்ப்பிக்க முன்வருதல் வேண்டும்.

உலகம் நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்றது. அரங்கினில் பார்த்துக் களித்தனவற்றை வீட்டினில் இருந்தவாறு பார்த்துக் களிக்கக் கூடியவகையில் விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. காலத்திற்கேற்ப கலாச்சார பண்பாடுகள் மாறாமல் நாடகக் கலையை புதுமைகளைப் புகுத்திச் செயற்படுவதே இறுதிக் காலத்தை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கம் கலைஞர்களுக்கும், மறைந்துபோன கலைஞர்களுக்கும் எம்மால் செய்யக் கூடிய கைங்கரியமாகும்.

*காட்சியினால் கற்பனையால் காவியத்தால் கைத்திறனால்*
*ஆட்சிபெறு நடிகையான இரத்தினமே மாட்சிநிறை*
*கலையன்னை துணையாகத் தொகையான மேடைகளின்*
*நிலைகண்டீர் நீள்புகழைக் கொண்டு।*

*குறைவிலாக் கலை விளங்க கூத்துடன் இசை விளங்க*
*நிறையெனுந் திருவிளங்க நின்புகழ் ஓங்கி நிற்க*
*உறைபதிப் பெயர் விளங்க உரவர் போற்றி மெச்ச*
*இறையருள் ஏத்து கின்ற கதிர் காம(ர்) இரத்தினமே।*

நின்புகழ் நீடு வாழ்க அன்னை கலைமகள் துணையிருப்பாள்

நல்லறிஞர் நாவிலிருந்து ..........................

நல்ல இசை நாடக நடிகராகவும், அண்ணாவியாராகவும் இயக்குனராகவும் திகழும் திரு.வி.கே.இரத்தினம் தமது கலைமரபை அடுத்த தலைமுறையினர்க்குச் செவ்வாயாகக் கையளித்துள்ளார்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராசா அவர்கள்
முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

எமது திருமறைக் கலாமன்ற இசைநாடகப் பிரிவில் ஆரம்பத்தில் ஒரு முக்கிய ஆலோசகராக இருந்ததுடன் குறிப்பாக எமது "ஞான சௌந்தரி" எனும் இசைநாடக ஒத்திகையின் பொழுது இசைப்பயிற்சியாளராகவும் தன் பங்களிப்பை நல்கியவர்.

திரு யோ.யோன்சன் ராஜ்குமார் அவர்கள்
பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்.

*MrRatnam Comes from a family of artists. most of his family members han been taking active part in Drama and music. Mr. Ratnam is still a member of Kalaimagal Nadaka saba which for more than 30 years has been contributing to the development drama and cullture in Jaffna.*

professor A. Sanmugadas
B.A.(Cey) ph. D(Edinburgh)
Dean of the faculty of Arts
University of Jaffna .

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு கதிர்காமு இரத்தினம் கலைப்பரம்பரையைச் சேர்ந்த ஒரு இசை நாடகக் கலைஞராவார். இன்று யாழ்ப்பாணத்தில் சந்திரமதி இரத்தினம் என்றால் எவருக்கம் தெரியும் அந்தளவில் பெண் பாத்திரமேற்று பல பாராட்டுக்களைப் பெற்றதுடன் முத்திரையும் பதித்துள்ளார்.

செல்லையா மெட்றாஸ்மயில் அவர்கள்
செயலாளர், பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக்கழகம், நல்லூர்- யாழ்ப்பாணம்

திரு. வி.கே.இரத்தினம் அவர்கள் பெண் வேடம் ஏற்று பாட நடிப்பதில் புகழ்பெற்றவர். வள்ளி, அல்லி, சாவித்திரி, சந்திரமதி பவளக்கொடி, ஞானசௌந்தரி, சித்திராங்கனி, இவை நடித்த பாத்திரங்களில் சில. நடிகமணி வி.வி.வைரமுத்துவுடன் பல நாடகங்களில் பங்குபற்றி நாடகங்களைச் சிறப்புறச் செய்தவர். சிறந்த இசை நாடக நெறியாளரான இவர் எமது மன்ற நிர்வாக உறுப்பினராக இருப்பது மட்டுமல்லாது, மன்றம் நடாத்துகின்ற நாடக மேடைப் பாடல் வகுப்புகளில் பங்கு கொண்டு பயிற்சியளித்து வருகின்றார்.

கலாநிதி க.மோகனதாஸ் அவர்கள்
விவசாய பீடம், யாழ்-பல்கலைக்கழகம்.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பார்கள் அது போன்றதுதான் எனக்கும் நாடகக்கலை வல்லுனர் இரத்தினம் அவர்களுக்கும் உள்ள தொடர்பாகும். நாட்டியக் கலையை வளர்ந்துவரும் எது கலையரங்கத்தை மிகச் சிறப்பான முறையில் அமைத்துத் தந்தவர் நடிகர் இரத்தினமாகும். கட்டடக் கலைத்துறையில் எவ்வளவு சிறப்புடன் திகழ்கிறாரோ, அதைவிட உயர்ந்து நடிப்புத் துறையிலும், இசைத்துறையிலும் விளங்குகிறார். வானொலியில் இவருடைய இசை நாடகத்தைக் கேட்டும், மேடைகளில் இவரின் நடிப்பின் திறனைப் பார்த்தும் இருக்கிறேன். என்ன கதாபாத்திரமேற்று நடிக்க வந்தாலும் அதே கதாபாத்திரமாக மாறி பார்ப்போர் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொள்ளும் தனியாற்றல் இவருக்குண்டு.

திருமதி ஞானமணி செல்லையா
நடன ஆசிரியை, பாரதி கலாமன்றம்
திருநெல்வேலி

நடிகர் இரத்தினம் அவர்கள் பழைய நாடக வடிவத்துக்குள் நி[illegible] பெண்மையின் மகோன்னத மென் உணர்வு இழை வெளிக்கொண்டு வருவதன் சிந்து விளையாட்டினைச் [illegible] காட்டியதன் மூலம் சாதனைகளை நிலை நாட்டியவர். அரிச்சந்[illegible] நினைவுக்கு வரும்போது நடிகமணி வைரமுத்து கண்ணுக்கு மு[illegible] வருவதைப்போல, சந்திரமதி நினைவுக்கு வரும்போது இரத்[illegible] கண்ணுக்கு முன்னே வருவார்கள். அத்தனை தூரத்திற்கு [illegible] மேடையை ஆட்சி புரிபவர் - புரிந்தவர்.

காலம் சென்ற பிரபல எழுத்தாள[illegible]
கே.டானியல் அவர்கள்

நாடகத்துறையில் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் கொண்ட ஆர்வத்தினால் இளம் சந்ததியினருக்கு பயிற்சி கொடுத்து ஐம்பதுக்கும் மேலான நாடகங்களை ஆளுமையும் செய்துள்ளார்.- செய்கின்றார்..

நா.இராமலிங்கம்
சமாதான நீதிபதி, ஓய்வு பெற்ற
தலைமை ஆசிரியா.
அரியாலை.யாழ்ப்பாணம்.

## கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்த பெரியார்கள்

1. காலம் சென்ற பேராசிரியர், துணைவேந்தர் சு.வித்தியானந்தன் அவர்கள்
2. முதுபெரும் தமிழ்ப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்
3. காலம் சென்ற கலைப்பேரரசு சொர்ணலிங்கம் அவர்கள்
4. காலம் சென்ற நிர்வாக அதிகாரி இலங்கையர்கோன் சிவஞானசுந்தரம் அவர்கள்
5. காலம் சென்ற கலாஜோதி சண்முகநாதன் (சானா) அவர்கள்
6. முகாந்திரம் மகேந்திரன் அவர்கள்
7. காலம் சென்ற சுபத்திரை ஆழ்வார் அவர்கள்
8. தென்னிந்திய, திரைப்பட நடிகர் ''குலதெய்வம்'' மல்லியம் இராஜகோபால் அவர்கள்.

## மேடையேறிய பிரபல்யமான அரங்குகள்

1. கண்டி புஸ்பதான மண்டபம்
2. பேராதனை சர்வகலாசாலை மண்டபம்
3. கொழும்பு சைவ மங்கையர் கழகம்
4. லும்பினி மண்டபம்
5. லயனல் மண்டபம்
6. இலங்கை வானொலி நிலைய மண்டபம்
7. திருமலை கணேசன் தியேட்டர்.

## நெறியாள்கை செய்த நாடகங்கள்

1. அரிச்சந்திர மயான காண்டம்
2. சறீ வள்ளி
3. சத்தியவான் சாவித்திரி
4. பாமா விஜயம்
5. சூழ்ச்சி வலை
6. ஞான சௌந்தரி
7. பக்த பிரகலாதா
8. சாரங்காதாரா

9. ஏழுபிள்ளை நல்லதங்காள்
10. பக்தநந்தனார்
11. பூதத்தம்பி
12. அல்லி அருச்சுனா
13. பண்டாரவன்னியன்
14. கோவலன் கண்ணகி
15. ஆரியமாலா
16. காத்தவராஜன்
17. கற்பனைச் சரித்திர நாடகங்கள் (சில)

## நடித்த மரபுவழி இசைநாடகங்களும் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களும்

1. அரிச்சந்திர மயானகாண்டம் - சந்திரமதி
2. சத்தியவான் சாவித்திரி - சாவித்திரி
3. கோவலன் கண்ணகி - கண்ணகி, மாதவி
4. ஞானசௌந்தரி - ஞானசௌந்தரி, லேனாள்
5. எழுபிள்ளை நல்லதங்காள் - நல்லதங்காள், மூளி அலங்காரி
6. ஸ்ரீவள்ளி - வள்ளி, நாரதன். விருத்தன்
7. சதிநந்தாவதி - நந்தாவதி
8. ஆரியமாலா - ஆரியமாலா
9. அல்லி அருச்சுனா - அல்லி
10. பவளக்கொடி - பவளக்கொடி
11. சாரங்காதாரா - சித்திராங்கி
12. பாமாவிஜயம் - நாரதர், பாமா, ருக்மணி
13. திருவிளையாடல் - ஔவையார்
14. பக்தநந்தனார் - நந்தனார்
15. பூதத்தம்பி - அழகவல்லி

## நடித்த கற்பனைச் சரித்திர நாடகம்

1. பதவி மோகம்
2. சகோதர விரோதி
3. கன்னிக்கோட்டை
4. வாழ்க்கைப்போர்
5. நவீன சத்தியகுமார்
6. சூழ்ச்சியின் வீழ்ச்சி

கலைஞர் வீ.கெ.இரத்தினம் அவர்களின் வாரிசுகளின் கலைச் செயற்பாடு.

பிள்ளைகள்:-

1. வைகுந்தவாசன் - ஓவியம்
2. திருமதி இரஞ்சினதேவி வரதராசா - நாடகம்
3. திருமதி கமலினிதேவி நேத்திரானந்தம் - நாடகம், பாடல்
4. வசந்தவாசன் - ஓவியம், நாடகம்
5. வதனவாசன் - ஓவியம், சாரங்கா இசைக்குழு அமைப்பாளர்.
6. திருமதி இராகினி அன்பரசன் - நாடகம்.

பேரப்பிள்ளைகள் :-

1. வ.பானுதீபன் - வாத்தியம்
2. வ.தேனுகா - சங்கீதம்
3. வ.சுவர்ணகீதன் - வாத்தியம்
4. வை.ரஜீதா - ஓவியம்

"இணைந்து நடித்த நடிகர்கள்"

1. நடிகமணி வி.வி.வைரமுத்து
2. கலாவினோதன் அண்ணாச்சாமி
3. சோதிடர் தம்பையா
4. அரியாலையூர் கவிஞர் கே.வி.ஐயாத்துரை
5. கலாபூசணம் வி.கே.பாலசிங்கம்
6. நடிப்பிசைத் திலகம் வி.செல்வரத்தினம்
7. வி.கே.செல்லத்தம்பி
8. எம்.திருநாவுக்கரசு (ஆர்மோனியச்சக்கரவர்த்தி)
9. அடங்காப்பிடாரி சி.சிவநேசன்
10. வி.என்.செல்வராசா
11. வதிரி என்.திரவியம்
12. இணுவில் கனகரத்தினம்

13. கோண்டாவில் பொன்னுத்துரை
14. கரவெட்டி வி.நற்குணம்
15. வி.மார்க்கண்டு
16. ம.பொ.தைரியநாதன்
17. பக்கிரி சின்னத்துரை
18. குருநகர் இராசு
19. ஆரியகுளம் நடேசு
20. கலட்டி அண்ணாவியார் கணபதிப்பிள்ளை
21. த.ஜயாத்துரை தேவரையாளி
22. பி.சண்முகலிங்கம்
23. வட்டுக்கோட்டை உருத்திராபதி
24. காலம் சென்ற குழந்தைவேல்
25. எஸ்.செல்வராசா
26. சிதம்பரம் செல்வராசா

## வழங்கப்பட்ட பராட்டுக்களும் பட்டங்களும்

1. 1963ம் ஆண்டு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபரால் பாராட்டி பொன்னாடை போர்த்தி "சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

2. 1966ல் அரியாலை ஸ்ரீகலைமகள் நாடக சபாவினர் எடுத்த பாராட்டு விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.என் நவரத்தினம் அவர்களால் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

3. 1963ம் ஆண்டு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபரால் பாராட்டி பொன்னாடை போர்த்தி "சோகச் சோபித சொர்ணக் கவிக்குயில்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

3. அரியாலை சனசமூக நிலைய வெள்ளிவிழாவின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

4. நெடுங்கேணி திறந்த வெளி அரங்கில் நிகழ்ந்த நாடக விழாவில் இலங்கையர்கோன் திரு.சிவஞானசுந்தரம் அவர்களால் பாராட்டப்பட்டது.

5. கண்டி புஸ்பதான மண்டபம், ஓம்பினி மண்டபம், லயனல்வென்ட் மண்டபம் ஆகியவற்றில் சிங்களக் கலைஞர்களின் பாராட்டுதலைப் பெற்றது.

6. கண்டி பேராதனை மண்டபத்தில் துணைவேந்தர் சு.வித்தியானந்தன் அவர்களால் பாராட்டப்பட்டது.

7. அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையம் 1984ல் எடுத்த "கலைப்புகழ் விழாவில்" கௌரவிக்கப்பட்டது.

6. யாழ் - திறந்தவெளி அரங்கில் தென்னிந்திய திரைப்பட நடிகர் குல தெய்வம் இராஜகோபால் அவர்களால் "ஈழத்துக் கண்ணாம்பாள்" என வர்ணித்துப் பாராட்டப்பட்டது.

7. அரியாலை காந்தி சனசமூக நிலைய வெள்ளிவிழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது.

8. 1993ல் சுதேசி திருநாட்கொண்டாட்ட விழாவில் "பண்டாரவன்னியன்" கதையை இசைநாடகமாக நட்டுவாங்கம் செய்து மேடையேற்றியமைக்காக முதுபெரும் தமிழ்ப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களால் பாராட்டப்பட்டது.

ஆய்வுக்கு உதவிய உசாத்துணை நூல்களும் தகவல் தந்தோரும்.

1. யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும், காலமும்

2. கலைப்புகழ் விழா மலர் அரியாலை ஸ்ரீகலைமகள் ச.ச.நிலையம்

3. அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட பவள விழாமலர்

4. நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்

5. சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாடல்கள்.

# கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்களுடன் நேர்காணல் மூலம் பெற்ற தகவல்கள்.

## தகவல் தந்துதவிய மற்றையவர்கள்.

1. தேவரையாளி திரு.த ஜயாத்துரை
2. காலஞ்சென்ற கவிஞர் க.வே..ஜயாத்துரை
3. கலாபூசணம் வி.கெ.பாலசிங்கம் ஆசிரியர்
4. திரு.வி.கே.சுப்பிரமணியம்,

   திரு.வி.கே.செல்லத்தம்பி
5. காலம் சென்ற என் தந்தையார் செ.சிவநாமம்
6. திரு.ஜயாத்துரை ஜீவதாசன்
7. திரு.நா.இராமலிங்கம் ஓய்வு பெற்ற தலைமை

   ஆசிரியர், சமாதான நீதிபதி.
8. திருமதி. கலாமாலினி சிவாநந்தன்
9. காலம் சென்ற கவிஞர் வி.கே.ஜயாத்துரை

   அவர்களின் தினக் குறிப்புகள்.

ளுடன்
ள்.

ரை
பர்

நாமம்

லைமை

ரை

## அரியாலையூர் தந்த அரியதோர் எழுத்தாளர்

# திரு.சி.சிவதாசன்



இவர் யாழ்ப்பாணம் அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது கலாசாலை வாழ்க்கையில் யாழ்-கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தை கவிதைகளாலும், கதைகளாலும், பேச்சுத்திறனாலும் அலங்கரித்தவர். இவர் தமது கல்லூரிக் காலத்திலேயே கலையில் ஈடுபாடு கொண்டு இன்றுவரை நிலைத்து நின்று மிளிர்கின்றார். விற்பனை அபிவிருத்தித் திணைக்கள முகாமையாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றவர் இவருடைய கவிதைகள் *வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, உதயன், சஞ்சீவி, சிந்தாமணி, தினபதி, மித்திரன்* ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன.

இவரது கதைகள் வீரகேசரியில் பிரசுரமாகி இருக்கின்றன. 'அதிசயப்பறவை'' என்ற சிறுவர்நவீனம் 1996ம் ஆண்டு வீரகேசரியில் இருபத்தைந்து வாரங்கள் வெளியாகின.

"வேப்பமரத்துப்பேய் என்ற சிறுவர் நவீனம் நூலுருவில்'' வரதர் வெளியீடாக சிறப்புற வெளிவந்தது. இவ்வாறான சிறப்பான ஆக்கமும், ஊக்கமும் கொண்ட எழுத்தாளர் இன்று ஒரு பெரும் பாரம்பரிய பணியைச் செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். அதாவது இசைநாடகத்துறையில் மிகச்சிறப்பிடம் பெற்று பெண்வேடம் தரித்து நடிக்கும் சிறந்த ஆண்மகனாகக் ஈழத்து நாடக வரலாற்றில் முத்திரை பதித்த வி.கே. இரத்தினம் அவர்களது கலைச் சிறப்புகள் பொதிந்த "இசைநாடகக் கவிக்குயில் வி.கே.இரத்தினம்'' என்ற நூலை ஆக்கித்தந்த திரு.சி.சிவதாசன் ஈழத்து இலக்கிய வரலாற்றிற்கு அரும்பொக்கிசமொன்றை அளித்துள்ளார். இவர் சேவையும் பணியும் ஆக்கங்களும் மென்மேலும் வளர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**திருமதி மீரா அருள்நேசன்**

பிரதிக் கல்விப்பணிப்பாளர்,

(கல்வி அபிவிருத்தி)

வலயக்கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.